Dr. லில்லியன் ஸ்டான்லி

# பசங்க... பொண்ணுங்க...

வாலிபர் நங்கையர்க்கு
முத்தான சத்தியங்கள்



# பசங்க... பொண்ணுங்க...

**Dr. லில்லியன் ஸ்டான்லி,** MBBS, DCH.
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர் :*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org

**GIRLS & GUYS** (Tamil)

Copyright 2010 Lilian Stanley

First Edition: January 2010

Printed by
Nagaraj and Company Private Limited
156 Developed Plots Industrial Estate
Perungudi, Chennai 600 096

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வாழ்க்கை வாழ்வதற்கே! | ... | 5 |
| 2. | குருட்டுக் கல்யாணம்! | ... | 18 |
| 3. | இயேசுவுக்காய் சூப்பர் வாலிபர்! | ... | 24 |
| 4. | திருப்பம்! | ... | 35 |
| 5. | மகனே, மகனே! | ... | 37 |
| 6. | திருமணப் பரிசு! | ... | 44 |
| 7. | சொல்லதில் கூறுவீர், வாழ்வதில் சாதிப்பீர்! | ... | 47 |
| 8. | அனைத்தும் நன்மைக்கே! | ... | 62 |
| 9. | சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி! | ... | 64 |
| 10. | இந்த ஜாதிப் பிசாசு! | ... | 72 |
| 11. | இளைஞர் சுமக்கும் சிலுவைகள் | ... | 75 |
| 12. | தோல்வியா? | ... | 84 |
| 13. | நங்கையர் கேட்பவை | ... | 87 |
| 14. | முதுகெலும்புண்டோ? | ... | 100 |
| 15. | தரிசனமுள்ள வாலிபர்! | ... | 103 |
| 16. | படித்தால் மட்டும் போதுமா? | ... | 109 |
| 17. | பரீட்சைக்குமுன் கேள்விகள் | ... | 111 |
| 18. | பெண்ணா, பேயா? | ... | 114 |





# நன்றி

இப்புத்தகத்தை வெளியிட அருள்புரிந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். மணிக்கணக்காய் தட்டச்சு செய்து, தனது பெலவீனங்களையும் பொருட்படுத்தாது, சளைக்காமல் திருத்தங் களைச் செய்து அச்சகத்திலிருந்து புத்தகம் வெளிவர எல்லா விதத்திலும் ஒத்துழைத்த மிஷனரி K. குணசேகரன் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் கடன்பட்டிருக்கும் இன்னொரு நபர், மெட்ராஸ் கிறிஸ்தவப் பள்ளியில் காமர்ஸ் ஆசிரியராகப் பணிபுரியும் திரு. பெனடிக்ட் அவர்கள். எல்லாக் கட்டுரைகளுக்கும் ஏற்ற, சிந்தனையைத் தூண்டக்கூடிய படங்களை அனுப்பித் தந்தார். இதுவரை வெளியான எனது எல்லாப் புத்தகங்களுக்கும் தனது மிகுந்த வேலையின் மத்தியிலும் அட்டைப் படம் வடிவமைத்ததோடு, எல்லா உதவிகளையும் செய்த எனதருமைக் கணவருக்கு நன்றிகள் பல. இப்புத்தகம் உங்கள் கரங்களில் தவழக் காரணமாயிருந்த இவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்!

***லில்லியன் ஸ்டான்லி***



❶

# வாழ்க்கை வாழ்வதற்கே!

ஆம்! வாழ்க்கை வாழ்வதற்கே. வாழப் பிறந்தவர்கள் நாம்! பல வாலிபர் சாகவே பிறந்தோம் என்ற தப்பெண்ணம் கொண்டுள்ளனர். இந்த எண்ணத்தோடு வாழ்வதே அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் சாகடிக்கும். வாழ்க்கை என்பது கடவுளின் நிர்மலமான ஈவு. அகில உலகையும் சிருஷ்டித்த ஆண்டவர் தான் படைத்ததைச் சுற்றிப்பார்த்து, ''ஆகா, படுசூப்பர்'' என்று கைதட்டினார் (ஆதி 1:31). ஆகவே வாழ்க்கை தேவனது வரப்பிரசாதம். அதை மதித்து முழுமையாய் வாழவேண்டும். அதைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடாதீர்கள். கசக்கி எறியப்பட்டு வீணாய்ப்போன வாழ்க்கைகளைக் குறித்து செய்தித்தாளில் வாசிக்கும்போது தொண்டை அடைக்கிறது. வாழ்வைச் சிறப்பாய்ப் பயன்படுத்தவேண்டும். வாழ்வின் விக்கல்களையும் விக்கினங்களையும் முகமுகமாய்ச் சந்திக்க நமக்கு உரமிருக்கவேண்டும். நாம் வாழவேப் பிறந்தவர்கள் என்பதில் சந்தேகமுண்டோ ? எழுந்து நின்று குதித்து, ''நான் வாழவேப் பிறந்தேன், வாழ்க்கை வாழ்வதற்கே'' என்று கூக்குரலிடுங்கள்.

இருந்தாலும், வாழ்க்கை கடினமென்பதை மறுக்க முடியாது. ''மனிதன் அநேக வருடங்கள் வாழ்ந்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்'' (பிர 11:8). களிமண்ணை இறுகச் செய்யும் சூரியன்தான் மெழுகையும் இளகச் செய்கிறது. வாழ்க்கையின் கொடுமைகளால் நாம் இறுகியும் போகலாம், இளகியும் வாழலாம்.

இயேசு சொன்னார், ''நான் அவைகளுக்கு **வாழ்வு** கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' (யோ 10:10). சாத்தானோ திருடவும் கொல்லவும்



நாசமாக்கவும் வருகிறான். தேவனோடு கை கோர்த்து நடப்போமானால் பரிபூரண வாழ்வை அனுபவிப்போம். சாத்தானோடு வாக்கிங் போனால் ஆட்டத்தை இழந்து நாசமாகி செத்துப்போவோம். வாழ்க்கைப் பாதையைச் சுட்டிக் காட்டும் வழிகாட்டிக் கம்பம் வேதமே. மகிழ்வாழ்விற்கு அது வரையறுக்கும் சில தத்துவங்களைக் காண்போம்.

### *1. வசனத்தின்படி வாழுங்கள்.*

*''மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் **பிழைப்பான்**''* (மத் 4:4).

சாப்பாடு இல்லாவிட்டால் செத்துப்போவோம் என்பது பலரது தப்பபிப்ராயம். ஆகவே இந்த ஒரு ஜாண் வயிற்றிற்காக வாழ்க்கை முழுவதையும் செலவழிக் கிறார்கள். இயேசு கற்பித்ததோ வேறு. மார்த்தாள் வாழ்க்கைக்கு வேண்டிய அப்பத்தை தயாரித்துக் கொண்டிருந்தாள்; மரியாளோ வாழ்வைத் தரும் அப்பத்தை சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். இரண்டாவதையே இயேசு வலியுறுத்தினார். ''தேவையானது ஒன்றே'' என்றார் (லூக் 10:42). எப்படி ? நீங்கள் பட்டினியாயிருந்து மரித்து, பரலோகம் போகலாம். ஆனால் வெறுமனே சாப்பிட்டு, வாழ்ந்து சொர்க்கலோகத்திற்குள் நுழைந்துவிட முடியாது. அதுவே பணக்காரன்-லாசரு கதை.

''**வாழ்வளிக்கும்** அப்பம் நானே'' என்றார் இயேசு (யோ 6:35, 48-50). வார்த்தையானது மாமிசமாயிற்று. அவர்தான் வார்த்தை. வார்த்தையைப் புசித்து வாழுங்கள். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்து மரித்துப்போனார்கள். ஆனால் ஜீவ அப்பத்தைப் புசிப்பீர்களானால் என்றென்றுமாய் வாழுவீர்கள்.

ரொம்ப நல்லது. இந்த உணவைத்தான் உண்ணுவோம். ஆனால் அது எங்கே ? இந்த அற்புத உணவை நமக்குத் தருவது யார் ? இது தூர இடத்திலிருந்து இறக்குமதியாகும் மாய மன்னாவல்ல. நீல வானத்தின் மேலோ ஆழ்ந்த ஆழிக்கு அப்பாலோ அது இல்லை. ''நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது. இதோ, **வாழ்வையும்** நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்'' (உபா 30:11-15). இன்று தேவ வார்த்தை அச்சடிக்கப்பட்டு நமது கரங்களில் இருக்கிறது. வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாடநூல் இதுவே. இதை வாசித்து, கிரகித்து, செயல்படுத்துங்கள். இப்படித்தான் வாழ்வையும் நன்மையையும் தெரிந்துகொள்ளலாம்.

ஆதாமும் ஏவாளும் மரணத்தைத் தெரிந்துகொண்டனர். தேவனது வார்த்தையின்படி செய்வதைவிட்டு பிசாசின் வார்த்தையைப் பின்பற்றினர்.

கடவுள் தங்களுக்கு ஏதோ ஒன்றைக் கொடுக்காமல் வாட்டுவதாக நினைத்தனர். வாழ்வளிக்கும் மரமும் மரண மரமும் தோட்டத்தின் நடுவில்தான் இருந்தன. ஆனால் அவர்களது கண்களோ விலக்கப்பட்ட சுவையான பழத்தின் பக்கமே பறந்தன. வாழ்க்கையை அனுபவிப்பதைத் தடுப்பதற்காக நமக்கு தேவ கட்டளைகள் கொடுக்கப்படவில்லை, தீமையினின்றும் பாதிப்பினின்றும் நம்மைப் பாதுகாக்கவே.

பலர் வாழ்வை அனுபவிப்பதாக நினைத்து வாழ்வின் சுவாரஸ்யத்தையே இழந்து போயினர். வாலிபர் பிறகே ஓடினர், கற்பை இழந்தனர், கர்ப்பமாயினர், கருச்சிதைவு செய்துகொண்டனர், பாதிக்கப்பட்டனர், வெட்கமும் அவமானமும் அடைந்தனர், நோய்களைப் பரிசாகப் பெற்றனர். இதுவா ஜாலி ? வேறு சிலர் இச்சையை விட்டு ஓடினர், முடியவில்லையே ஆண்டவரே என்று தேவனை நோக்கி இரவும் பகலும் கதறினர், சோதனைகளை மேற்கொண்டனர், திரு மணம் செய்தனர், இப்போது ஜாலியாக வாழ்கின்றனர். வாழ்வை அனுபவிப்பது அதுவா இதுவா ? ‘‘நீ சாகவே சாவதில்லை’’ என்று பிசாசு உங்களை ஏமாற்ற விடாதீர்கள்.

வழிவிலகிப் போயிருப்பீர்களானால் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்பி வாருங்கள். அது தரும் மன்னிப்பையும் நம்பிக்கையையும் அணைத்துக் கொள்ளுங்கள்.

அப்படியானால் வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வது என்கிறீர்களா ? செவிக்குணவு இல்லாதபோது சற்று வயிற்றுக்கும் ஈயப்படும் என்பதே உங்கள் சட்டமாயிருக்கட்டும். ஒரு ஜான் வயிற்றுக்கு தேவையானதை சம்பாதித்தால் அதுவே போதும்.

கரங்களை நீட்டுங்கள். ஜீவனும் நன்மையும் வேண்டுமானால் வலது கையைத் தூக்கி, ‘‘தலையே போனாலும் வசனத்தை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாய்வதில்லை’’ என்று சபதமிடுங்கள்.

### *2. கவலையின்றி வாழுங்கள்.*

‘‘*உங்கள்* ***வாழ்வுக்காக....*** *கவலைப்படாதிருங்கள்*’’(மத் 6:25).

மார்த்தாள் அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்கினாள். உணவு, பானங்கள், உடை குறித்து கவலையே வேண்டாம் என்று இயேசு போதித்தார். வாழ்வு பெரியதா சாப்பாடு பெரியதா ? உடல் முக்கியமா உடை முக்கியமா ? யாரோ நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு பயிர் செய்ததை குருவிகள் செலவின்றி சாப்பிடுகின்றன. எந்த மகாராணியாவது ரோஜா இதழ் போன்ற மென்மையான உடை உடுத்தியதுண்டா ? இந்த



மலர்களைவிட தேவனுடைய பார்வையில் நீங்கள் எத்தனைப் பெரியவர்கள். உலாவப்போய் குருவிகளையும் மலர்களையும் பார்த்துக் கவலையை விடுங்கள்.

‘‘நாளைக்காக கவலைப்படாதிருங்கள்; நாளைய தினம் தன்னுடையவை களுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்’’ (மத் 6:34). நவீன மொழியில் இதன் பொருள் ‘‘ஒவ்வொரு நாளாய் வாழ்ந்தால் போதும்.’’ ஒரு நாள் எப்படித்தான் இருந்தாலும் அதை மகிழ்ச்சியாய் கொண்டாடுங்கள். படிப்பு அதிகம் வராத ஒரு உறவினர் அக்கா எனக்குண்டு. தேர்வு முடிவுகள் வெளிவந்ததும் எங்களை விருந்துக்கு அழைப்பார்கள். தேர்வில்தான் தோல்வியடைந்துவிட்டீர்களே ஏன் பிரியாணி என்று கேட்டால், ‘‘அதுவா, இது துக்கநிவிர்த்திக் கூட்டம்’’ என்று சிரிப்பார்கள். வாழத் தெரிந்தவர்கள்! சிறந்திலங்கிய நல்ல மனிதரொருவரை மணந்து பலர் போற்றும் வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

நாளைக்காக திட்டமிடுதல் வேறு, நாளைக்காக கவலைப்படுதல் வேறு. தேர்வுக்காக தீவிர ஆயத்தம் செய்யவேண்டும்; ஆனால் அதைக் கவலை யின்றி செய்யவேண்டும். உங்களது அந்தஸ்து, உடலழகு, எதிர்காலம், கடந்தகாலம் மற்றும் ஆயிரம் காரியங்களைக் குறித்து சாத்தான் உங்களை கவலையிலாழ்த்துவான். இது தாழ்வெண்ணத்திற்கு நடத்தும். ‘‘நான் விரும்பப்படத்தக்கவளல்ல, படிப்பில் கெட்டியல்ல, பார்வைக்கு அழகியல்ல...’’ நம்மையே நாம் கீழே தள்ளிவிடுவதைக் காட்டிலும் கேடானது வேறில்லை. உங்களுக்காக கவலைப்படாதீர்கள். உங்களை நேசிக்கப் பழகுங்கள். உங்களையே நீங்கள் நேசிக்காவிடில் உங்களைப்போல பிறரை எப்படி நேசிப்பீர்கள் ?

பவுலின் ஆலோசனையைக் கேளுங்கள். ‘‘...எப்பொழுதும் சந்தோஷ மாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.’’ எதற்குப் பதறுகிறீர்கள் ? அதற்குப் பதிலாக ஜெபியுங்கள்; உங்கள் கவலைகளையெல்லாம் உருட்டி ஒரு பந்தாக்கி, ஸ்தோத்திரத்தில் தோய்த்து, ‘‘தேவனே catch’’ என்று அவரிடம் தூக்கிப்போடுங்கள். நீங்கள் அறியுமுன்னே பரலோக சமாதானம் உங்களை ஆக்ரமிக்கும் (பிலி 4:4-7). ஜெபத்தை பழக்கமான வழக்கமாக்குங்கள்.

வாழ்க்கையில் பலவற்றை இழக்கலாம்; ஆனால் மீதமிருப்பது அதைக்காட்டிலும் அதிகம் என்பதை மறந்துவிடக்கூடாது. கடலில் நீச்சலடிக்கும்போது சுரா மீனிற்கு ஒரு காலைப் பறிகொடுத்த வாலிபப் பெண் ணைப் பார்த்து அறுவை சிகிச்சை நிபுணர்கள் பரிதாபப்பட்டார்கள். ஆனால் அவளோ, ‘‘போனாலென்ன ? நான் இழந்ததைக்காட்டிலும் அதிகமாக எனக்கு இருக்கிறதே. கோடீஸ்வரனொருவன் ஆயிரம் ரூபாயைக் காணாமற்

போட்டுவிட்டால் வருந்துவான், ஆனால் கவலைப்படமாட்டான். அவனுக்கு மீதமிருப்பது ஏராளமல்லவா'' என்றாள். எத்தனை அருமையான மனோபாவம்!

வாழ்க்கையைக் குறித்து அளவுக்குமீறி கவலைப்படவும் கூடாது, கவலையீனமாக இருக்கவும் கூடாது. வாழ்க்கையைக் குறித்து அதிக கவலைப்படுபவர்கள் சிறு பாதிப்பையும் தாங்கிக்கொள்ளமாட்டார்கள். கவலையீனமாயிருப்பவர்கள் அதிகம் சாதிக்கமாட்டார்கள். வாழ்வை உற்சாகமாய்ப் பாருங்கள். நன்றாகச் சிரிக்கவேண்டும், நன்றாக ஜோக்கடிக்க வேண்டும். நகைச்சுவைப் புத்தகம் ஒன்றை கழிவறையில் வைத்துக் கொள்ளுங்கள். புன்னகைப் புதல்வியாயிருங்கள் (ஆனால் வம்பில் மாட்டிக்கொள்ளாதீர்கள்). குடும்ப உறவுகளை வளர்த்துக்கொள்ளுங்கள். சுற்றுலாவிற்குச் செல்லுங்கள், பிறந்தநாள் மற்றும் நிறைவு விழாக்களைக் கொண்டாடுங்கள். திருமணநாளைக் கொண்டாடும் பெற்றோருக்கு திடீர் மாலை அணிவித்து அசத்துங்கள். டாம் அன்ட் ஜெரி பாருங்கள். உங்க ளோடிருப்பவரை மகிழ்வினால் திக்குமுக்காடச் செய்யுங்கள். பூச்சா காட்டி விளையாடுங்கள். முகத்தைத் தொங்கபோட்டுக்கொண்டிருப்பது கிறிஸ்தவ மல்ல. வாழ்வை அனுபவியுங்கள், ஒவ்வொரு நாளையும் ருசித்து மகிழுங்கள். பொருட்காட்சி சாலைக்குச் சென்று ஏறமுடிந்த ராட்டினங்களிலெல்லாம் ஏறிச் சுற்றுங்கள். மெகா அப்பளம் வாங்கிச் சாப்பிடுங்கள். ரோலர் கோஸ்டரில் ஏறி ஆஆஆ... ஊஊஊ.... ஓஓஓ என்று சிறுவரைப்போல கூவி இறங்குங்கள். சர்க்க ஸுக்குப் போய்வாருங்கள். விளையாட்டுகளில் பங்கெடுங்கள். விருப்பமான நல்லவற்றைச் செய்யுங்கள். அவ்வப்போது வெளியே சாப்பிடுங்கள். மனப்பூர்வமாக வாழ்வை நேசியுங்கள்.

வாழ்க்கையில் கண்ணீரோ துன்பமோ இல்லையா ? ஏனில்லை, வண்டி வண்டியாக உண்டு. வாழ்வும் தாழ்வும் இணைபிரியா நண்பர்கள். ஆனால் துன்பங்களை முதுகுக்குப் பின்னாலேயே வைத்துக்கொள்ளவேண்டும். வாழ்வின் மகிழ்ச்சியை அவை விழுங்கிவிடக் கூடாது. வாழ்க்கையை நேசித்து அதை அனுபவிக்கவே வாழவேண்டும்.

சாதக சிந்தையுள்ள ஒருவர் பன்னிரெண்டாவது மாடியிலிருந்து கீழே விழுந்தாராம். ஒவ்வொரு அடுக்கைக் கடக்கும்போதும், கீழே அதிர்ந்து நின்ற தன் நண்பர்களைப் பார்த்து, ''இதுவரை நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்றாராம். கவலைப்படும் போதெல்லாம், ''இதுவரை நன்றாகத்தான் இருக்கிறேன்" என்று சொல்லிக்கொள்ளுங்கள். எதிர்காலத்தைக் குறித்த முக்காலே மூணேவீசம் கவலைகள் காற்றாய்ப் பறந்துவிடும்.

கவலையின் நச்சு வித்துக்கள் நீங்கள் உண்ணும் வசனத்தின் கழுத்தை நெறித்துக் கொன்று உங்களைக் கனியற்றவர்களாக்கிவிடும் (மத் 13:22).



இரண்டாம் வருகையின் எதிர்பார்ப்பின் கூர்மையை கவலையானது மழுக்கி அந்த நாள் எதிர்பாராதவிதமாய் திடீரென்று உங்கள்மேல் வரச்செய்யும் (லூக் 21:34).

வாழ்க்கையை அனுபவிக்கிறேன், அனுபவிக்கிறேன் என்று சொல்லி நீங்கள் சோம்பேறிகளாகவும் சாதனைப் படைக்காதவர்களுமாகிவிடக் கூடாது. இது படிக்கும் பருவம். படாத பாடுபட்டு படியுங்கள். வீட்டு வேலை செய்யுங்கள், சமையல் கற்றுக்கொள்ளுங்கள், அது சுவாரஸ்யமானது.

### *3. எளிமையாய் வாழுங்கள்.*

*''ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு* ***வாழ்வு*** *அல்ல''* (லூக் 12:15).

இயேசு சொன்ன இந்த வாக்கியத்தின் சூழமைவு, ஒரு மனிதன், ஆஸ்தியை அபேஸ் பண்ணிக்கொண்ட தன் சகோதரன், குடும்பச் சொத்தில் பங்கு தரவேண்டும் என்ற சர்ச்சைதான். அவன் கேட்டது நியாயம்தான். ஆனால் இயேசுவோ தன்னைச் சூழ்ந்திருந்தவரிடம் பொருளாசையைக் குறித்துப் பேசினார். தொடர்ந்து, அதிகமான விளைச்சலினால் பூரித்து அவை எல்லா வற்றையும் பதுக்க நினைத்த பணக்கார விசவாயியைக் குறித்துப் பேசினார். தேவன் அவனுக்கு முட்டாள் பட்டம் சூட்டி, அவன் மரிக்கும் தருவாயில் அவையெல்லாம் யாருக்குச் சொந்தமாகும் என்று கேட்டார்.

பொருட்களால் வீட்டை நிரப்பாதீர்கள். கண் கண்டதையெல்லாம் வாங்க நினைக்காதீர்கள். சூட்கேசுகளை நிறைத்து நிறைத்து கட்டிலுக்கடியில் தள்ளாதீர்கள். ஏவாளுக்குப் போதுமானதற்கும் அதிகமாகவே தேவன் கொடுத்திருந்தார். அதுபோக இன்னுமொன்று வேண்டுமென ஆசைப்பட்டு அடிவாங்கினாள். அப்படித்தானே நாமும் ? பணக்காரராகும் முயற்சியில் வாழ மறந்துவிடாதீர்கள். ''இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன் ? அது கழுகைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்'' (நீதி 23:5).

ஏவாளை ஆசை காட்டினதுபோல உன்னிடமும் வந்து உனக்கு இல்லா ததைக்காட்டி, உன்னிடம் இருப்பவைகளின்மேல் அதிருப்தியடையச் செய்வான் சாத்தான். இதனால் எழும் முறுமுறுப்பு தேவனைக் கோபமூட்டுகிறது. அந்தஸ்தின் அடையாளங்களான பங்களா, கார், குளிர்சாதனப் பெட்டி, மின் அடுப்பு போன்றவற்றை வாங்க ஓடுகிறோம். **ஜீவனத்தின்** பெருமை குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (1 யோ 2:16). ஆசை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. பேராசை வேண்டாம். படிக்க வேண்டுமா ? படியுங்கள், வேலை

செய்ய வேண்டுமா ? செய்யுங்கள், கை நிறைய சம்பாதிக்கவேண்டுமா ? சம்பாதியுங்கள், துபாய் அல்லது அமெரிக்கா போகவேண்டுமா ? தாராளமாய்ப் போய்வாருங்கள், பங்களா கட்ட வேண்டுமா ? கட்டுங்கள். யார் வேண்டா மென்றது ? இவையெல்லாம் பாவமல்ல. ஆனால் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் பணமல்ல, தேவனே உங்களை வழிநடத்த அனுமதியுங்கள்.

யூதாசின் உலக ஆசை மூலமாக சாத்தான் அவனுக்குள் புகுந்தான். கேவலம், முப்பது வெள்ளிக்காசுக்காக தனது விலையேறப்பெற்ற ஆத்துமாவை விற்றுப்போட்டான். நம்மில் எத்தனைபேர் அற்ப காசுக்காக நமது ஆத்து மாக்களை விலைபேசுகிறோம் ? சக்திக்கு மிஞ்சி வாங்க சாத்தான் நம்மைத் தூண்டி கடனில் தள்ளிவிடுகிறான். எப்படிப்பட்ட நிலமையிலும், அதிகத்திலோ குறைவிலோ நிறைமனதுடன் திருப்தியாயிருக்க கமாலியேலினால் போதனை பெற்றவன் பவுல். கை நிறையவோ காலி கையோ, பசியோ மூக்குமுட்ட விருந்தோ, எப்படியிருந்தாலும் சந்தோஷமாயிருக்கும் சூத்திரத்தைக் கற்றுக்கொண்டவன் (பிலி 4:11-12).

''ஒரு மனிதனது தொல்லைகள் இரட்டிப்பாக வேண்டுமென்றால் அவனது ஆசைகளில் பாதி நிறை வேறினால் போதும்'' என்று சிரிக்க வைத்தார் பெஞ்ச மின் ஃப்ராங்க்ளின். பணத்தை வீணாக்குவதில்லை, பொருட்களைச் சேமித்து வைப்பதில்லை, உலக ஆஸ்திகளுக்காக வாயைப் பிளப்பதில்லை என்று இப்போதே தீர்மானமெடுங்கள்.

***4. விசுவாசித்து வாழுங்கள்.***

*''விசுவாசத்தினால் நீதிமான் **பிழைப்பான்**, பின் வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது''* (எபி 10:38).

தேவனது பிள்ளையின் விசுவாசத்தை பிசாசு விடாப்பிடியாய் சவாலிடுவான். இயேசுவிடம், ''நீர் தேவனுடைய குமாரனேயானால்...'' என்று சவாலிட்டவன் அவனல்லவா ? (மத் 4:3). உன்னையும் அதையேதான் கேட்பான். நீங்கள் தேவனுடைய பிள்ளை, உத்தமர், தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர் என்பதை சந்தேகமே படாதீர்கள். தேவன் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை ஒன்றுமே வேரறுக்கக் கூடாது. தவறி விட்டீர்களா ? ஓடுங்கள் ஆண்டவரிடம். ஆயிரம் முறை தோல்வி கண்டாலும் ஆயிரம் முறை அவரிடம் ஓடி ஒவென்று கதறுங்கள். அதுவே வெற்றி. அதுவே விசுவாசம். இல்லாவிட்டால் உங்கள்மேல் அவர் ஆத்துமா பிரியமாயிராது.

எலியா, யோனா, யோபு எல்லாருமே இக்கட்டான சூழ்நிலையில், 'மரணமே வா' என்று தவித்தவர்கள்தான். நமது வாழ்விலும் இப்படிக் கட்டங்கள் வரத்தான்



செய்யும். சீடர்கள், ''ஆண்டவா, எங்களை காப்பாற்றும்'' என்று அலறியபோது இயேசு எரிச்சலடைந்தார். ''அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்பட்டீர்கள் ?'' என்று திட்டினார். வாழ்க்கை நம்மை சாக்கடையில் அழுத்தலாம்; ஆனால் தலையை மட்டுமாவது மூழ்கிவிடாமல் மேலே வைத்துக் கொள்ளுங்கள். அதுதான் விசுவாசத்தின் அரிச்சுவடி. வாழ்க்கை கொடுப்பதைப் பயன்படுத்தி மேலேற வேண்டும். சாதக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்.

நான் இப்பொழுது உடலில் வாழ்வது, என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத் தினாலே **வாழ்கிறேன்** என்கிறான் பவுல் (கலா 2:20). திருமணத்திற்கு முன்போ திருமணத்திற்குப் பின்போ, எப்படிப்பட்ட பயங்கர சூழ்நிலையாயிருந்தாலும் சரி, உங்களை நேசித்து, உங்களுக்காக தன்னையே ஈந்த அவரை நினைத்து விசுவாசத்தில் நிலைத்திருங்கள். சுனாமியில் தப்பித்துக்கொண்ட ஒரு அருமை சகோதரனது அனுபவத்தைக் கேட்டேன். ஒரு மரக்கிளையின் மேல் வீசி எறியப்பட்டபோது அதைப் பற்றிக்கொண்டு, இராட்சத அலை இராட்சத வேகத்தோடு திரும்பிப் போகும்போது உயிர்தப்பினாராம். விசுவாசமானது அக்கிளையே. அதைப் பற்றிக்கொண்டீர்களானால் எதுவும் உங்களைப் பின்னிழுக்க முடியாது.

தோல்வி, சோர்வு, வாலிபரால் கிண்டல், காதலில் ஏமாற்றம், திருமணத் திற்குமுன் கர்ப்பம், கருக்கலைவு என்னவாயிருந்தாலும் தற்கொலை தீர்வு அல்ல. விசுவாசமாயிருங்கள். உங்களுக்கு அவமானத்தைக் கொண்டுவந்த சூழ்நிலைகளைப் பின்னாக எறிந்து முன்னோக்கி நடைபோடுங்கள். வாழ்க்கைச் சக்கரம் முழுவதும் புது துவக்கங்களும் புது வாய்ப்புகளும் உண்டு. முக்தர் மாயைக் குறித்துக் கேட்டிருக்கிறீர்களா ? உயர்குலமென தங்களைக் கருதிய முரடர்களால் கற்பழிக்கப்பட்ட இந்தப் படிக்காத கிராமத்துப் பாகிஸ்தானியப் பெண், தன் குடும்ப கவுரவத்தைக் காக்க தற்கொலை செய்துகொள்ள வேண்டியவள். ஆனால் வாழ்க்கையை வாழ்ந்து நீதிக்காய்ப் போராடி தன்னைப் போன்ற பெண்களுக்கு சீரிய வாழ்வளிக்க சீறி எழுந்தாள். நீதிமன்றம் சென்றாள். எதிரிகள் தூக்குதண்டனைப் பெற்றனர். அரசாங்கம் கொடுத்த ஐந்து இலட்சத்தில் ஒரு பள்ளி துவங்கினாள். உதவித் தொகைகள் வரத் துவங்கின. இன்று மூன்று பள்ளிகள் நடத்துவதோடு பல பெண்களுக்கு ஆலோசனை அளிக்கிறாள். உயர் ஜாதி என்று கருதுவோரின் கொலை மிரட்டலோடு அனுதினம் வாழ்கிறாள். யாருக்கும் தன் நிலமை ஏற்படக் கூடாதென்று பாகிஸ்தானியப் பெண்களுக்கு கல்வி அளிப்பதில் கவனம் செலுத்துகிறாள். பலாத்காரம் செய்யப்பட்டப் பெண்கள் பாகிஸ்தானில் குடும்ப கவுரவம் என்றப் பெயரில் கொல்லப்படுகின்றனர். அந்த சம்பிரதாயத்தை

முக்தர்மாய் மாற்றினாள். சாத்தானது சதிகளை சாதனைகளாக மாற்றுங்கள். பயம், பதற்றம், பாதக சிந்தை இவையெல்லாம் சாத்தானின் சொத்து. கடவுள் ஒருபோதும் கெட்டவரல்ல; அவர் எப்போதும் நல்லவர். நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதை ஒருபோதும் சந்தேகிப்பதில்லை என்றும் விசுவாசத்தை ஒருபோதும் விடுவதில்லை என்றும் இன்றே, இப்பொழுதே தீர்மானமெடுங்கள்.

### *5. சமாதானமாய் வாழுங்கள்.*

*“கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனிதரோடும் சமாதான மாயிருங்கள்”* **(வாழுங்கள்)** (ரோ 12:18).

நறுமணமான வாழ்க்கைக்கு நல்லுறவு மிக மிக அவசியம். “சமாதான மாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்” (1 கொரி 7:15). பெற்றோர், பிள்ளைகள், உடன் பிறந்தவர், அயலகத்தார், நண்பர், வாழ்க்கைத் துணை, எதிரிகளோடு நல்லிணக்கமாய் வாழ்வது இன்றியமையாதது. உங்கள் உறவுகளில் வெண்ணெய் தடவ சில ஆலோசனைகள்—

பெற்றோர்—கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். அவர்கள் கேட்பது அடியோடு தவறாக, பாவமானதாக இருந்தாலொழிய மற்றபடி கீழ்ப்படியுங்கள்.

பிள்ளைகள்—எரிச்சல் மூட்டாதீர்கள்.
உடன் பிறப்புகள்—விட்டுக்கொடுங்கள்
அயலகத்தார்—இரக்கம் காட்டி உதவி செய்யுங்கள்.

நண்பர்—அவர்கள் இருப்பது போலவே அவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆயிரம் பேரிருந்தாலும் ஆயிரம் பேரும் வித்தியாசமாக யோசிக்கிறோம், நடக்கிறோம், பேசுகிறோம். ஆகவே சிநேகிதி உங்களைப் போலவே இருக்க எதிர்பாராதீர்கள்.

வாழ்க்கைத் துணை—எதிர்த்துப் பேசாதீர்கள்
எதிரிகள்—தீமைக்கு நன்மை செய்யுங்கள்

முடியாத சூழ்நிலைகளும் உண்டு. என்ன செய்வது. நீங்கள் இரண்டு மைல் தூரம் சென்று முயற்சி எடுங்கள். பதிலடி கொடுக்காமல் ஒவ்வொருவரிலும் தனிச் சிறப்பைக் கண்டுபிடியுங்கள். ஒருவர் ஒரு கன்னத்தில் அறைந்தால் அவர்களது மறுகன்னத்தில் அறையும் துடிப்பை அடக்கிக் கொள்ளுங்கள். சண்டை போடவே போடாதீர்கள். அது சமாதானத்தைக் கெடுத்து வாழ்க்கையின் நாடித்துடிப்பை நிறுத்திவிடும். “கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்” என்ற பவுல் அதே மூச்சில், “உங்கள் சாந்தகுணம்



எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக” என்கிறான் (பிலி 4:4,5). சந்தோஷமும் சாந்தகுணமும் இரட்டைக் குழந்தைகள் என்பது புரிகிறதா ?

திருமணத்திற்கு முன்பு ஒருமுறை இரயிலில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தேன். மேல் தளத்திலிருந்து இறங்கும்போது என் கால் கீழே உட்கார்ந்திருந்த ஒரு பெண்மணியின் தோளில் பட்டுவிட்டது. அவ்வளவுதான்; மடைதிறந்தார்போல் என்னை வசைமாறிப் பொழியத் துவங்கிவிட்டார்கள். மன்னிப்புக்கேட்டு மன்றாடிப் பார்த்தேன்; அவர்கள் நாவோ ஓய்வதாயில்லை. விளக்குகள் அணைக்கப்படும்வரை இடிமுழக்கம் அடங்கவில்லை. அமைதியாய் படுத்துக்கொண்டேன். காலையில் அதே கதை தொடர்ந்தது. மருத்துவரான என் தகப்பனார் என்னைக் கூப்பிட வந்திருந்தார்கள். அந்த அம்மா இறங்குவதைக் கண்டவுடன் சிரித்து, “மேரி, இது என் மகள், வேலூர் CMC மருத்துவமனையில் டாக்டராகப் பணிபுரிகிறாள்” என்றார்கள். அவர்கள் முகம் கரிகரித்து அவசரமாக நகர்ந்தார்கள். என்னிடம், “என் வார்டு ஆயா” என்றார்கள். இதைவிடப் பெரிய தண்டனை அவர்களுக்கு வேண்டுமா ? “பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்” (ரோ 12:19).

ரோமர் 12:20இன் கருத்தென்ன ? உன் பகைவனின் கார் பழுதாகி நின்றால், நின்று உதவு. ஒரு பாடம் அவளுக்கு வரவில்லையா ? கற்றுக்கொடு. அவனது காணாமற்போன பொருள் கிடைத்தால் கொண்டுபோய் கொடு. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தால் பார்த்து வா.

இதனால், உன்னைச் சிறுமைப்படுத்தி சித்ரவதை செய்து அலைக் கழிப்பவர்களை வாளாவிருந்து கைகட்டி பொறுத்துக்கொள்ளவேண்டு மென்பதல்ல பொருள். ஒவ்வொருவருக்கும் கவுரவம் என்ற உரிமை உண்டு. முதுகெலும்புள்ளவர்களாயிருங்கள். பாலியல் தொல்லை மற்றும் கொடுமைப் படுத்துகிறவர்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். மறுப்புத் தெரிவிக்க உங்களுக்கு உரிமையுண்டு. நம்பகமான ஒருவரிடம் விஷயத்தைக் கூறி உதவி நாடுங்கள். தற்கொலை செய்துகொள்ளாதீர்கள்.

சின்னச் சின்ன காரியத்திற்கெல்லாம் சண்டையிட சாத்தான் தூண்டிவிடுவான். கிறிஸ்துவின் அன்பு உங்கள் இதயத்தை நிரப்புவதினால் சண்டையிட மறுத்துவிடுங்கள். கோபத்தை கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். இப்பொழுதே சண்டையிடுவதில்லையென்று தீர்மானமெடுங்கள்.

### *6. அமைதியாய் வாழுங்கள்.*

“**வாழ்வை** விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காக்கக்கடவன்” (1 பேது 3:10).

எவ்வளவு சீக்கிரம் நாவுக்குக் கடிவாளம் போடக் கற்றுக்கொள்கிறீர்களோ அவ்வளவு நல்லது. ஏனெனில் “மரணமும் **வாழ்வும்** நாவின் அதிகாரத்திலிருக்கும்” (நீதி 18:21). நாவும் நல்வாழ்வும் உடன்பிறந்த சகோதரிகள்.

வேதத்தை வாசித்துவிட்டு அதை மூடிவைத்து பெருமூச்சுவிட்டு, “ஆண்டவா, என் பெலவீனத்தை நீர் அறிவீர்” என்று சொல்லிவிடுவது சுலபம். கடவுளாவது அதைக் கேட்பதாவது. முதலாவது தீது பேசுவதை நிறுத்துங்கள். அதுவே பழக்கமானால் முட்டியிடுங்கள். தேவனை நோக்கி ஓலமிட்டு வாய்க்குப் பூட்டு போடுங்கள். இதில் தேறின பிறகு திட்டுபவர்களை பதிலுக்குத் திட்டாதிருக்கும் அடக்கத்திற்கு வாருங்கள். வாய்க்குள் நாவு திட்டுவதற்குத் துடியாய்த் துடிக்கும். ஆனால் நாவை உங்கள் அடிமையாக்குங்கள். இப்போது மூன்றாம் தேர்வு—திட்டுபவர்களை ஆசீர்வதியுங்கள் (1 பேது 3:9). வேதத்தை ஏட்டுச் சுரக்காயாக்கிவிடாதீர்கள். மனிதரால் இது கூடாததுதான்; ஆனால் தேவனால் எல்லாம் கூடும். ஒவ்வொன்றிற்காய் குட்பை சொல்லுங்கள்—பெற்றோரை, அதிகாரிகளை எதிர்த்துப் பேசுதல், கெட்ட வார்த்தை, கீழ்த்தரமான மொழி, பொய், அரட்டை, புறங்கூறுதல், வம்பு, கபடு... மனைவியானபின் அமைதலுள்ள ஆவிக்குப் பயிற்சி எடுக்கவேண்டும். “போதனையின்றி” கணவனை ஆதாயப்படுத்தவேண்டும் (1 பேது 3:1-5). பெண்ணின் அழகே சாந்தமும் அமைதலுமுள்ள ஆவிதான்.

யாக்கோபு நாவைக் குறித்ததோர் விமர்சனமே எழுதியுள்ளார் (யாக் 3). உங்கள் நாவை அடக்கிவிட்டால் உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்தான். கப்பலின் சிறிய சுக்கானைப்போல நாவு உங்களை வாழ்வின் பக்கமாகவோ சாவின் பக்கமாகவோ திருப்ப முடியும். யானைகளையும் சிங்கங்களையும் அடக்கி ஆள்வது சுலபம். நாவு ஆயுள் சக்கரத்தையே கொளுத்திவிடும். ஆனால் முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்— புகழ்ச்சி அடைவார்!

தன் நாவைக் காக்கிறவன் தன் **வாழ்வைக்** காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான் (நீதி 13:3). சாத்தான் உங்கள் நாவைப் பயன்படுத்த இடமளிக்காதீர்கள். ஒவ்வொரு முறை நாவை துர்ப்பிரயோகம் செய்யும்போதும் தேவனிடத்திலும் பாதிக்கப்பட்டவரிடத்திலும் மன்னிப்புக்கோர தீர்மானமெடுங்கள். இப்போதே இப்பத்திரிகையை சற்று மூடி வையுங்கள். தாழ்பணிந்து நாவைத் தொட்டு அதை முழுமையாய் அடக்க ஒரு



தீர்மானம் எடுங்கள். நாவின் சுதந்தரத்திற்கு எல்லையில்லாமல் போகக்கூடாது. கட்டுப்படுத்துங்கள். பரிபூரண வாழ்வை அனுபவிக்கும்படியாக அதைக் கீழ்ப்படியப் பழக்குங்கள்.

### *7. இழக்கவே வாழுங்கள்.*

*“தன் **ஜீவனை** இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாக தன் **ஜீவனை** இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்”* (மத் 16:25).

சூழ்நிலையைக் கவனியுங்கள். இயேசு துன்பமனுபவிப்பதற்கு எதிர் பேசினான் பேதுரு. அவன் மூலமாக வந்த அந்த சாத்தானின் ஆலோசனையை இயேசு கடிந்துகொண்டார். மேலும் இயேசு, “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” என்றார். அப்படியென்றால் ஒரு நாளைக்குப் பலமுறை சுயத்திற்கு, ‘No’ சொல்ல வேண்டிவரும். நவீன செழிப்பின் உபதேசம் துன்பமற்ற வாழ்க்கையை மாலைபோட்டு வரவேற்கிறது. இயேசு கற்பித்ததோ வேறு.

அந்த விதவையைக் குறித்து இயேசு, “...இவளோ தன் வறுமையிலிருந்து தன் **வாழ்க்கைக்கு** உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்” என்றார் (லூக் 21:4). தன் வாழ்வையே தேவ சேவையில் ஊற்றிவிட்டாள். ஆம், வாரிக் கொடுப்பதே வாழச் சிறந்த வழி.

இயேசு ஒரு மாட்டுக் கொட்டகையில் பிறந்தார். கிறிஸ்து ஜெயந்தி அலங்கரிப்பில் பார்க்கிறோமே அந்த அழகிய சுத்தமான கொட்டிலல்ல. சாணமும் அழுக்கும் கொசுக்களும் நிறைந்த மாட்டுக்கொட்டிலில். ஒரு ஏழைத் தச்சனின் வீட்டில் குறைந்தது ஆறு உடன் பிறந்தவருடன் வாழ்ந்தார். தச்சனாகப் பணிபுரிந்தார். அவருக்கு ஸ்கூட்டரோ காரோ, குதிரையோ, ஏன் ஒரு கழுதையோகூட கிடையாது. தெருத்தெருவாக நடந்து சிலுவையில் உயிர் நீத்தார். பிறப்பிலிருந்து இறப்புவரை தன் சிலுவையைச் சுமந்தார். அரசனாயிருந்தாலும் அடிமையானார்.

பிலிப்பியர் 1:21இல் பவுல், “கிறிஸ்து எனக்கு **வாழ்வு**, சாவு எனக்கு லாபம்” என்கிறான். அவன் கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்து கிறிஸ்துவுக்காகவே உயிர்விட்டான். கிறிஸ்தவம் என்றாலே தியாகம்தான். வெளிப்படுத்தலில் இரத்தசாட்சிகளைக் குறித்து, “அவர்கள் தம் **வாழ்வைக்கூட** அதிகம் நேசிக்கவில்லை. அவர்கள் மரணத்திற்கும் அஞ்சவில்லை” என்று வாசிக்கிறோம் (12:11).


போர்ச்சேவகனாய்ப் படையில் சேரும் ஒருவன் **பிழைப்புக்கடுத்த** அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான் (2 தீமோ 2:4). படையில் சேர கையெழுத்திடும் போர்வீரன் அன்றே தன் வாழ்வு இனித் தன்னுடையதல்ல என்ற உணர்வுக்குள் வருகிறான். தன் வாழ்வை தானம் பண்ணவே கையெழுத்திட்டதை அறிவான். ஆகவே என்ன செய்கிறான் ? வாழ்வின் காரியங்களில் மாட்டிக்கொள்ளமாட்டான். அவன் தேசத்திற்காக, பணத்திற்காக தன் ஜீவனைப் பணயம் வைக்கிறான்; நாமோ பரமனுக்காக நம் வாழ்வை பணயம் வைக்கிறோம். தேவனுக்காய்ச் செல்லுங்கள். உங்கள் உடலை மட்டும் கொல்ல வல்லவர்களைக் கண்டு கலங்காதீர்கள். சாத்தான் உங்கள் முகத்தில் தூக்கியெறியும் பயங்களை துடைத்துப் போட்டு விட்டு லெஃப்ட் ரைட், லெஃப்ட் ரைட் என்று வீறுநடைபோட்டு முன்னே செல்லுங்கள்.

*காலாட்படையில் நான் செல்ல மாட்டேன்,*
*சவாரி செய்யேன்,*
*சுட்டிட மாட்டேன்;*
*விமானப் படையில் பறந்திட மாட்டேன்,*
*நான் இயேசுவின் போர்வீரன்.*

நாம் வாழவேப் பிறந்தவர்கள், வாழ்க்கை வாழ்வதற்கே, அதை வீணடிக்கவேண்டாம். இயேசு அளிக்க வந்த அந்தப் பூரண வாழ்வை பரிபூரணமாய் வாழுவோம்!



2



# குருட்டுக் கல்யாணம்!

இருட்டில் குருட்டுத்தனமாக மூன்று முடிச்சைப் போட்டுவிட்டு காலைக் கதிரொளியில் மணமகளைக் கண்டபின் குய்யோமுறையோவென்று கூச்சலிட்ட யாக்கோபை நினைத்துச் சிரிக்கிறேன். கொஞ்சமும் சந்தேகமின்றியிருந்த அவனை மாமனார் மணநாளில் கஞ்சிக்காய்ச்சிவிட்டார். திருமணச் சந்தையில் பலவிதத் திருவிளையாடல்கள் நிறைந்துள்ளதால் எதையும் கொஞ்சம் சந்தேகிப்பது என்றுமே நல்லது. மேகத்தில் நமது தலை பறந்துகொண்டிருந்தாலும் கால்கள் தரையில் பாவியிருக்கவேண்டும்.

யாக்கோபு உணர்ச்சிவசப்பட்டிருந்தான். மணமகளுடன் பேசவுமில்லை. பேசியிருந்தால்தான் மாமனாரின் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்திருப்பானே. யாக்கோபு சரியான ஏமாந்தாங்குளி. மட்டுமல்ல கூரற்றவன். தனது மனைவின் முகத்தைப் பார்க்க ஒரு விளக்காவது கேட்டிருக்கலாம். அதை ஒரு தேவையாகவே அவன் கருதவில்லை.

ஒருவிதத்தில் யாக்கோபு, லேயாள், ராகேல் ஆகிய மூவருமே இலவு காத்த கிளிகள்தான். *யாக்கோபு:* இரண்டு மனைவியருக்குமிடையில் இருதலைக் கொள்ளி எறும்பானான். *லேயாள்:* ஆகாத மனைவியானாள். *ராகேல்:* இரண்டாம் மனைவியானாள். நமது திருமணத்தைக் குட்டக்குளமாக்கிவிடா திருக்க நல்ல பாடமிது. விசுவாசிகள் மற்றும் ஊழியர், அதிலும் மிஷனரிகள்,

சரியான வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுக்கும் வேட்டையில் நம் கண்களையும் மனதையும் திறந்து செயல்படவேண்டும். நடந்ததை அழித்துச் சரி செய்ய வாழ்க்கை வீடியோ கேசட் அல்லவே. தப்பிக்கவேண்டிய ஆறு கிடங்குகளைக் காண்போம்.

**பணக்கண்கள்**

மிஷனரி ராகுலுக்கு இரண்டு இடத்தில் கேட்டு வந்தனர். ஒரு பெண் அதே ஊழியத்தில் ஈடுபட்டவள். மற்றொரு பெண் வேறொரு சபைப்பிரிவைச் சேர்ந்தவள். இரண்டாம் இடத்தில் வாக்களித்த ரொக்கப்பணம் ராகுலுக்கும் அவனது பெற்றோருக்கும் தூண்டிலானது. ஐயோ பாவம், இன்று அவன் பணிக்களத்திலில்லை. தூண்டிலில் தொங்கி துடித்துக்கொண்டிருக்கிறான். எல்லாத் தீமைக்கும் வேர் பணமன்றோ ? அதை இச்சிக்கிறவர்கள் அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ 6:10).

இரு பக்கத்திலும் பெற்றோர்கள் நல்லதொரு கொடுக்கல்வாங்கலைத்தான் எதிர்பார்க்கின்றனர். பணத்தைக் குறியாக வைக்காதீர்கள். பெற்றோர்தான் பணக்கண்கள் உடையவரானால் பையனாவது ரொக்கமின்றி மணமுடித்து மனைவியை காலமெல்லாம் காப்பாற்ற முதுகெலும்புள்ளவனாயிருக்க வேண்டும். கண்கள் பணத்தை நோக்கிக்கொண்டிருக்குமானால் பெண்ணின் சில முக்கிய அம்சங்களை நீங்கள் கவனிக்கத் தவறலாம். திறந்த மனதுடனிருங்கள். இல்லையேல் மண்ணில் கிடக்கும் ஒரு மாணிக்கத்தைக் கடவுள் காட்டினால் நீங்கள் அவனை/அவளைக் கண்டுகொள்ளத் தவறலாம்.

மிஷனரிச் சமுதாயத்திலும் வரதட்சணை நடமாடுவது துக்கமே. பெண்ணின் பெற்றோர் பச்சை நோட்டுகளைக் காட்டி ஆசை காட்டுகின்றனர். ரொக்கம் கொடுப்பதானால் திருமணமே வேண்டாம் என்று பிடிவாதமாய் ஒற்றைக் காலில் நிற்கும் பெண்களுமுண்டு. இப்படிப்பட்ட தீர்மானங்கள் சமூகக் கொடுமைகளை ஒழித்துக்கட்ட நல்லவைதான். ஆனால் நமது சமுதாயம் அந்தளவு இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வரதட்சணை சட்டபூர்வமாக நிராகரிக்கப்பட்டிருந்தாலும் மேசைக்கடியில் நடக்கும் பணப் பரிமாற்றத்தை யாரும் மறுக்க முடியாது.

நமது கலாச்சாரத்தில் சொத்தில் பெரும்பகுதி ஆண் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. பெண் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் நகை போட்டு, ரொக்கம் கொடுத்துக் கட்டிக்கொடுத்துவிடுவர். பெரும்பான்மையான பெண் மக்களுக்குத் தங்கள் சுதந்தரபாகம் என்னவென்றே தெரியாது. சொத்து இருக்குமானால் பெண் பிள்ளைகள் சட்டபூர்வமாக தங்களுக்குச் சேரவேண்டிய



பாகத்தைப் பெற்றுக்கொள்வது நல்லது. அப்படியானால் பணச்சிக்கலை எண்ணி ஊழியத்தை விட்டுப் பின்வாங்கத் தேவையில்லையே. மிஷனரிப் பெண்பிள்ளைகள் இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராகையால், பெற்றோரே, உங்கள் பெண் பிள்ளைகளுக்குச் சட்டபூர்வமாய்ச் சேரவேண்டிய பாகத்தைத் திருடாதீர்கள். நாளைக்கு அவர்கள், ''எங்கள் தகப்பன் எங்கள் பணத்தை வாயிலே போட்டுக்கொண்டார் என்று சொல்வானேன் ?'' (ஆதி 31:15).

**பிறரின் வற்புறுத்தல்**

தலைபோனாலும் தங்கள் பிள்ளைகளை மிஷனரிப் பணிக்கு அனுப்ப மறுக்கும் பெற்றோருண்டு. தங்கள் மிஷனரிப் பிள்ளைகளை மனம் மாற்றஅவர்களது தந்திரம், உலகக் காரியங்களில் ஊறிப்போன ஒரு துணையைத் தெரிந்தெடுப்பதுதான். பல எதிர்கால மிஷனரிகள் இந்த கிடங்கில் கிடக்கின்றனர். மிஷனரிப்பணியை ஆமோதிக்காத பல மேய்ப்பர்கள் உண்டு. தம் சபையில் ஒருவர் மிஷனரியாக ஒப்புக்கொடுத்தால் உள்ளூர் ஊழியமே கதி என்று கிடக்கும் ஒருவரை (தன் மகளை) கட்டிவைத்துவிடுவர். அதுவே அவனுக்கு சமாதி! பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படியவேண்டும் தான். ஆனால் அதற்காய் தேவ தரிசனத்தை அசட்டை செய்யும் அளவிற்கு செல்லக்கூடாது. மிஷனரிகளே, உங்கள் பெற்றோருக்கு ''கர்த்தருக்குள்'' கீழ்ப்படியுங்கள் (எபே 6:1). உங்கள் தீர்மானங்களில் உறுதியாய் நிற்கவேண்டும். கட்டாயக் கல்யாணத்திற்குக் கழுத்தை நீட்டாதீர்.

தீர்க்கதரிசனத்தைக் கேட்டும் மயங்கிவிடாதீர். உங்கள் திருமணத்தில் தலையிடுபவர் உங்களோடு உட்கார்ந்து பேசட்டும். ''கர்த்தர் சொல்லுகிறார்'' என்று சொல்லி அவர்கள் உங்களைப் பயமுருத்த விடாதீர். யார் மூலம் வந்தாலும் உங்களுக்கே அந்நபர்மேல் ஆசை ஏற்படவேண்டும். மிஷனரிகள் ஜடங்களல்ல. உங்கள் உள்ளுணர்வில் கிளர்ச்சி ஏற்படவேண்டும். தங்களுக்கு ''இஷ்டமானவரைத்'' திருமணம் செய்ய மிஷனரிகளுக்கும் ''விடுதலை'' அவசியம் (1 கொரி 7:39).

**தேவனுக்குச் சட்டம் போடுதல்**

தேவனுடைய சித்தத்திற்குத் திறந்த மனதுடனிருக்கவேண்டும். தனது ஜாதிப் பெண்ணையே மணந்தாலாச்சு என்று சுதன் பிடிவாதமாய் நின்றதால், கிடைத்த படிக்காத பெண்ணை மணந்தான். அவளும் மிஷனரித் தரிசனமுள்ளவள்தான். ஆனால் அவர்களது அறிவுத்திறன் ஒப்புமையின்மை அவர்கள் திருமணத்தை சில்லுசில்லாக உடைத்துக்கொண்டிருக்கிறது.

அதே இனம், மொழி, கலாச்சாரத்தில் திருமணம் செய்ய நினைப்பதில் தவறில்லை. அதே இனத்தில் மணமுடிக்கும் மிஷனரிகளுக்கே போதுமான சவால்கள் உண்டு. கலாச்சார வேறுபாடுகள் அவற்றைப் பெருக்குகின்றன. தேவனுடைய சித்தத்திற்குக் கண்ணை மூடிக்கொள்ளக்கூடாது என்பதையே வலியுறுத்துகிறேன். படிப்பு, சமூக நிலை, சபைப்பிரிவு, இவற்றைக் கவனிக்க வேண்டும்தான்.ஆனால் தேவ சித்தமே முதலிடம் பெறவேண்டும்.

**வசீகரிக்கும் கவர்ச்சி**

யாருமே விரும்பும் அழகுக்கும் கட்டுக்கும் மிஷனரி விதிவிலக்கல்ல. ஆனால் அதுவே தீர்மானிக்கும் குறிப்பாகிவிடக்கூடாது. காதல் மயக்கத்திலிருக்கும் ஒருவருக்கு உள்ளான குணங்களைக் கவனிக்க முடியாது. காதல் கண்ணைக் குருடாக்கும், திருமணம் கண்களைத் திறக்கும் என்ற பாலின் தாம்சனின் பொன்மொழி எத்தனை உண்மை! காதலர் கண்களுக்குப் பாதகமான குணங்கள் புலப்படுவதில்லை. பட்டாலும் சிலவேளை அவை பாராட்டவும்படுகின்றன. ''ஞானமாய் வாழ்க்கைத் துணைவரைத் தெரிந்தெடுக்கும் காரியத்தில் காதல் உணர்வுகளை மட்டுமே நம்புவது ஆற்றைக் கடக்க மண் குதிரையில் ஏறின கதையாகும். நீங்கள் கவனித்துப் பார்க்கவேண்டிய மிக முக்கியக் காரியங்களுக்கு அவை உங்களை உணர்வற்றவர்களாக்கிவிடும்'' என்கிறார் நீல் வாரன்.

திருமணத்திற்குப் பிறகு வெளி அழகானது பின்சீட்டிற்குப் போய்விடும். உள்ளான குணங்கள் முன் சீட்டிற்குத் தாவிவிடும். அது ஓட்டுனர் இருக்கையாகவும் இருக்கலாமே! மிஷனரிகளே கவனம்! உங்கள் ஆன்மீகத் தலைவரது ஆலோசனைகளைக் கேளுங்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டபின் புத்தியைப் பயன்படுத்துங்கள். தேவன் பொதுவாக நமது புத்திக்கு எதிராய் செயல்படுவதில்லை. பல மிஷனரிகள் உணர்ச்சிவசப்பட்டு பொன் மூக்குத்தியைத் திருமணம் செய்யபோய் இப்போது பன்றியினால் பீறப்பட்டுக் கிடக்கின்றனர் (நீதி 11:22)!

**ஒருவரையொருவர் அறியாமை**

சரி, இல்லை என்று தீர்மானிக்க புகைப்படம் மட்டுமே பரிமாறப்பட்ட காலமெல்லாம் மலையேறிப்போய்விட்டது. எண்ணற்ற திருமணங்கள் முறிந்துகொண்டிருக்கும் இந்நாட்களில், வாழ்நாள் முழுவதும் ஒன்றாய் நடைபோடத் திருப்தியாய்ச் சம்மதிக்கும் அளவு பையனும் பெண்ணும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள பெற்றோர் இடமளிக்கவேண்டும்.



அவசரத் திருமணம் ஆகாது. ஆலயத்தில் பெண்ணையோ பையனையோ பவுடர் பூசிய முகத்துடன் பார்ப்பது போதாது. வேலைத்தலத்திலும் வியர்வை யிலும், நல்ல மனநிலையிலும் சோர்பிலும் பார்ப்பது நல்லது. ஒவ்வொருவரது வாழ்க்கையின் குறிக்கோள்கள் மற்றும் வாஞ்சைகளைப் பகிந்துகொள்ள சில அவகாசங்கள் அளிக்கப்படவேண்டும். ஒருவரது சாட்சியை அடுத்தவருடன் பகிர்ந்துகொள்வதுடன் அன்னாரது சுபாவம், கிறிஸ்துவுக்கும் அவரது பணிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் குணநலன்களை கண்டறிவது அவசியம். அவிசுவாசிகளையோ, தேவ இராஜ்யத்தில் ஒரு காலும் உலகில் ஒரு காலுமாய் நடைபோடும் விசுவாசிகளையோ மணக்க மிஷனரிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர். புத்தியாய் நடந்துகொள்ளுங்கள். திருமண சந்தையில் ஏய்த்தல் சர்வ சாதாரணம். கேள்விப்படும் காரியங்களைத் தெரிந்தவர் மூலம் விசாரித்து உறுதிப்படுத்திக்கொள்வது ஞானம்.

பழைய வாழ்க்கை மற்றும் உடல் நலம் குறித்து எதுவும் வெளிப்படுத்த விரும்பினால் நிச்சயத்தார்த்தத்திற்கு முன் செய்யுங்கள். பழைய வாழ்க்கையை விவரிக்கத் தேவையில்லை. அடுத்தவரது கடந்த காலத்தை துளைக்காதீர்கள். நிச்சயத்திற்கும் திருமணத்திற்குமிடையே மூன்று அல்லது ஆறு மாதங்கள் இருப்பது நல்லது. இந்நாட்களில் கடிதங்கள் பரிமாறிக்கொள்வதும், ஓரிரு முறை சந்திப்பதும் நல்லது.

**மனந்திரும்ப நம்பிக்கை**

தலைவர்கள் விருப்பமின்றி பென்சன் தன் இளம்பிராயக் காதலியை மணந்தான். இன்றும் அவன் உத்தம மிஷனரிதான். ஆனால் மனந்திரும்பாத மனைவியால் அவ்வப்போது சிக்கல்கள்.

மனந்திருப்பிடலாம் என்று மணத்தல் மடமை. மிஷனரி ஊழியமே உயிரென நிற்பவரையே மிஷனரிகள் மணக்கவேண்டும். அவர் ஆத்துமாதாயகராயிருக்க வேண்டும். தனக்கும் அடுத்தவருக்கும் தேவனது இராஜ்யத்திற்கும் பங்கம் விளைவிக்காதபடி மிஷனரியாயிருப்பவர் ஒத்துவராத பழைய காதலுக்கு டாடா சொல்லத் தயங்கக்கூடாது. ஆனந்தும் ரீனாவும் அருமையான தம்பதியர். வேலையே கதியென வாழ்ந்த ரீனா இப்போதும் வேலை செய்து தன் பட்டப்படிப்பைப் பயன்படுத்திக்கொள்ள துடிக்கிறாள். தான் ''அழைக்கப் படவில்லை'' எனக் கருதுகிறாள். வீட்டில் ஓயாத போராட்டம். திருமணத்திற்குப் பின் சரி செய்துகொள்ளலாம் என்ற ஆனந்தின் நம்பிக்கை எரிந்து சாம்பலானது.

மிஷனரியாகிவிட மனமாற்றம் மட்டும் போதாது. அவள்/அவன் உலக ஆசைக்கும், பண ஆசைக்கும் மரித்திருக்கவேண்டும். தியாகச் சிந்தை, கடின

உழைப்பு, வசன வாஞ்சை அவசியம். மிஷனரிகளும் மிஷனரியாக ஒப்புக்கொடுத்தவர்களும் ஏற்கனவே ஏதாவதொரு விதத்தில் ஊழியம் செய்துகொண்டிருப்பவர்களையே மணமுடிப்பது உத்தமம்.

**முடிவு**

பொதுவாக இருபதிலிருந்து முப்பது வயதிற்குள் மணமுடிப்பர். முதிர்ச்சியான கிறிஸ்தவராயிருக்கும் வயதல்ல இது. எனவே இலட்சியத் துணையைத் தேடித் தேடி களைக்கவேண்டாம். நாளடைவில் துணைவர் வளர்ந்துவர எதிர்பாருங்கள். மிஷனரிப் பாண்டமாக வனையவிருக்கும் களிமண்ணை கண்டுகொள்ளவே இவ்வறிவுரைகள். சொல்லப்பட்டவைகளை நினைத்துக்கொள்ளுங்கள், கர்த்தர் உங்களுக்கு ஞானத்தை அருளுவாராக!

*(பெயர்கள் யாவும் கற்பனையே)*





3

# இயேசுவுக்காய் சூப்பர் வாலிபர்!

தேவன் நமது வாய் வீராப்பையல்ல, வாழ்க்கைச் சாதனையையே பார்க்கிறாரென்று வேதம் திரும்பத் திரும்பக் கூறுகிறது. அதற்கேற்றாற்போல் வெளிப்படுத்தல் புத்தகத்திலேயும் பேச்சைக் குறித்த பேச்சேயில்லை. எல்லாம் கிரியை... கிரியை... கிரியை என்றேயிருக்கிறது. சொல்வது சுலபம், செய்வது கடினம். உங்கள் நடையைக் குறித்துச் சொற்பொழியலாம். ஆனால் பொழியும் சொற்களை நடையில் காட்டமுடியுமா?

நாம் கடைசி நாட்களில் வாழ்கிறோம் என்பதற்கு சுனாமியே சாட்சி. கிரியைகளைக் குறித்த அநேக பாடங்களை வெளிப்படுத்தலில் கற்கலாம். நீங்கள் கற்கும் யாவும் கேட்கவும் உண்ணவும் இனிமையாயிருக்கும். ஆனால், அதே வார்த்தை உங்களுக்குள் ஆழமாய்ச் சென்று தன் மறுரூபமாக்கும் வேலையைத் துவக்கும்போது கசப்பாய் மாறும். "நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புத்தகத்தை எனக்கு தாரும் என்றேன். அதற்கு அவன் நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப் போல மதுரமாயிருக்கும் என்றான். நான் அந்தச் சிறு புத்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது. நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று" (10:9,10). கடைசி நாட்களில் கிரியைகளைக் குறித்து கடவுள் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்போமா?

## 1. கிரியைகளும் குணநலன்களும்

ஏழு சபைகளுக்கும் ஆண்டவர் கொடுக்கும் எச்சரிப்பை நோக்குங்கால் கிரியைகளுக்குக் கொடுக்கப்பட்ட இடம் மேலோங்கி நிற்கிறது.

| | | |
|---|---|---|
| 2:2 | எபேசு | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 2:9 | சிமிர்னா | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 2:13 | பெர்கமு | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 2:19 | தியத்தீரா | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 3:1 | சர்தை | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 3:8 | பிலதெல்பியா | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |
| 3:15 | லவோதிக்கேயா | "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" |

"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து பிரயாசம், பொறுமை, அன்பு, விசுவாசம் போன்றவைகளைக் குறித்து ஆண்டவர் பேசுகிறார்—அதாவது நமது குணநலன்கள் அல்லது பரிசுத்தம். நமது பிரதான கிரியை குணநலன்களைக் கட்டி எழுப்புவதே. வாலிபருக்குப் பொன்னாபரணம் பரிசுத்தமே. இதைத் திருட பல கள்வர் வருவர். விழிப்பாயிருங்கள். மலர்கள் மலராவிட்டாலும், தேன் தென் படாவிட்டாலும் தேனீ ஒருபோதும் அசுத்தத்தில் அமராது. உயிரே போனாலும் பரிசுத்தத்தைப் பறிகொடுக்காதீர். பரிசுத்தத்தை விளையாட்டாக அல்ல, விறுவிறுப்பாக எடுப்போம்.

சீடனாகிய தீமோத்தேயுவுக்கு தன் முதல் கடிதத்தில் பவுல் ஆலோசனை கூறுகிறார், "சீர்கேடும், கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு" (4:7). பேச்சைக் குறைத்து உழைப்பைக் கூட்டுங்கள். இந்த முயற்சியில் ஈடுபடும்பொழுதுதான் தோல்வி என்னும் படுகுழியில் அடிக்கடி விழுந்து, போதுமடா போதுமெனப் புலம்பு கிறோம். கிறிஸ்தவனுக்கு தோல்வி என்பதில்லை. விழுந்த நிலையிலிருந்து எழுந்திருக்கத் தவறுவதே தோல்வி. எழுந்துவிட்டீர்களானால் ஒவ்வொரு தோல்வியும் கிறிஸ்தவ நடையில் ஒரு வெற்றிக் கொடியாகும். விழுந்த சூழ்நிலையைத் துருவிப்பார்த்துத் தீர்மானமெடுங்கள். கடினமான வேளைகளில்தான் கச்சிதமான பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். இனி முடியாது என்று நீங்கள் சொல்லும் அந்நாளே அழிவின் நாள். ஒருபோதும் அந்த முடிவிற்கு வந்துவிடாதீர்கள்—வாழ்க்கை முழுவதும். நம்பிக்கையே வாழ்வின் கைப்பிடி. அது உடைந்துபோக விடாதீர்கள். இயேசுவை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். அவரையன்றி வேறு துணையில்லை. சுனாமியில் சிக்கிய சிலர் கிளைகளைப் பற்றிக்கொண்டதாலேயே உயிர் தப்பினர். இயேசுவை அணைத்துக் கட்டிக்கொண்டால் எந்த சுனாமியும் உங்களை



அடித்துச்செல்லாது. பின்னோக்குவதை நிறுத்தி முன்னோக்குங்கள். எத்தனை முறை விழுந்தாலும் எழுந்திருங்கள். நடந்ததை முதுகுக்குப் பின்னாக எறியுங்கள். தூசியைத் தட்டிவிட்டு முன்னோக்கி நடை போடுங்கள். இது ஒரு போராட்டமென்பதில் சந்தேகமில்லை. ஆனால், Gab. V. Pensadovவின் வார்த்தைகளை நினைப்பூட்ட விரும்புகிறேன், "நிறைவான விசுவாசத்தோடும் குறைவான போராட்டத்தோடும் விண்ணகத்தை அண்ணாந்து பார்ப்பது அர்த்தமற்றது."

## 2. கிரியைகளும் முன்னேற்றமும் (2:19)

"உன் கிரியைகளையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்."

தியத்தீரா சபை முன்னேற்றத்தில் முற்பாங்காயிருந்தது; நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. கிறிஸ்தவனின் அடையாளம் வளர்ச்சி. சிறு குழந்தை கண்ணுக்குத் தெரியாவண்ணம் அனுதினமும் வளருகிறது. அதன் அன்றாட வளர்ச்சியை அளக்க முடியாவிட்டாலும் அதன் வளர்ச்சி நிச்சயமே. நமது தினசரி முன்னேற்றம் புலப்படாவிட்டாலும் வளர்வதென்னவோ உறுதியே. நாம் விரும்பும் உச்சத்தில் நாம் இல்லா விட்டாலும், நாம் இருந்த குழியில் நாமில்லையென்பது திண்ணம். ஆன்மீக அசதி பின்மாற்றத்திற்கு நடத்தும். முன்னேற விடாப்பிடியாய்ப் பிரயாசப்பட வேண்டும். நாம் பூரணரல்லாவிடினும் முன்னேற குறி வைக்கிறோம். கொஞ்சம் கூடுதல் வேத ஆராய்ச்சி, இன்னும் 10 நிமிடம் ஜெபம், இன்னொரு ஊழியம், ஆவியின் கனியை வெளிப்படுத்த ஒரு முயற்சி, இவ்வாண்டு எல்லாப் பாடங்களிலும் 10 மதிப்பெண்கள் அதிகம், மேலும் ஒரு வீட்டு வேலை! புதிய சிகரங்களைத் தொடுங்கள். ஒவ்வொரு ஆண்டும் அமர்க்களமான ஆரம்பமாகட்டும். இம்முயற்சியில் முழு பெலத்தோடு ஈடுபடுங்கள். சிறப்பெய்துவதே உங்கள் சிந்தனையாகட்டும்.

இதற்கு உங்களுக்குத் தேவை ஐக்கியம். நன்றாகச் சாப்பிட்டு, தூங்கி, துணி துவைத்து சுத்தம் செய்ய வாரத்தில் ஞாயிறு மட்டுமே உண்டு என சிலர் புகார் செய்கின்றனர். எக்காரணத்தை முன்னிட்டும் கோவிலுக்குப் போவதற்கு டிமிக்கி அடிக்கக்கூடாது. இந்நாட்களில் ஆலயம் செல்லுதல் அலுத்துவிட்டது. ஞாயிற்றுக்கிழமை வேறெங்கும் போகமுடியாவிட்டால் கோவிலுக்குப் போய்த்தொலைப்போம் என்று சிலர் எண்ணுகின்றனர். கோவிலுக்குப் போட்டியாக தொலைக் காட்சி (TV) முளைத்திருக்கிறது. சத்தான ஆன்மீக ஆகாரமும், இதமான ஐக்கியமும், மேய்ப்பரின் மெய்க் கண்காணிப்பும் கிடைக்கக்கூடிய நல்ல ஆன்மீகச் சபையாகத் தெரிந் தெடுங்கள். உங்கள் துக்கங்களையும், சந்தோஷங்களையும், சிக்கல்களையும்

பகிர்ந்துகொள்ளத்தக்க நெருக்கம் போதகரோடும், அவர் மனைவியோடும் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு மூத்தவர், சிநேகிதர் அல்லது ஆசிரியர் உங்களுக்கு நெருக்கமாக இருக்கலாம். அவர்களோடு உங்கள் பயங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களில் சிலர் உடைந்துபோய் உள்ளுக்குள்ளே அழுதுகொண்டிருக்கிறீர்கள். பெற்றோரை நம்பி அவர்கள் உதவியை நாடுங்கள். முடியாவிட்டால் தேவபக்தியான ஒரு சகோதரி அல்லது சகோதரனோடு ஜெபியுங்கள். உங்கள் அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாக மாற்ற அது உதவும்.

மூவரோ நால்வரோ சேர்ந்து வேதப் பரீட்சைகள் மாதா மாதம் எழுதலாம். திருத்தி, பரிசு வழங்கிக்கொள்ளுங்கள். அதுவே வளர வழி. ஒருவரது வளர்ச்சியை மற்றொருவர் கணக்கெடுங்கள். ஒருவரையொருவர் கண்டித்துத் திருத்துங்கள். நீங்கள் பார்க்கும் TV நிகழ்ச்சிகள், மொபைலில் பேசுபவர், வாசிக்கும் புத்தகங்கள், பெறும் கடிதங்கள், சேர்ந்து செல்லும் நண்பர், கம்ப்யூட்டரில் களிக்கும் தளங்கள் இவற்றை உங்கள் ஆன்மீகத் தோழர் கண்காணிக்கட்டும். அவரிடத்தில் ஒளிவுமறைவின்றி உண்மையாயிருங்கள். அவரை ஏமாற்றுவது உங்களையே ஏமாற்றிக்கொள்வதாகும். தோழரின் பார்வையே நம்மைப் படம் பிடிக்கும் கண்ணாடி!

சர்தை சபைக்கு ஆண்டவருடைய வார்த்தை, ''உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை'' என்பது (3:2). உங்கள் நல்லது முன்னேறவேண்டும், முன்னேறியது சிறப்பெய்தவேண்டும். சிறப்பெய்தியது இன்னும் முன்னேறலாம். உச்சியை எட்டவேண்டும். இருக்கும் நிலையில் திருப்தியடையாதீர்கள். நீதிமொழிகள் 31:29இல் ''அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள்'' என்று வாசிக்கிறோம். இப்புகழெய்துவது நீங்களாயிருக்க வேண்டும். நீங்கள் இயேசுவுக்காய் சூப்பர் வாலிபர் ஆகவேண்டும். Thumbs up காட்டி, ''நான் இயேசுவிற்காய் super boy/girl'' என்று ஒரு குதி குதியுங்கள் பார்க்கலாம். சிலர் அமிதாப்பச்சன் அல்லது ரஜினிகாந்த் அல்லது விஜய்யின் விசிறிகளாயிருப்பர். நீங்கள் இயேசுவின் விசிறிகள்—நூற்றுக்கு நூறு இயேசுவுக்குச் சொந்தம்!

### 3. கிரியைகளும் திறந்த வாசலும் (3:8)

''உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பலம் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்ட படியினால், இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட முடியாது.''



''கொஞ்சம் பலம்!'' கிதியோன் தன்னைக் குறித்த தாழ்வு மனப்பான்மையால் வாதிக்கப்பட்டான். தான் 'எளியவன்,' 'சிறியவன்' என்றெண்ணினான். ஆண்டவரோ, ''உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; ...உன்னை அனுப்புகிறவர் நானல்லவா?'' என்றார் (நியா 6:14). ''உன் பலவீனத்தை ஏன் பார்க்கிறாய்? நானல்லவா உன்னை அனுப்புகிறேன்'' என்றார். தேவன் அவனுக்காகத் திறந்தருளிய வாசலுள் அவன் பிரவேசிக்காதபடி அவனுடைய தாழ்வெண்ணம் அவனைத் தடுத்தது. பலர் அல்லது அநேகர் அல்லது அனைத்து வாலிபருமே தங்களைக் குறித்து குறைவெண்ணங்கொண்டு கூனிப்போகின்றனர். தாங்கள் பலவீனர், நோயுற்றவர், குறையுள்ளவர், அங்கவீனர், கவர்ச்சியற்றவர், மந்தமானவர் என்றெண்ணுகின்றனர். உங்கள் பலவீனங்களை ஓரங்கட்டி, இருக்கிற பலத்தைப் பெருக்குங்கள்.

பெரும்பாலான பெண்களுக்கு ஆணாகப் பிறக்கவில்லையே என வருத்தம். ஆனால் உங்களைப் பெண்ணாகப் படைக்கவே தேவன் சித்தங்கொண்டார். ''நான் பெண்ணாய்ப் பிறந்த பாக்கியமென்ன, அல்லேலூயா'' எனச் சத்தமிடுங்கள். குறைகளை நினைத்து குறுகிப்போகாதீர். சுய பரிதாபத்திற்குப் பலியாகாதீர். உங்களுக்கு முன்பாக திறந்த வாசலுண்டு. மாபெரும் தேவன் மகத்துவமான பணிக்கு உங்களை அனுப்புகிறார். ஒரு காவலர் முருங்கைக்காய் போல் ஒல்லியாக இருக்கலாம். ஆனால் அவர் தன் எலும்பும் தோலுமான கையை நீட்டினவுடனே பெரும் லாரியும் நிற்கிறது. எப்படி? அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினாலேயே! ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. **ஆகையால்** நீங்கள் புறப்பட்டுப்போங்கள்'' என்றார் இயேசு (மத் 28:18-20).

தேவன் வாசலைத் திறக்கும்போது அதை மூடுபவன் யார்? உங்கள் வீட்டிற்கும், உறவினரிடத்திற்கும், சிநேகிதிகளிடத்திற்கும், பள்ளிக்கும், கல்லூரிக்கும், அக்கம்பக்கத்திற்கும், கிராமங்களுக்கும் சென்று யாவரோடும் நட்புறவு கொள்ளுங்கள். ஜீவனுள்ள தேவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். அண்டை வீட்டுப் பிள்ளைகளைக் கூட்டி நற்செய்திப் பாடல் மற்றும் கதைகள் கற்றுக்கொடுங்கள். மதிய இடைவேளையில் இருவர் சேர்ந்து ஜெபிக்கத் துவங்குங்கள். பின்பு மற்றவரை கூப்பிடுங்கள்.

உங்களை யாராவது முட்டாள் என்றார்களா? சபாஷ்! தேவனுக்கு நீங்களே தேவை. உங்கள் ஆசிரியரோ, பெற்றோரோ உங்களை ஒன்றுக்கும் உதவாதவளே என்றார்களா? பேஷ்! உங்களைத்தான் ஆண்டவர் தேடுகிறார். ''சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்,... ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, பைத்தியமானவைகளையும்... பலவீனமானவைகளையும்... இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும்

தேவன் தெரிந்துகொண்டார்'' (1 கொரி 1:26-28). தேவனுக்கு தேவை கோலியாத்துகளல்ல, குட்டி தாவீதுகளே; குதிரைகளல்ல கழுதைகளே! அவர் கிருபை உங்களுக்குப் போதும். உங்கள் பலவீனத்தில் அவர் பலம் பூரணமாய் விளங்கும். தேவன் எனக்காய் என்னச் செய்வார் என்று கேட்காதீர்கள், மாற்றிக் கேளுங்கள்.

### 4. கிரியைகளும் உபத்திரவங்களும் (2:9,10)

''உன் கிரியைகளையும் உபத்திரவத்தையும் அறிந்திருக்கிறேன்... நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே... மரணம் வரை உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.''

நீ சொல்லதில் கூறுவதை வாழ்வதில் சாதிப்பவரானால் சாத்தான் உன்னைச் சும்மா விடமாட்டான். கோதுமையைச் சுளகில் புடைப்பதுபோல புடைப்பான்.

''அப்பொழுது வலுசர்ப்பமானது பெண்ணின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று'' (12:17).

வாயில் சாட்சி, வாழ்வில் கீழ்ப்படிதல்; இதைச் சாத்தானால் சகிக்கவே முடியாது. உங்களோடு யுத்தம் பண்ண வருகிறான். அவனுக்கு அடி பணியாதீர். இயேசுவைப்போல் அவனை அப்பால் அகற்றுங்கள். ஆயிரம் சிக்கல்கள் வரும். உடல்நலக்குறைவு வரலாம். நாளை உங்களுக்குப் புற்றுநோய் என தெரியவந்தால் அவரை விட்டுவிடுவீர்களோ? மரணத்தை முத்தமிடும்வரை உண்மையாய் நிற்பீர்களா? குடும்பப் பிரச்னைகள் எழும். அநாதையாய் மாற்றாந்தாயின் கொடுமைகளைச் சகிக்க நேரிடலாம். பள்ளி, கல்லூரி மற்றும் சுற்றுப்புறச் சிக்கல்கள் கழுத்தை நெரிக்கலாம். உங்களுக்கு மிஞ்சின கல்வி பளுவினால் திண்டாடலாம். காதலர் கைவிடலாம், தகப்பன் குடிக்கலாம், பெற்றோர் பிரிந்து விடலாம், திருமணம் பிந்தலாம், தேர்வில் தோல்வியடையலாம், வறுமை வாட்டலாம், எதுவும் வரலாம். பயந்து அலறா தீர்கள். தற்கொலை எண்ணம் பிசாசின் சத்தம். இவ்வுலகில் தேவன் உங்களுக்கு மின்னும் எதிர்காலத்தை வைத்திருக்கிறார். ஆகவேதான் பிசாசு உங்களைக் காலத்திற்கு முன்னே கடத்தப்பார்க்கிறான். ஒவ்வொரு கஷ்டத்தையும் நல்ல தருணமாகப் பயன்படுத்தினால் வாழ்வு வளம் பெறும். *''கொஞ்சும் மொழிப் பெண்களுக்கு அஞ்சா நெஞ்சம் வேண்டுமடி''* என்ற பாடல் உங்கள் பொன் மொழியாகட்டும். சவாலான சூழ்நிலைகளை சளைக்காமல் சந்தியுங்கள். கிறிஸ்துவை உங்கள் பக்கத்தில் நிறுத்திக்



கொண்டால் எந்த செங்கடலையும் கடக்கலாம். நமது தேவன் குறும்புக்காரத் தேவன், வழிநடத்துதல்களை இடையூறுகளாகவும், ஆசீர்வாதங்களை சிலு வைகளாகவும் மாறுவேடத்தில் அனுப்புவார். ஆகவே வான்மழையைக் கண்டு கலங்காமல் வானவில்லைக் கண்டு களிப்புறுங்கள். வாழ்க்கை என்னதான் விக்கினாலும் அதை முழுமையாக வாழவேண்டும்.

பிசாசின் கரிமயமான எதிர்காலம் என்ன தெரியுமா? ''மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்'' (20:10). ஏற்கனவே வெற்றிபெற்ற யுத்தத்தில்தான் போராடிக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை அறிவீர்களா? இந்த ராசிபலனை தினத் தந்தியிலோ TVயிலோ பார்க்கத் தேவையில்லை. 7:13-17இல் பாருங்கள். ''இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்... தேவன்தாமே இவர் களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.'' ''மிகுந்த உபத்திரவம்!'' ஆம், சொல்ல முடியாத, பயித்தியமாக்கக்கூடிய இன்னல்கள் உங்களைச் சுக்குநூறாக உடைக்கலாம். இடுக்கமான வாசல்வழியாய்ப் பிரவேசித்து நெருக்கமான வழியில் செல்லவேண்டும் (மத் 7:13). வழியின் கோடியில் இயேசு கைக்குட்டையுடனே உனக்காய் காத்து நிற்கிறார். கிரீடத்தில் கண்களை வைத்து முன்னேறிச்செல்லுங்கள்.

### 5. கிரியைகளும் எதிர்காலமும் (14:13)

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்... அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.''

இன்று கிறிஸ்துவில் நடக்கிறீர்கள். கிறிஸ்துவுக்குள் மரிக்குமட்டும் அப்படி நடந்துகொண்டேயிருக்கவேண்டும். கிரியையோ, பிரயாசமோ, போராட்டமோ, வேதனையோ, கண்ணீரோ இல்லாத இடத்திற்குச் செல்லுகிறோம். உங்கள் கிரியைகளுக்காக நீங்கள் முடிசூட்டப்படும் நாள் உங்கள் ஓட்டத்தின் முடிவில்தான். உங்கள் பட்டமோ, நகைகளோ, வீடுகளோ, வங்கியிருப்போ உங்களோடு வருவதில்லை. இவ்வுலகில் வாழ்வது ஒருமுறை. இலக்கோடு வாழுங்கள். உங்களுடைய நற்கிரியைகள் மட்டுமே அந்நாளில் செல்லுபடி யாகும். எந்தத் தீர்மானமும் எடுக்குமுன் இக்கேள்வியை கேட்டுப் பாருங் கள்—நித்திய மதிப்புள்ள காரியத்தைத் தெரிந்துகொள்கிறேனா அல்லது தற்காலிகமானதைத் தெரிந்துகொள்கிறேனா? உங்கள் கண்கள் நித்தி யத்தில் பதிந்திருக்கட்டும். காலம் கடந்தோடும். அந்த பயங்கரமான நாளில் இவ்வுலகில் நாம் என்ன சாதித்தோம் என்பது மட்டுமே நம் கணக்கிலேறும்.

தன்னோடு கூட தன் ஊழியத்தில் இணைய விருப்பமற்ற ஓர் வெள்ளை வாலிபனை மணக்க மறுத்து, தன் பணித்தளம் நோக்கி நடைபோட்டார் ஆப்பிரிக்கா சென்ற மிஷனரி மேரி ஸ்லெசர். பவுல் கொலோசெயருக்கு புத்தி சொல்லுவதுபோல், “மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவை களையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்” (3:1,2). பணம் பலரை நரகக் குழிக்குள் தள்ளியிருக்கிறது. உங்களை நித்தியஜீவனுக்குள் நடத்தாத எல்லாவற்றிலும் உங்கள் உடும்புப்பிடியைத் தளர்த்திவிடுங்கள்.

### 6. கிரியைகளும் நியாயத்தீர்ப்பும் (20:12,13)

“அப்போது அந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்... யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்.”

அலறியடிக்கும் நியாயத்தீர்ப்பு நாளில் பேச்சைக் குறித்த பேச்சேயில்லை. தேவனுக்காக என்ன சாதித்தீர்கள் ? தேவனுக்காய் எப்படி வாழ்ந்தீர்கள் ? வாழ்வில் செய்ய பல காரியங்களுண்டு. உங்களை விட்டெடுபடாதவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள். “ஆண்டவரே, நான் இதைச் செய்வது உமது சித்தமா ?” என்று கேட்டுப்பாருங்கள். அவரது மென்மையான பதிலை உணருவீர்கள். தமது சித்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஒவ்வொரு நாளும் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படும்படி ஜெபி யுங்கள். தேவ சித்தத்தை அறிய Ph.D. தேவையில்லை. தேவனுக்குப் பயந்து அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் அவரது சித்தத்தை விட்டுத் தவறவே மாட்டோம்.

அந்த இருண்ட நாளில் முழங்காலோடு முழங்கால் மோதிக்கொள்ளும். அவருடைய சித்தத்தின்படி கிரியை செய்தவர்கள் உயர்த்தப்படுவார்கள். “பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகர் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் (மத் 7:21-27 ஞாபகமிருக்கிறதா ?) ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்து கிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்” (தானி 12:2,3).

வாழ்வில் தேவசித்தம் மட்டுமே செய்ய கவனமாயிருந்திருக்கிறீர்களா ? தாவீதைக் குறித்து, “தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்த பின்பு நித்திரையடைந்தான்” என்றெழுதப்பட்டி ருக்கிறது (அப் 13:36). வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பிலே இப்படி உங்களைக் குறித்துச் சொல்லப்படுமா ? தமது சித்தத்தை செய்யவே தேவன்



உங்களை இவ்வுலகில் பிறப்பித்துள்ளார். கர்த்தருக்குக் காத்திருந்து அதை அறிந்துகொள்ளுங்கள். அதைச் செய்தால் நியாயத்தீர்ப்புக்கு பயப்பட வேண்டியதில்லையே.

### 7. கிரியைகளும் பலனும் (22:12)

“இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.” இயேசு முன்பும் இதையே சொல்லியிருந்தார், “மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைப்பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார், அப்போது அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்” (மத் 16: 27). எதெதற்குப் பலன் பெறுவோம் ?

☐ *துன்பத்திற்குப் பலன்—மத் 5:11,12*

“என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கிய வான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.”

☐ *கிறிஸ்தவ அன்பிற்குப் பலன்—மத் 5:46; லூக் 6:35*

“உங்களை சிநேகிப்பவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலனென்ன ? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா ?”

☐ *இரகசிய ஈகைக்கும் கடன் கொடுத்தலுக்கும் பலன்*
*—மத் 6:1-4; லூக் 6:35*

“நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்க மாய்ப் பலனளிப்பார்.”

“கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.”

☐ *ஜெபத்திற்குப் பலன்—மத் 6:6*

“நீயோ ஜெபம்பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்

பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.''

*☐ உபவாசத்திற்குப் பலன்—மத் 6:17,18*

''நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும் படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.''

*☐ விருந்தோம்பலுக்குப் பலன்—மத் 10:41,42*

''தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.''

*☐ ஊழியத்திற்குப் பலன்—1 கொரி 3:8,13,14*

''மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன் தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்... அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங் கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்.''

*☐ நற்கிரியைகளுக்குப் பலன்—எபே 6:7,8*

''அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனிதருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.''

*☐ தைரியத்திற்குப் பலன்—எபி 10:35*

''ஆகையால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.''



*☐ தேவனைத் தேடுதலுக்குப் பலன்—எபி 11:6*

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.''

ஜெபித்தாலோ, விருந்தினருக்குப் காபி கொடுத்தாலோ, உதவி செய் தாலோ, தேவனைத் தேடினாலோ விருது பெறுவோம் என்று நம்ப முடிகிறதா ?

மேலே அமோகமான விருது வழங்கும் விழா காத்திருக்கிறது. மேற் கண்டவற்றை வாழ்வின் கடைசிவரை சளைக்காமல் செய்துகொண்டே யிருங்கள்.

''இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங் களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணின'' மோசேயைப் போல நித்திய பலன்மேல் கண்களை வைத்து முன்னேறிச் செல்லுங்கள் (எபி 11:26).

***Be super youth for Jesus!***



4

# திருப்பம் !

கோபம், கசப்பு, சோகம் மற்றும் பெயர் சொல்லவியலாத பல உணர்வுகள் ராமுவை உருட்டி எடுத்தன. கண்கள் TVயில் பதிந்திருந்தாலும், மனம் வெறெங்கோ இருந்தது. பிளஸ் டூ தேர்வில் எதிர்பார்த்த மார்க்குகள் வராததால் தன்னை மருத்துவராக்கும் பெற்றோரின் எதிர்கால கனவுகள் உடைந்து கண்ணாடித் துகள்களாகக் காலடியில் கிடந்தன.

ஐ.ஏ.எஸ். ஆபீசரான அவனது தந்தை அறையை விட்டு வெளியே வந்து, அவனது முகத்தைக்கூடப் பார்க்காமல் வீட்டைவிட்டு வெளியேறினார். தாயின் செவ்வரிக் கண்கள் அவளது தூக்கமின்மையைக் காட்டிக்கொடுத்தன. பத்தாவது வகுப்பில் தங்கையின் அதிரடி வெற்றி அவனது பரிதாப மார்க்குகளில் மூழ்கிவிட்டன.

இனி வாழ்ந்தென்ன ? செத்தாலும் யார் அவனுக்காக அழப்போகிறார்கள் ? வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்க சிறந்த சுலபமான வழி தூக்க மாத்திரைதான். ஆனால் அத்தனை மாத்திரைகளை மருத்துவர் சீட்டின்றி வாங்க முடியாதே. மூழ்கிவிடலாமே என்ற எண்ணம் ஊருக்கு வெளியே இருந்த ஏரிக்கு அவனைத் தள்ளிக்கொண்டேச் சென்றது. பாலத்தின் மேலே நின்று ஆழ்ந்த தண்ணீர் பகுதியை வெறித்துப் பார்த்தான். ஹூ ஹூம், மீன் குஞ்சைப் போல நீந்தும் அவன் தன்னையே மூழ்கடித்துக்கொள்ளவதென்பது முடியாது. சரி, வீட்டில் யாரும் இல்லாதபோது தூக்குப்போட்டுக் கொள்ளவேண்டியதுதான்.

திரும்பி வீட்டிற்கு நடைபோட்டான். ஊர் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டு அன்றைய அலுவல்களுக்காக ஆயத்தமாகிக்கொண்டிருந்தது.



ஏதோ ஒன்று அவனது கால்களை இழுத்துப்பிடித்து நிறுத்தியது. சுமார் 16 வயதுள்ள ஒரு பையன், தலை சிறியதாயும், கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் இரண்டு குழிகள் மட்டுமே இருந்தது. இருவர் அவனைச் சுமந்துவந்து நடைமேடையில் உட்காரவைத்தனர். குறவர்கள் செய்யும் வயலின் ஒன்றை அவன் கைகளில் திணித்துச் சென்றனர். அருகே தள்ளாடிய அவனது தாய் அமர்ந்துகொண்டாள். உறுதியற்றக் கைகளால் வயலினை உயர்த்தி, நெளிந்த விரல்களால் வாசிக்கத் துவங்கினான்.

அந்தக் கோரக் காட்சியைக் கடந்து நடந்த ராமுவின் கால்களை காற்றில் மிதந்து வந்த இசை தடுத்து நிறுத்தியது. திரும்பி, மன வளர்ச்சி குன்றிய அந்தக் குருட்டுப் பையனை நோக்கி அவன் கால்கள் அவனை இழுத்துச்சென்றன. முன்னே விரிக்கப்பட்ட துண்டில் ஏற்கனவே சில காசுகள் விழுந்திருந்தன.

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு நெளிவு. மூளை வளர்ச்சி இல்லை, கண் களுமில்லை, நடக்கக்கூட முடியாது. ராமுவின் எண்ணங்கள் சுழன்றன. உலகில் ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள், மருத்துவர்கள், பொறியியலர், விஞ்ஞானிகள் உண்டு. மருத்துவத் துணை ஊழியர், வங்கி ஆபீசர்கள், ஆசிரியர், வியாபாரிகளும் உண்டு. சகலத்தையும் நிர்ணயிக்கிற தேவன் ஒவ்வொரு வருக்கும் தமது திருச்சித்தத்தின்படியே அறிவை அளந்து கொடுத்திருக்கிறார். தன்னுடைய வாழ்விற்கான தேவ சித்தத்தை முழு மனதோடு ஏற்றுக்கொள்ள ஏன் அவனுக்கு இத்தனை வெறுப்பு ? இரவெல்லாம் கண் விழித்துப் படிக்கவில்லையா ? நண்பரோடு சுற்றுவதை நிறுத்தி, TVயை நிறுத்திப் போட்டு, கிடைத்த மணித்துளிகளையெல்லாம் பயன்படுத்தி ட்யூஷனுக்கும் போய் முட்டி முட்டிப் படிக்கவில்லையா ? தன்னால் முடிந்ததைச் செய்தானே. ஒருவேளை தன் தகப்பனைப் போல தனக்கு ஐந்து தாலந்துகளோ, இந்தப் பையனைப் போல ஒரு தாலந்தோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையோரைப் போல அவனுக்கு இரண்டு தாலந்துகள் உண்டே. அவற்றை அவன் தூக்கி எறிந்து விடக் கூடாதே. அதைப் பெருக்கலாமே. B.A.வோ B.Sc.யோ அல்லது ITIயோ படிக்கலாமே. என்ன குறைந்துபோய்விட்டது ? உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியக்காரனே என்று கடவுள் தன்னைப் பாராட்டாமலா போய்விடுவார் ? ஐந்து தாலந்து பெற்றவனுக்குச் சூடப்பட்ட அதே பாராட்டுதானே அது. தன் உயிரை மாய்த்துக்கொள்வதினால் கடவுள் தனக்குக் கொடுத்ததை உதாசீனப் படுத்துகிறானே.

ராமு மறுபடியும் திரும்பி வீட்டை நோக்கிச் சென்றான். அது தெருவில் ஒரு திருப்பமல்ல, அவனது வாழ்விலேயே ஒரு திருப்பம்.

எதிர்காலம் முகமெல்லாம் பூசப்பட்டவனாக ராமு தீர்மானத்துடன் வீட்டிற்குள் நுழைந்தான். இணைய தளத்திற்குள் க்ளிக் க்ளிக் என்று அடியெடுத்து வைத்தான். அப்ளிகேஷன் பாரம்களை நிரப்பத் துவங்கினான்.



5

# மகனே, மகனே!

இளவயதிலேயே அரசாங்கத்தில் உயர் பதவி எய்திய பிரபலமானதொரு விசுவாசி இருந்தார். துக்ககரமாக அவரது பணமும் புகழும் பலமும் பகுத்தறிவும் அவரைக் கடவுளை விட்டு விலகச் செய்தன. முதிர்வயதில் குற்றவுணர்வினால் அழுத்தப்பட்டார். வாழ்வை வீணடிக்கும் வாலிபரைப் பார்க்கும்போதெல்லாம் கடந்தகால நினைவுகளால் மனமடிவாகி அவர்களை எச்சரிக்க உந்தப்படுவார். எனவே நீதிமொழிகள் என்ற தனது புகழ்வாய்ந்த நூலில், "என் மகனே... என் மகனே" என அங்கலாய்த்து அன்னாருக்கு எட்டு அறிவுரைகளை எழுதிவைத்துள்ளார்.

### 1. மகனும் பெற்றோரும்

*"என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே... கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவ வழி"* (6:20–23).

இதைச் செய், அதைச் செய், இதைச் செய்யாதே என்று பெற்றோர் விரட்டிக்கொண்டேயிருப்பது சகிக்கக் கூடாதிருக்கலாம். பெற்றோரது கட்டுப்பாடு எரிச்சல் மூட்டும்தான். மின்சாரத்தை மிச்சம் பிடிக்க விளக்கை அணைக்க நினைப்பூட்டினாலும் நடு இரவு கொண்டாட்டங்களுக்குப் போவதைத் தடுத்தாலும் எதிர்பேசத் தோன்றுகிறது. வேதமோ போதக



சிட்சையை ஜீவ வழி என்கிறது. வேத வாசிப்பு தலையறிவு. பெற்றோரது கண்டிப்பு அதோடு அனுபவ அறிவைக் கூட்டுகிறது.

எபேசியர் 6:1-4இலிருந்து பழம் பாடம் ஒன்றை கற்றுக்கொள்கிறோம். "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்... உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக." பவுல் வேண்டுமென்றே, "கர்த்தருக்குள்" என்பதைச் சேர்த்திருக்கிறார். கீழ்ப்படியாதிருக்க இது ஒரு தூண்டுதலல்ல. பெற்றோரது கட்டளை உங்களுக்குத் தேவ சித்தந்தானா எனப் பகுத்தறிய ஓர் ஆலோசனை இது.

பன்னிரண்டு வயதான ஒரு யூதப் பையன் பெரியவனாகிவிட்டதாக விழா கொண்டாடுவது யூதர் வழக்கம். இதற்காகவே பன்னிரண்டு வயதான இயேசு எருசலேம் ஆலயத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டிருந்தார். விழாவிற்குப் பின் எருசலேமில் தங்கிவிட இயேசு பெற்றோரிடம் அனுமதி கேட்பதை அவசியமாக எண்ணவில்லை. கோபப்பட்ட பெற்றோரிடம், "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் ? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா ?" என்றார் (லூக் 2:49). தான் தேவனுடைய சித்தத்தை செய்வ தாக நிச்சயமாயிருத்தார். அதோடு பெற்றோரிடம் அனுமதி கேட்டால் கிடைக்காது என இரட்டிப்பான நிச்சயமும் கொண்டிருந்தார். ஆனாலும் கவனிக்க வேண்டியது என்னவென்றால், "பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" என்பதே (வச 51).

இங்கே மெல்லிய வரம்பொன்றைக் காண்கிறோம். பன்னிரண்டாம் வயதில் முதிர்ச்சியடையத் துவங்கும்போது ஒவ்வொன்றாகப் பொறுப்புகளை உங்கள் தோள் மேலெடுக்கப் பழகவேண்டும். நீங்களாகவே சில சாதா தீர்மானங்களை எடுக்கவேண்டும். உங்கள் பெற்றோருக்கு இது அதிர்ச்சியூட்டலாம். பெற்றோரை "கனம்" பண்ணவேண்டுமே. நீங்கள் தேவ சித்தம்தான் செய்கிறீர்களா என நிச்சயத்துக்கொள்ளுங்கள். பின்பு பெற்றோரோடு மரியாதையோடு உங்கள் தீர்மானத்தைக் குறித்துப் பேசுங்கள். உட்கார்ந்து நிதானமாக அவர்களோடு உங்கள் கருத்தை விவாதித்து அனுமதி கோருங்கள். பின்வருமாறு கூறலாம்: "அம்மா, அப்பா, இந்தக் காரியத்தைக் குறித்து ஜெபித்தேன். நான் இதை செய்வதை தேவன் விரும்புகிறாரென்று உணருகிறேன். நீங்கள் இதை விரும்பாவிட்டாலும் நான் இதைச் செய்ய அனுமதி கொடுங்கள். இது ஒரு தவறான தீர்மானமாயிருந்தாலும், வர வர சரியான தீர்மானம் எடுக்க இது எனக்கு ஒரு நல்ல வாழ்க்கைப் பாடமாகும். இது தவறாய் முடிந்தாலும் நீங்கள் என்னைத் தாங்கித் துணைபுரிய வேண்டுமென்று விரும்புகிறேன்." இப்படிச் செய்வதினால் நீங்கள் வளர வளர

மேலும் மேலும் உங்கள் வாழ்க்கைக்குறிய காரியங்களில் தீர்மானங்களெ டுக்கக் கற்று இறுதியில் உங்கள் கால்களிலேயே தைரியமாக நிற்கலாம்.

### 2. மகனும் பாவிகளும்

*"என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே... என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக"* (1:10–15).

பள்ளியோ, கல்லூரியோ, வேலைத்தலமோ, வீடோ — எங்கு திரும்பினாலும் பாவிகளுக்குப் பஞ்சமில்லை. கோராகு என்பவன் தன்னோடு இருவரைக் கூட்டு சேர்த்தான். அவர்கள் இன்னும் 250 பெரும்புள்ளிகளைச் சேர்த்தனர். தேவன் தெரிந்தெடுத்த மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கூட்டங்கூடி: நீங்கள் ரொம்ப பந்தாபண்ணுகிறீர்கள். பாலும் தேனும் ஓடும் இடத்திற்கு அழைத்துச்செல்வதாகக் கூறி எங்கள் காதுகளில் பூ சுத்தப்பார்க்கிறீர்களா என்ன ? என்றெல்லாம் தாறுமாறாகப் பேசினர். மக்களும் சேர்ந்து அழிந்து போகாதபடிக்கு அந்த துஷ்டரை விட்டுத் தூரப்போகும்படி மோசே எச்சரித்தான். பூமி பிளந்து துஷ்டரை விழுங்கிப்போட்டது (எண் 16:1,2,3,12,13,14,26).

உங்கள் அருகே ஒரு கோராகு உண்டோ ? துஷ்டனைக் கண்டால் தூரப்போ ! அவனது பொல்லாத சதிகளின் விளைவுகளில் நீங்களும் பங்கடையாதபடிக்கு அவனுக்கும் உங்களுக்கும் ஒன்றுமில்லாதபடி வெட்டிவிடுங்கள்.

### 3. மகனும் வேத வாக்கியங்களும்

*"என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது... என் வார்த்தைகளை கவனி... பத்திரப்படுத்து... உன் கண்மணியைப்போல் காத்துக்கொள்"* (3:1; 4:20; 7:1,2).

நாம் வேத வாக்கியங்களைக் கற்கவேண்டியதன் அவசியத்தை இவ்வசனங்கள் அழுத்திக் கூறுகின்றன. இயற்கை மனது வேதம் வாசிக்கும் போது ஓட்டமாய் ஓடும். ஆனால் ஒவ்வொரு வசனத்திலும் பிரேக் போட்டு, அதைப் புரிந்துகொள்ளும்வரைத் திரும்பத் திரும்ப வாசிக்கவேண்டும். அவ்வசனத்தில் கேள்விகள் கேட்டு, பதில் கண்டுபிடியுங்கள். வாசிப்பதை பத்திரப்படுத்த இது ஓர் எளிய முறை. உங்கள் கண் விழியை யாராவது எடுக்க முடியுமா ? ஆனால் நமது அனுதின வேத வாசிப்பை களவாடிக்கொண்டு ஓட பொல்லாங்கனுக்கு இடமளிக்கிறோம். எண்ணும் பழக்கம் பழகுங்கள். இரண்டாம் வருகையின் அடையாளங்கள் நமக்கு ஏனோதானோவென்று தெரியும். ஆனால் மத்தேயு 24:5-12 வாசிக்கும்போது பத்தையும் எண்ணிட்டுப் படியுங்கள். வேதத்தை மூடிவிட்டு பத்தையும் சொல்லிப்பாருங்கள். வேதக்



குறிப்பேட்டில், "வருகையின் பத்து அடையாளங்கள்" என்று தலைப்பிட்டு அவற்றை எழுதுங்கள். இப்போது அது இதயத்தில் நீண்ட நாட்களாகவும் ஆழமாகவும் பதிந்துவிடும். எங்கெங்கே எண்ணமுடியுமோ, அங்கெல்லாம் எண்ணுங்கள்.

பிரசங்கம் கேட்கும்போது குறிப்பெடுங்கள். சும்மா கேட்பது ஒரு காதில் விழுந்து மறு காதில் போய்விடும். எழுதுவதினால் கவனம் கூடும். பயனுள்ளதாகயிருந்தால் மறுபடியும் படிக்கலாமே.

"என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே" எனப் பிரசங்கி எச்சரிக்கிறார் (19:27). வேத வசனப்போதனையைத் தண்ணிப் பாடமாய் கற்காவிடில் ஆரோக்கியமான போதகத்தை விட்டு வழிவிலகிப்போவது சுலபமாகும். எனவே கவனம் செலுத்திப் படியுங்கள். திடமான அடித்தளம் வேண்டுமானால் பகுத்துப் போதிக்கக்கூடிய நல்ல வேத போதகர் ஒருவரிடம் கிரமமாக வேதத்தைக் கற்பதும் அவசியம்.

### 4. மகனும் சிட்சையும்

*"என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்* (3:11,12).

வாழ்க்கையில் பாடுகளும் சிட்சைகளும் கடவுள் உன்னை மகனாக நேசிக்கிறார் என்பதற்கு நிரூபணம். தோல்விகள் துன்பங்களூடே செல்லும் போது பல வாலிபர் குழப்பமடைகின்றனர். தெய்வ பயமற்ற தம் நண்பரைக் காணும்போது எல்லாம் வல்ல இறைவனின் பிள்ளையான எனக்கு ஏன் துன்பம் என்று துவளுகின்றனர். செய்வதிலெல்லாம் வெற்றி பெற்றால்... நோயே வராவிட்டால்... ஆல்...ஆல்... ஆல்... நமது தேவனே தேவர்களுக்கெல்லாம் தேவன் என்று நண்பர் அறிவாரன்றோ ? ஆனால் தேவனது வழி வேறு.

ஒன்று கொரிந்தியர் 11ஆம் அத்தியாயம் 32ஆம் வசனம் கூறுவதை கவனியுங்கள். "நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்." ஒரு பயங்கரமான நாளிலே உலகமும் அதின் போக்கிரிகளும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுவர். ஆனால் இவ்வுலகில் தண்டிக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டு, அடிவாங்கி, கடிந்துகொள்ளப்படும் நாம் அந்த அகோரத்திற்குத் தப்பித்துக் கொள்வோம். எது பரவாயில்லை ?— இவ்வுலகில் அடிவாங்குவதா, அவ்வுலகில்

ஆக்கினையடைவதா ? ஊக்கமடையுங்கள். சோர்பூட்டும் காரியங்கள் தேவன் உங்கள் கவனத்தைத் தம் பக்கமாகத் திருப்ப உங்கள் தோளில் தட்டுவதே யன்றி வேறல்ல.

### 5. மகனும் ஞானமும்

*"என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும்... நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது"* (23:15-18). "என் மகனே... ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்ப மாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது" (24:13,14).

வாலிபப் பருவம் குழப்பமும் நிச்சயமின்மையும் நிறைந்தது. உன் எதிர்காலம் என்னவென்று உனக்கே தெரியாது. இதனால் என்ன பயம் ? கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானம் என்று அறிவாய். ஆனால் அது பயனில்லையே என நினைக்கிறாய். தாலந்தில்லை, வரமில்லை, படிப்பில் திகழவில்லை, வேலையில் திறமையில்லை, திருமண வரனும் வரவில்லை. நம்பிக்கை அணைந்துபோகும் நிலை.

இதோ சாலொமோன் சொல்லுகிறார்: கவலைப்படாதே. பாவிகளைப் பார்த்துக் கருவாதே. இலாபமாகத் தெரிகிறதோ இல்லையோ, கடவுள் பயத்தை விட்டுவிடாதே. உனக்கு ஒளிமயமான எதிர்காலமுண்டு... பலர் வாழ்வை ஞானமாய் துவங்கி இப்போது பாதையோரத்தில் விழுந்து கிடக்கிறார்கள். வாழ்க்கை போரடிக்கலாம். ஆனால் ஒவ்வொரு அடியும் கடவுள் பயத்தோடு எடுத்து வை. இறுதியில் பலன் பெறுவாய்.

### 6. மகனும் பால்வினையும்

*"என் மகனே, நீ விலைமகள் மேல் மயங்கித் திரிந்து, பரத்தையின் மார்பைத் தழுவவேண்டியதென்ன ?"* (5:20).

குறுகுறுப்பு மனிதத் தன்மை. வாலிபர் பால்வினை குறித்து எல்லா வற்றையும் அறியவும், அனுபவிக்கவும் துடிக்கின்றனர். என்ன செய்வதென்று தெரியாவிட்டால், திருமணத்தன்று என்ன செய்வது என்று சிலருக்குக் கவலை. இப்பயம் சிலரை விலைமாதரிடம் துரத்துகிறது. இன்னும் சிலர் தம் ஆண்மையைத் திருமணத்திற்கு முன் சோதித்துப்பார்க்க விரும்புகின்றனர். வாலிபருக்கும் கன்னியருக்கும் திரும்புமிடமெல்லாம் சோதனை.

வேதமோ சில எல்லைக்கோடுகளை வரைகிறது. திருமணத்திற்கு முன் பாலுறவை வேதம் பாவமெனத் தடுக்கிறது. எல்லாம் தெரியாமல் திருமண



வாழ்விற்குள் நுழைவது அருமையான சாட்சி. ஆணும் பெண்ணும் பாலுறவைப் பற்றி அ... ஆவிலிருந்து தாலி கட்டிய பின் கற்கவேண்டுமென்பதே தேவனது அழைப்பு. வாழ்வெல்லாம் இருக்கிறதே தெரிந்துகொள்ள !

"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா. உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக. விலைமகள் ஆழமான படுகுழி. பரத்தை இடுக்கமான கிணறு. அவள் கொள்ளைக்காரனைப்போல் பதுங்கியிருந்து, மனிதருக்குள்ளே பாதகரைப் பெருகப்பண்ணுகிறாள்" (23:26–28). ஒழுக்கக்கேடான ஒருவருடன் தொடர்புகொண்டபின் பத்திரமாய் திரும்புவது கடினம். திரும்பினாலும் சேதமடைந்தவனாய்த் திரும்புவாய். "என் மகனே... பெண்களுக்கு உன் பலத்தைக் கொடாதே" (31:2). நீ பாலுறவு கொள்பவரது எண்ணிக்கை பன்மையானால் உன் பலம் குறைவது நிச்சயம். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தேவ நியதி. மிஞ்சினால் கேடுதான்.

ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பதால் அவளோடு விபசாரம் செய்கிறாய் என்று இயேசு சொன்னது பல வாலிபருக்குக் குழப்பம். திருமணமாகாத ஒருவர் திருமணமாகியிருக்கும் ஒருவரை இச்சையோடு பார்ப்பது பாவம். திருமண மாகாதவரையும் எப்படியாவது அன்னாரோடு பாலுறவு கொள்ளவேண்டும் எனும் திட்டத்தோடு பார்ப்பது பாவம். அதுவே இச்சையான பார்வை. ஆனால் மறுபாலரைப் பார்க்கும்போது, ஒரு வாலிபனோ நங்கையோ அடையும் உள்ளுணர்வு இச்சையல்ல. இவ்வுள்ளுணர்வே சரியான முறையில் கையாளப் படும்போது ஒருவரைச் சரியான வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்க நடத்துகிறது.

### 7. மகனும் பெருந்திண்டியும்

*"என் மகனே... மதுபானப் பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்"* (23:20,21).

தேவனுடைய ஆலயமாகிய உடலை சரியாய் நிர்மாணிக்கும்படி ஆரோக் கியமான உணவுப் பழக்கங்களை வாலிபர் பழகுவது அவசியம். வாரம் ஓரிரு முறை உபவாசியுங்கள். சாப்பாட்டுக் காரியங்களில் தன்னடக்கம் தேவை. குடிகாரரும் சாப்பாட்டுராமன்களும் குடிக்கும், ஒட்டலுக்கும் பணத்தை செலவழித்துவிட்டுத் தரித்திராவர். கெட்டப் பழக்கங்களை விடுவது பிற் காலத்தில் சிரமம். மூன்று வேளை வீட்டு ஆகாரத்தை உண்ணுங்கள். பலகாரங்களை அதிகமாய்ச் சாப்பிடாதீர்கள்.

ஆரோக்கியத்திற்கு எளிய வழி உணவில் எண்ணெயையும், சர்க்கரையை யும் குறைத்துத் தினமும் வெளி விளையாட்டுகள் மூலம் உடற்பயிற்சி

செய்வதுதான். கூடியவரை ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் வாங்காமலேயே சமாளியுங்கள். உங்கள் வயதில் நடையும், சைக்கிளும், பொது வாகனங்களுமே நல்லது.

**8. மகனும் அதிகாரிகளும்**

*"என் மகனே, நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட"* (24:21).

நாட்டின் நல்ல குடிகளாக வாழ வாலிபர் முயற்சிக்கவேண்டும். அரசின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கப் பழகுங்கள். இராயனுடையதை இராயனுக்குக் கொடுக்கவேண்டுமென்று இயேசு போதித்தார் (மத் 22:21).

சாலை விதிகளைப் பின்பற்றுங்கள். உரிமம் இல்லாமல் வண்டி ஓட்டாதீர்கள். சாலையில் யாருமே இல்லாவிடினும் சிவப்பு விளக்கை தாண்டாதீர். அளவுக்கு மீறி பிரயாணத்தில் சாமான்களை தூக்கிச்சென்றால் அதற்குறிய கட்டணத்தைச் செலுத்துங்கள். தப்பிக்கொள்ளலாம் என்றெண்ணி டிக்கட் இல்லாமல் பயணமோ, பிளாட்பார்ம் டிக்கட் இல்லாமல் இரயில் நிலையத்திற்குள் செல்லவோ செய்யாதீர். "இரயில் நிற்கும்போது கழிவறைகளைப் பயன்படுத்தாதீர்" என வாசிக்கிறீர்கள். அப்படிச் செய்கிறீர்களா ? சங்கிலியை இழுத்துவிட்டு, இரயில் நின்றவுடன் இறங்கி ஓடாதீர். கண்டவிடமெல்லாம் துப்பும் பழக்கத்தை ஒழியுங்கள். சாலையோரங்களிலெல்லாம் சிறுநீர் கழிக்காதீர். குப்பையை குப்பைத்தொட்டியில் மட்டுமே போடுங்கள். சுவர்களில் கிறுக்காதீர். நாகரீகம் பழகுங்கள். நாம் முழுக் கிறிஸ்தவராகத் திகழவேண்டும் (ரோ 13:1-7).

நடைமுறையில் கற்றுக்கொண்டதால் சாலொமோனின் அறிவுரைகள் வாழ்க்கைக்கு விலையேறப்பெற்றவை. மகனே, மகனே எனக் கனிந்துரைத்துள்ள அவரது அலோசனைகளுக்கு, தகப்பனுக்குக் கீழ்ப்படிவது போல கீழ்ப்படிவாயா ?



**6**



# திருமணப் பரிசு !

செல்வி மேரி கருத்தரித்துவிட்டாள். தாய் தரையில் உருண்டு புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

**அப்பா**: எங்களைத் தலைகுனிய வைத்துவிட்டாயே, மேரி.

**மேரி**: அப்பா, நான் விளக்கவில்லையா அப்பா ?

**அப்பா**: கயிறு திரிக்கிறாயா என்ன ? சும்மா ஜெபம், வேதம் என்று ஓடாதே என்று அடித்துக்கொண்டேன். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். அதான் இப்படி சொப்பனம். எதை மறைக்க கதை விடுகிறாய் ?

**மேரி**: அப்பா, சொப்பனம் இல்லேப்பா, தரிசனம். அம்மா, ஏம்மா இப்படி ஒப்பாரி வைக்கிறீங்கள் ? எனக்கு உமட்டுகிறது. இப்போதான் உங்க உதவி தேவை.

**அம்மா**: நீ செய்த தவறுக்கு நானா பாடுபாக்கணும் ?

**அப்பா**: நடந்தது நடந்துவிட்டது. இனி ஜோசப்புக்குத் தெரியவரும் முன் அவசரப்படுத்தி கலியாணத்தை முடித்துவிடுவது ஒன்றுதான் வழி.

**மேரி**: வேண்டாம், என்னை ஏமாற்றிக் கட்டிக்கொடுக்காதீர்கள்.

**அப்பா**: ஜோசப்பிடம் சொல்லவா சொல்லுகிறாய் ?

**மேரி**: ஆமாம்.

**அப்பா**: உனக்கென்ன கிறுக்கா ? சொப்பனம், தரிசனம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. உண்மையைத்தான் சொல்ல முடியும்.

**மேரி**: எப்படியோ சொல்லுங்கள்.

**அப்பா**: உண்மை தெரிந்த பின்பும் உன்னைக் கட்டிக்க அவன் என்ன பைத்தியமா ?

**மேரி**: இது கர்த்தரால் ஆனதால் யாரும், ஏன், ஜோ நினைத்தால்கூட நிறுத்த முடியாது அப்பா. ஜோவிடம் என் உள்ளத்தைப் பறிகொடுக்குமுன் ஆண்டவரிடம் என் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன். அப்படியே ஜோ வேண்டாமென்றாலும் போகட்டும்.

**அப்பா**: போய் பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பரிடம் சொல்வதுதானே. உன்னைத் தலைமேல் வைத்து கூத்தாடுவார்கள்.

**மேரி**: அப்பா, கொஞ்சம் சும்மா இருக்கிறீர்களா ? எலிசபெத் அத்தையிடம் போய்விடுகிறேன். சிறுவயதில் எனக்கு வேதத்தைப் புகட்டினவர்கள் அவர்களே. அவர்களாவது எனக்கு ஏதாவது சொல்லுவார்கள். மூளையே குழம்புகிறது.

**அப்பா**: எங்காவது போய்த் தொலை.

☆ ☆ ☆

**ஏலி**: ஜோ, உனக்கென்ன பைத்தியமா ? மானங்கெட்டப் பெண்ணையா மணக்கப்போகிறாய் ? விட்டுத் தள்ளு. நல்ல பெண்ணாகப் பார்க்கலாம்.

**ஜோ**: அப்படி வார்த்தைகளைப் பேசாதீங்கப்பா. இது பரிசுத்த ஆவியினால் ஆனது என்று கடவுள் எனக்குக் காண்பித்தார்.

**ஏலி**: யாராவது நம்புவார்களா ? நீயே அவளை கர்ப்பமாக்கினபடியால்தான் அவசரமாய் மணந்துகொண்டாய் என்று அவலம் பேசுவார்கள். வெத்து வாய்க்கு அவல் கிடைத்த கதையாகும். கொஞ்சம் தைரியம் வேண்டும். வேண்டுமானால் இரகசியமாய்த் தள்ளிவிடலாமே.

**ஜோ**: அப்பா, நானென்ன சின்னப் பிள்ளையா ? அவளது குற்றமில்லாததற்காக அவளைத் தவிக்க விடலாமா ? மட்டுமல்ல, அவளைக்காட்டிலும் தேவனை அதிகமாய் நேசிக்கிறேன். அவருக்காக எந்த அவமானத்தையும் சகிக்கத் தயார். அவரது சித்தமே காரியம்.



**ஏலி**: நீ பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான். பின்னால் ஏதாவது சிக்கலானால் அது உன் பாடு.

**ஜோ**: நாங்கள் சேவிக்கும் தேவன் நல்லவரப்பா. அவர் கைவிடமாட்டார். அவசரமாய் நான் அவளை மணந்துகொள்ளாவிடில் அவளைக் கல்லெறிந்து கொன்றுபோடுவார்கள். தேவ திட்டமே தவிடுபொடியாகிவிடும்.

☆ ☆ ☆

ஆக செல்வி மேரியும், செல்வன் ஜோசப்பும் பரிசுத்த விவாகத்தில் ஆடம்பரமின்றி இணைக்கப்பட்டனர்.

இன்றைய காதலுக்கும் 2000 வருடங்களுக்கு முன் நடந்த காதலுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. இன்று ஒருவன் (அல்லது ஒருத்தி) ஒரு பெண்ணை ஐஸ்கிரீமை விரும்பவதுபோல் விரும்புகிறான். ஐஸ்கிரீமை ஆசை தீர தின்று அழித்துவிடுகிறான். அது அழிக்கும் சுயநலக் காதல். அதின் மையம் சிற்றின்பமே. அது பிறர் நலம் பாராது. கடவுளுக்கு அங்கே இடமேயில்லை.

காபிரியேலின் செய்திக்கு மரியாள் செவிசாய்த்ததால் அவளது திருமண ஒப்பந்தமே முறியக்கூடும். ஆனால், காதல் உடைந்தாலும் கர்த்தரின் திட்டம் உடையக்கூடாது என்று திடமாயிருந்தாள். யோசேப்பிற்கோ ஒரு கன்னிப் பெண்ணை மணக்கும் கனவு கானல் நீராகி ஒரு தாயை மணக்கவேண்டி வந்தது. தன் திருமணத்திலும் தேவ சித்தமே நிறைவேறவேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றுவிட்டான். இது ஐஸ்கிரீம் காதலல்ல. இருவரும் கரங்கோர்த்து முதல் கிறிஸ்துமசை நோக்கி நடைபோட்டனர் என்பதை உலகம் அன்று அறியவில்லை. உலகத்திற்குப் பரிசாக ஒளியானவரை ஈந்த இந்த காதல் பறவைகளுக்கு நிகரான ஜோடி யார் ?

அருமை வாலிபரே, உங்கள் காதல் உங்களையே பசியாற்றும் சுயநலக் காதலா ? அல்லது திருமணப்பாதையில் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்திலும் தேவனையே பிரதானமாக நோக்கியிருக்கிறீர்களா ? இவ்வுலகத்திற்கு உங்கள் திருமணப் பரிசு என்ன ?

7




# சொல்லதில் கூறுவீர், வாழ்வதில் சாதிப்பீர் !

சேவல் ஒன்று சுவற்றைத் தாண்டிப் பறந்து அண்டை வீட்டை அடைந்தது. அண்டை வீட்டு ஆயர் அதை அடைத்து வைத்து ஞாயிறு மதியம் சமைக்கும்படி மனைவிக்குக் கட்டளையிட்டார். அவரது வல்லமையான ஞாயிறு பிரசங்கம், “பிறர் பொருளை இச்சியாதே” என்பதே. குத்தப்பட்ட ஐயரம்மா சேவலைத் திறந்துவிட்டார். நாக்கை சப்பைக்கொட்டிக்கொண்டு வந்த ஆயர் சாம்பார் சோற்றைக் கண்டு குமுறினார். பிரசங்கத்தைக் கேட்டு சேவலை விடுவித்து விட்டேன் என்ற மனைவிக்கு ஆவேசமாய் பதிலளித்தார், “உனக்கா பிரசங் கித்தேன் ? ஊருக்கல்லவா உபதேசம்.” வாய்ப்பேச்சு பேசி வாழ்க்கையில் காட்டாத கலாச்சாரம் நமது வாழ்வை ஆட்கொண்டுவிட்டது. காய்ந்த தரையில் நிற்கும் படகு போல நம்மில் பலரும் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறாமல் நிற்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. வாய்ப்பேச்சு வீரர் பலுகிப்பெருகி வருகின் றனர். நடைமுறை வேந்தர்களோ குறைந்து குறுகிக்கொண்டே வருகின்றனர்.

“தேவனுடைய வார்த்தையைக் **கேட்டு**, அதைக் **காத்துக்கொள்ளு கிறவர்களே**” இயேசுவின் தாயைக் காட்டிலும் பாக்கியவான்கள் (லூக் 11:27,28).

“அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று **சொல்லுகிறவன்**, அவர் நடந்தபடியே தானும் **நடக்கவேண்டும்** (1 யோ 2:6). பலர் இயேசுவை ஏற்றுக் கொண்டாலும் சிலரே பரலோகத்தில் நுழைவர். ஏன் ? ஏனெனில் நடப்போர்



சிலரே. உங்கள் நடையைக் குறித்து நீங்கள் பேசலாம்; ஆனால் உங்கள் பேச்சுக்கேற்ப உங்களால் நடக்கமுடியுமா ? சொல்வது சுலபம், செய்வது கடினமன்றோ ? ஒட்டகங்களுக்கு தண்ணீர் இறைத்து ஊற்றுவதாகச் சொன்ன ரெபேக்காளின் வார்த்தைகள் வாய்ச்சாலமல்ல. “சீக்கிரமாய்,” “ஓடி,” மொண்டு பத்து ஒட்டகங்களின் தாகத்தையும் தீர்த்தாள். தன் தலைவனின் மகனுக்கு ஏற்றவள் ரெபேக்காளே என அம்மனிதனை தீர்மானிக்கச் செய்தது அதுவே.

நமது தேவன் செயல்வீரர்; வாயால் **சொல்வதை** கையால் **நிறை வேற்றுகிறவர்** (1 இரா 8:15; எண் 23:19). இயேசுவும் மோசேயும் **வேலையிலும் வார்த்தையிலும்** வல்லவராயிருந்தனர் (லூக் 24:19; அப் 7:22). ஆதியிலே **வார்த்தை** இருந்தது (சொல்) (யோ 1:1). அதோடு நிற்கவில்லை, அந்த வார்த்தை **உடலானது** (செயல்) (யோ 1:14). வார்த்தை உடலானதற்கு ஒரு மணியான எடுத்துக்காட்டு இயேசு. அவருடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டதோடல்லாமல் அவரே கிருபையினால் நிறைந்தவரா யிருந்தார் (லூக் 4:22; யோ 1:14). பிசாசு உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே குறுக்கிடுவான். வாயிலிருக்கும் உங்கள் வார்த்தை இருதயத் திற்கும் வாழ்க்கைக்கும் இறங்கவேண்டும். பில்லி கிரஹாமின் மகன், “என் அப்பா அரங்கத்திலும், அந்தரங்கத்திலும் ஒன்றேதான்” என சாட்சி பகருகிறார். பலரது தோல்வி இங்குதான். உங்கள் வார்த்தையை நடை முறைப்படுத்தாதபடி பிசாசு விடாப்பிடியாய்ப் போராடுவான். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டுமானால் நமது வாழ்வின் குறைந்தது ஏழு பகுதிகளிலாவது சொல்லதில் கூறுவதை வாழ்வதில் சாதித்துக் காட்டவேண்டும்.

### 1. விசுவாச வாழ்வு

*“கர்த்தராகிய இயேசுவை நீ உன் **வாயினாலே அறிக்கையிட்டு**, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் **இருதயத்திலே விசுவாசித்தால்** இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்”* (ரோ 10:9,10).

நீண்ட பாவப்பட்டியலையும், இயேசுவின் கர்த்தத்துவத்தையும் அறிக்கை யிடுவதினாலே இரட்சிப்படைகிறோம் என்ற தவறான கருத்து பலருக்கு உண்டு. நமது பாவத்தைவிட்டு நாம் மனந்திரும்பவேண்டுமென்பதும் கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டுமென்பதும் உண்மைதான். ஆனால் இரட்சிப்பு என்பது அது மட்டுமல்ல, எனது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்தார்; தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இருதயப் பூர்வமாக நம்புவதே இரட்சிப்பு. இயேசு கடவுளுடைய மைந்தன் என்பதை யூதாஸ் நம்பவில்லை என்று அறிவீர்களா ? (யோ 6:64).

ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான்; அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னர் ஆபிரகாம் தேவன் மேல் அப்படிப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட நம்பிக்கையோடிருந்தான். ஆகவே தான் கடவுள், "போ" என்று சொன்னவுடனே, "எங்கே ஆண்டவரே ? பாதை எங்கே ?" என்று கேட்காமல் மூட்டைமுடிச்சைக் கட்டிக்கொண்டு உடனடியாக கிளம்பிவிட்டான். போகுமிடமின்னதென்பதை அறியாமல் போனான். எப்படி ? தனக்கு முன்செல்பவர் யாரென்று அவன் அறிந்திருந்தபடியால்.

இவ்வாழ்க்கையில் இப்படித்தான் நாம் நடைபோடவேண்டும். கேள்வி கேட்காமல் தேவனோடு செல்வோம். பார்த்து நடப்பவர்களைவிட காணாமல் விசுவாசித்து நடப்பவர்களையே பாக்கியவான்கள் என்கிறது வேதம். கடவுளை நாம் காணமுடியாது. எல்லாமே இருளாகவே இருக்கலாம். பிசாசு நமது விசுவாசத்தைத் தொடுவான், பின்பு அசைப்பான், பின்பு வேரோடு பிடுங்க முயற்சிப்பான். வெற்றி வாழ்க்கை வாழ விரும்புவீர்களேயானால் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவேண்டும். "நீ இரட்சிக்கப்பட்டிருகிறாயா ? பார்த்தால் அப்படித் தெரியவில்லையே ? இன்னும் பாவந்தானே செய்கிறாய் ? சந்தேகமாயிருக்கிறதே. மோட்சத்திற்குப் போகிறாயென்று உனக்கு எப்படித் தெரியும் ?" என்றெல்லாம் பிசாசு மனதில் கேள்விகளை எழுப்பிவிட்டுக் கொக்கரிப்பான். "கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது" என்று பிசாசிடம் சொல்வீர்களானால் உங்கள் மனப்புயல் மந்தமாருதமாக மாறிவிடும்.

இரட்சிப்பு வேறு, பரிசுத்தமாகுதல் வேறு. இரட்சிப்பு என்பது பிரசவத்தைப் போல ஒரே நாள் விவகாரம். இயேசு கிறிஸ்துவை நம்பும் அச்சணமே நீ இரட்சிப்படைகிறாய். பரிசுத்தமாகுதல் வளர்ச்சிக்கு ஒப்பானது. இரட்சிப் பிற்குப்பின் வாழ்வெல்லாம் தொடரும் அனுபவமிது. குளிப்பாட்டிவிட்டாலும் பன்றிக்கு சாக்கடைதான் ஜிகினா கவர்ச்சி: அதுதான் அவிசுவாசி. பாவத்தில் உழலவே விரும்புகிறான். ஆட்டுக்குட்டியோ சாக்கடைப்பக்கமே போகாது. அப்படியே விழுந்துவிட்டாலும் தன் அழுக்கைப் போக்கவே முயலும். இவனே பாவத்தை வெறுக்கும் விசுவாசி. இதுவே அவிசுவாசிக்கும் விசுவாசிக்குமுள்ள வேறுபாடு.

கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோல உங்களைப் புடைக்கிறதற்கு சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான் என்று இயேசு பேதுருவிடம் கூறினார். ஆனால் பேதுருவின் **விசுவாசம்** ஒழிந்துபோகாதபடிக்கு அவர் விண்ணப்பம் பண்ணினார் (லூக் 22:31,32). நுனிக்காலில் ஆயத்தமாயி ருங்கள். சாத்தான் உங்களுக்கும் அதையே செய்வது நிச்சயம். தோல்விகள், சிக்கல்கள், சோதனைகள் உங்களைத் தாக்கும். உன் கடவுள் எங்கே என்று சாத்தான் கேட்பான். தோல்விகளைச் சந்திக்க முடியாதபடி பலர் உயிரை



மாய்த்துக்கொள்கின்றனர். அதுவும் சாத்தானின் சதியே. யோபு ஒரு நாள் அப்படிப்பட்ட சூழ்நிலையைச் சந்தித்தான். தேவனையே சார்ந்துகொண்டு நம்பிக்கையோடு நடந்துகொள்ள தீர்மானித்தபோது அவனது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது. தேவனை தூஷித்து உயிரை மாய்த்துக்கொள் என்றாள் மனைவி. தேவனை மறுதலித்துவிடுவான் என்று சாத்தான் சவால்விட்டான். யோபுவோ, "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கை யாயிருப்பேன்" என்றான் (13:15). நாம் அப்படிச் சொல்ல முடியுமா ? "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் **விசுவாசம்** சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேது 1:7).

"ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது ? ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன்: **மாட்டேன் என்றான்**; ஆகிலும், பின்பு மனஸ்தாபப்பட்டுப் **போனான்.** இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன் **போகிறேன்** ஐயா, என்று **சொல்லியும் போகவில்லை.** இவ் விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் ?" என்று இயேசு கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். சொன்னவனல்ல செய்தவனே. இயேசு விளக்கினார், "ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே இறையரசில் நுழைகிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்... ஆயக்காரரும் வேசிகளுமோ... **விசுவாசித்தார்கள்**" (மத் 21:28–32). இங்கே, வசன வல்லுநர்களான பிரதான ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் இயேசு விசுவாசத்தைக் குறித்துப் பேசுகிறார். போவோம் என்று சொல்லி அவர்கள் போகவில்லை. சமுதாயத்தில் கீழ்த்தரமாக எண் ணப்பட்டவர்களோ மனந்திரும்பி, விசுவாசித்து இறையரசில் நுழைந்தார் கள். நீங்கள் மோட்சத்திற்குப் போகமுடியாது என்று சாத்தான் சொன்னால், "ஆயக்காரரும் வேசிகளும் மோட்சத்திற்குள் போகிறார்கள்; நான் அவர்கள் பின்னே போகிறேன்" என்று சொல்லுங்கள். பிசாசின் பொய்களை நம்பாதீர்கள். விசுவாசப் பேச்சை விசுவாச நடையாக்குங்கள். மற்றபடி விசுவாசித்து நடுங் கியும் பிசாசுகள் இறையரசில் நுழைய முடியாததுபோல் நீங்களும் இருப்பீர்கள் (யாக் 2:19).

**2. வசன வாழ்வு**

*"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி* ***செய்கிறவனே*** *பரலோகராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று* ***சொல்லுகிறவன்*** *அதில் பிரவேசிப்பதில்லை"* (மத் 7:21).

இன்றைய கிறிஸ்தவத்தின் வாதையாகிய வாய்ச்சாலம் பேசுகிறவர்களைத்தான் பிற்பகுதி குறிக்கிறது. பேசுவதை நிறுத்தி நடையில் கவனம் செலுத்துவோம். அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள், பிசாசுகளைத் துரத்தினார்கள், அற்புதங்களைச் செய்தார்கள். லூக்கா 13:26 கூடுதல் விவரமளிக்கிறது. அவர்கள், ''உம்முடைய சமுகத்தில் போஜனபானம்பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே'' என்று சொல்லுவார்கள். அவரோ, ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள்'' என்பார். போலீசால் பிடிபட்ட ஒருவன், ''எனக்கு I.G.யைத் தெரியும்'' என்கிறான். பயந்துபோன போலீஸ் உடனே சல்யூட் அடிக்கிறான். அவனோ, ''ஆனால் I.G.க்கு என்னைத் தெரியாது'' என்கிறான். நகைச்சுவையாக இருந்தாலும், ''ஆண்டவரே உம்மை எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று நாம் முகமலரும்போது அவர், ''ஆனால் உன்னை எனக்குத் தெரியவே தெரியாதே'' என்று முகம் சுளிப்பாரானால் எத்தனையாய் நமது முகம் சுண்டிவிடும். இன்று நாம் சிரிக்கலாம், ஆனால் அன்று ஆண்டவர் நம்மை மறுதலிப்பது எத்தனை பயங்கரம்! நாம் தேவனை அறிவோம். தேவன் நம்மை அறிவாரா? சொல்லுபவர்களையல்ல தம் சித்தம் செய்பவர்களையே அவர் அறிவார். எச்சரிக்கை!

''அவரை அறிந்திருக்கிறேனென்று **சொல்லியும்** அவருடைய **கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன்** பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை ... அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று **சொல்லுகிறவன்**, அவர் நடந்தபடியே தானும் **நடக்கவேண்டும்**'' (1 யோ 2:4,6). பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க விரும்புகிறவன் இயேசுவை உற்றுநோக்கி அவரைப் போலவே நடந்துகொள்ளவேண்டும். மோட்சமென்னவோ தங்கள் கையில் இருப்பதுபோல சிலர் சொடுக்குகின்றனர். விண்வீட்டில் நுழைவது விளையாட்டல்ல, வானளாவ ஊழியத்தைக் கட்டுவதுமல்ல. அது பிதாவின் சித்தம் செய்வது. அது சிரத்தை எடுத்துக் கீழ்ப்படிவதாகும். அப்படியானால், ''தகப்பனது சித்தம் என்பது என்ன?'' என்ற கேள்வி எழுகிறது. அதை எப்படி அறிவோம்? எனவேதான், வேதத்தை வாசிக்காதவர்கள் தேவ சித்தத்தை அறிய முடியாதென்றும் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியாதென்றும் சொல்கிறோம். வாழவைக்கும் அமுதமாகிய வேதத்தை தன் விரல் நுனியில் வைத்திராதவர் வாழ்க்கையில் பல தவறுகளைச் செய்வர்.

வேதாகமம் உங்கள் பாடப்புத்தகத்திற்கு பின்னாக வருவதேன்? ஆகவேதான் இந்நாட்களில் தேவ வார்த்தையின் வெளிப்பாடு அரிதாகிவிட்டது. எல்லாரது மனதும் M.Phil செய்வது, Ph.D வாங்குவது, வேலை, சம்பாத்தியம், வீடு கட்டுவது போன்றவைகளாலேயே நிரம்பியிருக்கிறது. வழிகாட்டுபவன் பிசாசு. வெகு சிலரே, ''நான் வேதத்தை திறம்பட கற்கவேண்டும், தினமும் ஒரு மணி நேரமாவது வாசிக்கவேண்டும், வேத அகராதி,



ஆராய்ச்சி வேதாகமம் வாங்கவேண்டும், கடினமான பகுதிகளைப் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றெல்லாம் எண்ணுகின்றனர். சிறுவன் இயேசு என்ன செய்தார்? வேதப் பண்டிதருடன் பேசி வினவினார். வேதத்தைக் கற்றுத்தேற தம்மை அர்ப்பணிப்பவர் யாரேனுமுண்டோ? அதைக் கரைத்துக் குடிக்க வாஞ்சிப்பவருண்டோ? அவருக்கு தேவன் தம்முடைய வார்த்தையை அருளுவார் (யோ 6:45). பன்றிகளுக்கு முன்னால் தம்முடைய முத்தைப் போடமாட்டார். எங்கு, எப்போது, ''முடியாது'' என்று சொல்லவேண்டுமென்று அறிவீர்களானால் வேதத்தில் ஒன்றிப்போக போதுமான நேரம் கிடைக்கும். பள்ளி செல்லாமலேயே தம் கடின உழைப்பினால் இயேசு வேதப் பண்டிதரானார் (யோ 7:15).

இன்று கோயிலுக்கும் கூட்டங்களுக்கும் கன்வென்ஷன்களுக்கும் சென்று காற்றடைத்த பலூன் போன்ற செய்திகளைக் கேட்டு வெறுமையாய் பசியாய்த் திரும்பி வருகிறோம். உங்களுக்கு வசனத்தைக் கொடுத்து உலகைப் போஷிக்க தேவன் தீர்மானிக்கலாமே.

மத்தேயு 7:24இலிருந்து தொடர்ந்து வாசிப்போம். ''ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் **கேட்டு**, இவைகளின்படி **செய்கிறவன்** எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்.'' இந்தக் கன்மலையில் நமது வாழ்வின் அடித்தளத்தை அமைப்போமானால் எந்த சுனாமியும் நம்மைக் கொண்டுசெல்லாது.

''நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் **கேட்டு** இவைகளின்படி **செய்யாதிருக்கிறவன்** எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனிதனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்றடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்'' (வச 26,27).

இவர்கள் யார்? தேவனை மதியாமல் அவரது வார்த்தையை அசட்டை செய்பவர்களே. ஒருவன் வீடு கட்டினான். மழை சொரிந்து வெள்ளம் அவ்வீட்டில் மோதியது. அந்த வீடோ உறுதியாய் நின்றது. யாரது? நோவா! கொப்பேர் மரத்தினால் கப்பல் கட்டும்படி தேவன் கட்டளையிட்டார். ''இல்லை ஆண்டவரே, அருகிலேயே மரம் வெட்டிக்கொள்ளுகிறேன்'' என்று அவன் சொல்லவில்லை. நீளத்தையும், அகலத்தையும் ஆண்டவர் குறிப்பிட்டார். அப்படியே செய்தான். தேவன் சொன்னதை சொன்னதுபோல், மறுவார்த்தையின்றி செய்தான். தேவனுடைய வார்த்தையின்றி இவ்வீட்டிற்கு வேறு அடித்தளம் கிடையாது. எந்த வெள்ளமும் அதை அழிக்க முடியவில்லை. மாறாக வெள்ளம் அதை மலைமேல் கொண்டுசேர்த்தது. நமது வாழ்வு தேவனுடைய வார்த்தையின்மேல்

கட்டப்படுமானால் எந்த ஆபத்தோ, சிக்கலோ, விபத்தோ, நெருக்கடியோ, வியாதியோ எல்லாமே நம்மை மேலேதான் கொண்டு செல்லுமேயொழிய கீழே தள்ளிவிடாது.

பழைய ஏற்பாட்டு காலத்திலும் இதே கதைதான். தேவன் இஸ்ரவேலைக் குறித்து, ''மக்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் மக்கள்போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் **கேட்கிறார்கள்**; ஆனாலும் அவர்கள் அவைகளின்படி **செய்கிறதில்லை**; அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் **பேசுகிறார்கள்**, அவர்கள் **இருதயமோ** பொருளாசையைப் பின்பற்றிப்போகிறது. இதோ, நீ இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுமுடையவன் பாடும் இன்பமான பாட்டுக்குச் சமானமாயிருக்கிறாய்; அவர்கள் உன் வார்த்தைகளைக் **கேட்கிறார்கள்**, ஆனாலும் அவைகளின்படி **செய்யாமற்போகிறார்கள்**'' (எசே 33:31,32). செவிடன் காதில் ஊதின சங்குதான்!

'நான் கவனித்துக் கேட்கிறேன்' என்று உங்களையே ஏமாற்றிக்கொண்டு, ஒரு காதில் கேட்டு மறுகாதில் வெளியே விடுகிறவர்களாகாதீர்கள். கேட்பதைச் செய்யுங்கள். கேட்டும் செய்யாதவன் கண்ணாடி பார்த்துப் போய் சட்டென்று தான் யாரென்பதையும் எப்படி இருக்கிறானென்பதையும் மறந்து போகிறவன் போலிருக்கிறான். ஆனால் தேவனது வெளிப்படுத்தலாகிய வார்த்தையை வாசித்து அதன்படியே செய்கிறவன் மூடனல்ல, செயல்வீரன் (யாக் 1:22-25).

வசனத்தைச் சொல்வது சுலபம், நடைமுறைப்படுத்துவதோ கடினம். ஒரு எடுத்துக்காட்டு: இவ்வுலகில் கொடூரமாய் உயிர்விட தேவன் தம் மகனை அனுப்பச் சித்தங்கொண்டபோது, இயேசு, ''தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்'' என்றார் (எபி 10:9). ஆனால் நேரம் நெருங்க, நெருங்க, மரண இருளின் பள்ளத்தாக்கில் அவர் கடந்து செல்லும்போது, ''இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கட்டும்'' என்று கதறினார். பிதாவாகிய தேவனுக்கு ஒரு சித்தமிருந்தது. மனித குமாரனாகிய இயேசுவுக்கு ஒரு சித்தம் இருந்தது. இரண்டு சித்தங்களும் மோதின. இயேசு கதறித் துடித்து இரத்த வியர்வை வியர்த்துதான், தன்னை முற்றிலுமாய் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, ''உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும்'' என ஜெபித்தார்.

நமது போராட்டங்களும் அப்படித்தான் இருக்கும். பிதாவின் சித்தம் ஒருபக்கம், நமது சித்தம் மறுபக்கம். இயேசுவுக்காக ஜீவனைவிட வாக்குப் பண்ணிய பேதுரு அவரை மறுதலித்தான். பணக்காரனாகிய ஒரு இளைஞன் நித்திய ஜீவனை அடைய ஆசைப்பட்டான். இயேசு நீ போய் உனக்கு



உண்டானவைகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு எனக்குப்பின் வா என்று சொன்னபோது அதிர்ந்து நின்றான். தனது மாடிக் கட்டிடங்களையும், கார்களையும், வங்கி சேமிப்புகளையும், தோப்புகளையும், மந்தைகளையும் எண்ணிப்பார்த்தான். எப்படி முடியும்? தலைகுனிந்து திரும்பிப் போய்விட்டான். ஒரு நாள் இப்படிப்பட்ட கடினமான தெரிந்தெடுப்பைச் சந்திப்போம். ஆபிரகாம் தன் ஒரே மகனை தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தான். சொல்லதில் கூறுவதை வாழ்வதில் சாதிக்க உங்களது சுயசித்தத்தை தேவ சித்தம் நிறைவேற்ற தியாகம் செய்வீர்களா? அது கடுங்கோடை அனுபவமாயிருந்தாலும் அதன்பின் குற்றாலச் சாரல் வீசுமென்பதில் ஐயமில்லை.

### 3. ஜெப வாழ்வு

*''இந்த மக்கள் தங்கள் **வாயினால்** என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் **உதடுகளினால்** என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் **இருதயமோ** எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்''* (மத் 15:8,9).

ஏனோதானோ ஜெப வாழ்வை உடையவன் இளவேனிற்காலத்தில் இலை உதிர்த்து நிற்பான். ஜெபம் மற்றும் ஆராதனையை நாடகமாக்குபவர்களை இங்கே காண்கிறோம். அதைவிட்டு தேவனோடு ஆழ்ந்த உறவாடும் உறவை உருவாக்கவேண்டும். இதுவே பூத்துக்குலுங்கும் வெற்றி வாழ்வின் இரகசியம். எவ்வளவு அதிகமாக ஜெபிக்கிறீர்களோ அவ்வளவு வெற்றிகரமாய் வாழ்வீர்கள். உங்கள் ஜெபவாழ்வை கெடுக்க சாத்தான் எது வேண்டுமானாலும் செய்வான். உதடுகளில் உச்சரிப்பு இருக்கும்போதே உங்கள் மனதையும் இதயத்தையும், மறுபாலர், பரீட்சை, வேலை போன்றவை, 'அதிக முக்கியமானவைகளென' இழுத்துச்சென்றுவிடுவான். அவனுக்கு விட்டுக்கொடுத்துவிடாதீர்கள். அவன் கொண்டுவரும் ஒவ்வொரு இடையூறுக்கும் ஒரு மாற்று மருந்தைக் கண்டுபிடியுங்கள். ஜெபத்தில் தூங்கினால் நடந்துகொண்டே ஜெபியுங்கள்; மனது அலைந்தால் வாய்விட்டு ஜெபியுங்கள்; ஜெபக் குறிப்பேட்டைப் பார்த்து ஜெபியுங்கள்.

இயேசு, ''உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்'' என்றார் (யோ 4:23,24). இதயப்பூர்வமான ஆன்மீக ஆராதனையே இங்கு அழுத்திக் கூறப்பட்டுள்ளது. தேவன் தேடும் நபர் இவரே.

நாடகமேடை ஜெபத்தை இயேசு கடிந்துகொண்டார். "நீ ஜெபம் பண்ணும் போது மாயக்காரரைப் (நடிகர்) போலிருக்கவேண்டாம்; மனிதர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதே யுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்" என்றார் (மத் 6:5-7). தகப்பனோடு பேசுவது போல சாதாரணமாக தேவனோடு பேசுங்கள். பச்சைப் பச்சையாய் விவரம் விவரமாய் பேசப்பழகுங்கள்.

மாய்மாலமான உபவாசத்தையும் இயேசு கண்டித்தார். "நீங்கள் உப வாசிக்கும்போது மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனிதர் காணும்பொருட்டாக தங்கள் முகங் களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்த தென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 6:16). "என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்களே?" என்று சிலரைக் கேட்டிருக்கிறேன். "இன்று எனது உபவாசத்தின் 35ஆவது நாள்" என்பர். நமது உபவாசம் பிறருக்கு மறைந்திருக்க வேண்டுமென்று இயேசு போதித்தார். எண்ணெய் வைத்து, தலைவாரி, பவுடர் போட்டு, நல்ல உடை உடுத்தி பளிச்சென்றிருங்கள். ஜம்பமடிப்பதை விரும்புகிறவரல்ல தேவன்.

இயேசு, "விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்றார். ஒரு நாள் இயேசு ஜெபிப்பதைப் பார்த்த சீடர் அவரிடம் வந்து ஜெபிக்கக் கற்றுக்கொள்ளும் தம் ஆசையைத் தெரிவித்தனர். இயேசுவும் சிறந்த மாதிரி ஜெபமொன்றைக் கற்பித்தார். சீடரும் கற்றுக் கொண்டனர். ஆனால் மற்றொருநாள் இயேசு விழித்திருந்து ஜெபிக்கச்சொல்லி அப்புறம் போனார். நடந்ததென்ன? சீடர் தூங்கினர். "சோதனையில் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும்" என ஜெபிக்கக் கற்பித்தார். அவர்கள் தூங்கின போது அவர்களை எழுப்பி, "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று எச்சரித்தார் (மத் 26:41). சீடர் பரிதாப தோல்வி அடைந்தனர். நாம் ஜெபிக்க வாஞ்சிக்கலாம், கற்கலாம், ஜெபத்தைக் குறித்து பிரசங்கிக்கலாம் ஆனால் ஜெபிக்க வேண்டுமே. இயேசு ஜெப போதகர் மட்டுமல்ல, ஜெப வீரனாயிருந்தார்.

வேறொரு கோணத்தில் பார்க்கலாம். "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக் 22:44). தரையில் விழவேண்டுமானால் வடியுமளவு இருந்திருக்கவேண்டும். இது



கோடை காலத்தில் நடந்ததா? குளிர்காலத்தில் நடந்ததா? குளிர்காலத் தில். பேதுரு நெருப்பில் குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது இயேசு இரத்த வியர்வை வியர்த்துக்கொண்டிருந்தார். குளிர்காலத்தில் வியர்க்கக் கடின உழைப்பு அவசியம். அப்படிப்பட்ட ஜெபமே இயேசுவினது. நாமோ கோடை காலத்தில் கூட வியர்க்குமளவு ஜெபிப்பதில்லை. இன்றைய அவசர வாழ்வு பலர் தம் ஜெபவாழ்வின் தரத்தை தியாகம் செய்யவைத்துள்ளது. எப்படி ஜெபிக்கிறோம்? காலையில் பல் துலக்காமல் போர்வையால் போர்த்திக் கொண்டு படுக்கையில் படுத்துக்கொண்டா? அது ஜெபமல்லவே. குதித் தெழுந்து, பல் துலக்கி, முகம் கழுவி, தலைவாரி, பவுடர் போட்டு, காப்பி குடித்து, கைதட்டி ஒரு பாட்டுப் பாடுங்கள். பின்பு வாய்விட்டு ஜெபியுங்கள். குள்ளநரி பிசாசை விரட்டியடிக்க அதுவே வழி.

### 4. இச்சையடக்க வாழ்வு

*"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் **இச்சை யடக்கமாயிருப்பார்கள்...** மற்றவர்களுக்கு **பிரசங்கம்பண்ணுகிற** நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் **உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்**"* (1 கொரி 9:25-27).

ஒழுக்கமில்லாவிட்டால் ஒழிந்தேபோவோம். நிறை வயிற்றுடன் ஓட முடியுமா? தங்கப்பதக்கம் வேண்டுமென்றால் எல்லாவற்றிலேயும் கட்டுப் பாடுடன் இருக்கவேண்டும். பிரசங்கிக்கும் உதடுகளும் கட்டுப்பாடுள்ள வாழ்வும்! போதிக்கிறதைக் கைக்கொள்ளாவிட்டால் ஆகாதவராய்ப் போவோமே. போதக வல்லுநராகிய வேதபாரகரையும் பரிசேயரையும் வெளுத்து வாங்கினார் இயேசு: "நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் **சொல்லு கிறார்கள்**, சொல்லியும் **செய்யாதிருக்கிறார்கள்**" என்றார் (மத் 23:3; 5:19). பல பிரசங்கிகளும் இப்படித்தான். சொல்வது ஒன்று, செய்வது ஒன்று. தண்ணீரைப் பிரசங்கித்து மதுவைக் குடிக்கிறார்கள். நமது வாழ்வும் வாயும் ஒன்றித்துப்போகவேண்டும். கவலையீன வாழ்வு கருகிப்போகும்.

2 தீமோத்தேயு 3:6,7ஐ கவனியுங்கள்: "பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, **எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற** பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்." பேதைப் பெண்களைத் தங்கள் தேனொழுகும் பேச்சினால் ஆதாயப்படுத்திக் கொள்ளும் பல காட்டு மிருகங்கள் உண்டு. ஏமாறுபவர் யார்? இவர்கள் கோவிலுக்கும் கன்வென்ஷன்களுக்கும் கூட்டங்களுக்கும் வேதாகம வகுப்பு களுக்கும், வேதக் கருத்தரங்குகளுக்கும் செல்பவர். குறிப்பெடுப்பர்,

கரைத்துக்குடிப்பர், வேத போட்டிகளிலும் கலந்துகொள்வர். சத்தியமோ அவர்கள் தோலுக்குக் கீழே இறங்காது. ஏட்டுச்சுரைக்காய்தான். கற்றதைக் கடைபிடிக்க முயற்சிக்காததால் இச்சைகளால் இழுப்புண்டு பாவத்தில் விழுகிறார்கள். இவர்களைப்போல் இராதீர்கள். சத்தியமானது உங்களைக் கட்டுப்படுத்தக் கற்பிக்கவேண்டும். முக்கியமாக பால்வினைப் பகுதியில். கவர்ச்சிகரமானவர் கரங்களில் விழுந்துவிடாதீர்.

முதலாவது, பிறபாலரை சோதிக்கக்கூடாது. பிறரது வாழ்வோடு விளையாடக்கூடாது. இரண்டாவதாக மறுபாலர் சோதிக்கும்போது தப்பித்துக் கொள்ளவேண்டும். இந்நாட்களில் பெண்பிள்ளைகள் தைரியமாக ஆண்களை அன்போடு தொட்டுத் தட்டிப் பேசுகின்றனர். பின்பு அந்த ஆண்கள் தம்மிடம் தவறாக நடந்துகொள்ளும்போது குற்றஞ்சாட்டுகின்றனர். TV, கணினி, செல்போன் யாவும் நல்லதுதான். ஆனால் அவற்றைக் கையாளும் முதிர்ச்சி உங்களுக்கு இல்லாவிட்டால் அவை பூதங்களாய் உங்களையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடும். திருமணத்திற்குமுன் பாலுறவு தேவ சட்டங்களுக்கு முரணானது.

ஆண்–நண்பர், பெண்-நண்பர் வைத்துக்கொள்வது இன்று நாகரீகமாகிவிட்டது. ''லீலைகளின் (flirting) நன்மைகள்'' என்ற ஒரு கட்டுரையை நல்லதொரு பத்திரிக்கையில் கண்டு வாலிபர் எப்படி திசைதிருப்பப்படுகின்றனர் என அதிர்ச்சியுற்றேன். லீலைகளின் முடிவு ஆபத்தானது; இழப்பு உங்களுக்குத்தான். மறுபாலருடன் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. பொது இடங்களிலும் விழாக்களிலும் பேசுங்கள், பழகுங்கள். ஆனால் ஒரே நபரோடு நெருங்காதீர்கள். முக்கியமாக பள்ளி, கல்லூரி நாட்களில் கவனத்தைப் படிப்பில் செலுத்துங்கள். இது காதலிக்கும் காலமல்ல. பெற்றோரை முற்றிலுமாய் ஒதுக்கி வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப்பது, கரணம் தப்பினால் மரணம் போன்றது. பலர் மணமாகாத மற்றும் மணமானவரின் லீலைகளில் ஏமாந்து மனதைப் பறிகொடுத்துவிடுகின்றனர். கண்மூடித்தனமான காதல் கண்களைக் குருடாக்கி உங்கள் எதிர்காலத்தை சிதைத்துவிடும். பெண்கள் கர்ப்பந்தரிக்கின்றனர் அதைக் கலைத்தும்கொள்கின்றனர். இவையெல்லாம் மன பாதிப்பை ஏற்படுத்தும் அனுபவங்கள். சிலர் பாலுறவு நோய்களையும் பரிசாகப் பெறுகின்றனர். AIDS நோய்க்கு விடிவு கிடையாது. அது ஒரேயொரு பாலுறவினால்கூட தொற்றலாம். சிறுமியர்கூட இந்நோய்களினால் பாதிக்கப்பட்டு, கசக்கி எறியப்பட்ட மலர்களாக மருத்துவமனைக்கு வருகின்றனர். மறுபாலருடன் எங்கும் தனியே செல்லும்போது உங்கள் மனநிலை அத்துமீறக்கூடும். ஆதலால் மிக ஆபத்தாக முடியலாம். பரிசுத்த வானைக்கூட நீங்கள் நம்பத் தேவையில்லை. இன்று பல வாலிபர் தம் உறவினர், அறிமுகமானவர், கனத்திற்குரியவர், ஏன் தேவனது ஊழியக்காரரால்கூடக் கெடுக்கப்படுகின்றனர்.



விழிப்பாயிருங்கள். இந்நாட்களில் பல வாலிபர் பாலுறவு பழக்கத்திலுள்ளனர். உங்களைக் கட்டுப்படுத்த இன்றே தீர்மானமெடுங்கள். தவறான பாலுறவுக்கு, ''முடியாது'' என்று திட்டமாய்ச் சொல்லுங்கள். ஓரினச் சேர்க்கைப் பழக்கமுண்டானால் இன்றே தவறான உறவுகளைத் துண்டித்துவிடுங்கள். கணினி அல்லது TVஐ எப்போது அணைக்கவேண்டுமென அறிந்துகொள்ளுங்கள்.

பேதுரு தன் கடிதத்தில் எச்சரிக்கிறார், ''கள்ளத் தீர்க்கரிசிகளும் மக்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்... விபசாரமயக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து...'' (2 பேது 2:1,14). பொறிக்கு மேல் பொறியைச் சந்திப்பீர்கள். பால்வினைச் சோதனைகள் தீப்பிழம்புகளாக உங்களைத் தீண்டப்பார்க்கும். இன்றே தீர்மானமெடுங்கள். அப்படியானால் உங்கள் பால் வேட்கையைக் கட்டுப்படுத்திக் காப்பது சுலபமாகும். குதிரை ஓடின பிறகு லாயத்தைப் பூட்டிப் பயனில்லை. மறுபாலரின் களங்கமற்றதாய்த் தோன்றும் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கிவிடாதீர்கள். உங்கள் இறந்த காலத்தைக் கர்த்தர் கழுவித் துடைத்துவிட்டார். புதிதாய் ஓட்டத்தைத் துவங்குங்கள். பால்வினைப் பகுதியில் மட்டுமல்ல; கோபம், பசி, சோம்பல், நாவு மற்றும் வாழ்வின் எப்பகுதியிலும் கட்டுப்பாட்டை கையாள உங்களைப் பயிற்றுவியுங்கள். எல்லோருக்கும் போதித்துவிட்டு கடைசியில் நீங்களே கோட்டைவிட்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

### 5. அன்பு வாழ்வு

*''நான் மனிதர் மொழிகளையும் தூதர் மொழிகளையும்* ***பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால்,*** *சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்''* (1 கொரி 13:1).

சாதுரியமாய்ப் பேசும் திறமை படைத்திருந்தாலும் சேராபீன்களின் அன்பில்லாதவர் யாருக்குத் தேவை? பேச்சுக்கு தேவன் மதிப்பெண் போடுபவரல்ல. அன்பில் நடந்துகொள்ளுகிறீர்களா? யாரையும் நேசிக்கவும் கனப்படுத்தவும் கற்றுக்கொள்ளுங்கள். 1 யோவான் 2:9இல் இவ்விதம் வாசிக்கிறோம்: ''ஒளியில் இருக்கிறேன் என்று **சொல்லியும்** தன் சகோதரனைப் **பகைக்கிறவன்** இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.'' நான் இரட்சிக்கப்பட்டு ஒளிக்குள் வந்தேன் என்று நீங்கள் சாட்சி பகரலாம். ஆனால் இன்னும் வீட்டில் உங்கள் சகோதரனோடோ சகோதரியோடோ சண்டைபோட்டுக் கொண்டிருப்பீர்களானால் நீங்கள் இன்னும் இரட்சிக்கப்படவில்லை; இருளில்தான் இருக்கிறீர்கள். அன்பு வீட்டிற்கு வெளியில் மட்டுமல்ல, வீட்டிற்குள்ளும் இருக்கவேண்டும்.

ஆவிக்குரிய வாழ்வில் தேறின சிலர் கூட அன்பற்றவர்களாயிருக்கலாம். அவர்கள் பொறுமையிழப்பவராய், இரக்கமற்றவராய், பொறாமைப்படு கிறவராய், தற்பெருமைக்காரராய், இறுமாப்புடையவராய், அயோக்கியராய், பாராட்டுகளை எதிர்பார்ப்பவராய், முற்கோபிகளாய் இருக்கின்றனர். அன்போ பிறரது ஆசீர்வாதத்தில் மகிழும், எதையும் சகித்துக்கொள்ளும், பிறரை நம்பும், சலித்துப்போகாது, பொறுமையாயிருக்கும். இப்படிப்பட்ட அன்பை அப்பியாசித்தால் வேரில் பழுத்த பலாவாவீர்கள். ஈரமற்ற இவ்வுலகில் நேசியுங் கள், நேசித்துக்கொண்டேயிருங்கள்.

''உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக'' (ரோ 12:9). ''போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள்'' என்று வாயினால் நேசிக்காமல் தேவையானவற்றைக் கொடுத்து அன்பு பாராட்டுவோம் (யாக் 2:16).

### 6. குடும்ப வாழ்வு

*''சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்* ***ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு****...தெய்வ பயத்தோடே* ***ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்''*** (எபே 5:19,21).

குடும்ப வாழ்வு வெறும் பரவசப்பாடலும் பாசமான புத்திமதியும் மட்டுமல்ல அது இன்னும் கடினமான ஒருவருக்கொருவர் கீழ்ப்படியும் அம்சமுமுடையது. நமது முதல் சாட்சி குடும்ப அங்கத்தினரிடமிருந்தே வரவேண்டும். புத்திசொல்ல வேண்டுமென்பது உண்மைதான். ஆனால் பெற்றோருக்குப் பிள்ளைகள் கீழ்ப்படிதல் அதிலும் முக்கியம். பெற்றோர் இரட்சிக்கப்படாத வராய் இருக்கலாம். ஆனால் அனுபவத்தால் அவர்கள் பெற்றுள்ள அறிவு கீழ்ப்படிதலால் உங்களுடையதாகலாமே. பாவமான கட்டளையாயிருந்தாலே யொழிய மற்றபடி அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். ''பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்'' (எபே 6:1). பெற்றோருக்குக் கீழ்ப்படியாத பிள்ளை கயிறற்றப் பட்டம். இயேசு தம் பெற்றோரோடு நாச ரேத்திற்குச் சென்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். ஆகவே ஞானத் திலும் வளர்த்தியிலும் தேவ கிருபையிலும் மனிதர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக் 2:51,52).

பல பிள்ளைகளுக்கு மனபாரம். வீட்டில் அமரிக்கையோ களிப்போ கிடையாது. இடைவிடா சண்டையும் நச்சரிப்பும். தகப்பன் குடிக்கிறார், தாய் சரியில்லை, சகோதரன் புரிந்துகொள்ளவில்லை, சகோதரி கண்டு கொள்வதில்லை. ஒருவேளை தாய் தகப்பனற்றவராயும் இருக்கலாம். கவலையை விட்டொழியுங்கள். துரதிர்ஷ்டம் வராதவர் எவருமிலர். சிலருக்கு அது ஏணி, பலருக்கு அது கேணி. உங்கள் பெற்றோர் ஒருவேளை உங்கள் கல்வியில் கண்டிப்பாயிருக்கலாம். நல்ல படிப்பில்லாமல் நீங்கள் வாழ்வில்



முன்னேற முடியாது என்று அறிந்துதான் அப்படியிருக்கிறார்கள். தேவனை சேவிப்பதற்குக்கூட படிப்பு அவசியம். இல்லாவிடில் உங்கள் கனவுகள் சின்னாபின்னமாகும். படிப்பில் கவலையீனம் வேண்டாம். உங்கள் சாட்சி இங்குதானிருக்கிறது. வாயிலல்ல. முயன்று முயன்று அயராது படியுங்கள். தோல்விதான் முடிவென்பதல்ல. வாழ்க்கையில் பல தருணங்களுண்டு. உழைத்துப் பெறவேண்டிய பதவிகளை உட்கார்ந்து பெற முயலுகிறார்கள் இன்றைய இளைஞர். இவ்வயதிலேயே சலித்துப்போனால் எப்படி ? உங்கள் எதிர்காலத்தை வனைபவர் நீங்கள்தான். பலர் TVயில் நேரத்தை வீணாக்கி விட்டு பின் தேவனைப் பழிசாட்டுவர். தேவனையோ, பிசாசையோ பழி சாட்டாதீர். பாடுபட்டு படித்துத் தேறுவது உங்கள் பொறுப்பு. மாணவப் பருவத்தில் வேறெதுவுமே முக்கியம் கிடையாது. நல்ல நண்பரோடு சேர்ந்து படியுங்கள். பட்டம், முதுநிலைப் பட்டம் அல்லது தொழிற்கல்விப் பட்டம் பெற்று சாதனைபுரியுங்கள். புனர்வாழ்வு பெற்று தேவனுக்காய் ஒளிவீசுங்கள்.

### 7. மனசாட்சி வாழ்வு

*''கற்பனையின் பொருளென்னவெனில், சுத்தமான இருதயத்திலும்* ***நல்மனச்சாட்சியிலும்*** *மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. இவைகளைச் சிலர் நோக்காமல்* ***வீண்பேச்சுக்கு*** *இடங்கொடுத்து விலகிப் போனார்கள். தாங்கள்* ***சொல்லுகிறது*** *இன்னதென்றும் தாங்கள்* ***சாதிக்கிறது*** *இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்பு கிறார்கள்''* (1 தீமோ 1:5–7).

வீண்பேச்சுக்காரர் மனச்சாட்சிக்கு முதலிடம் கொடுப்பதில்லை. நல் மனச்சாட்சியைக் காத்துக்கொள்வதன் அத்தியாவசியத்தை உணர்ந்த பவுல் தீமோத்தேயுவுக்குத் திரும்பத்திரும்ப அதையே எழுதுகிறார். ''குமாரனாகிய தீமோத்தேயுவே... நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு. இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப் படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத் தேன்'' (1 தீமோ 1:18–20). வாயில் தூஷணம், உள்ளுக்குள்ளே துர்மனச்சாட்சி.

விலையேறப்பெற்ற நமது விசுவாசத்தைச் சேதப்படுத்துவது எது ? மனச்சாட்சியைத் தள்ளிவிடும் வீண்பேச்சு. வாய் சொல்வதைப் புரிந்து கொள்ளாதவர்கள் வாழ்வில் சாதனைப் புரிவது எங்ஙனம் ? மனச்சாட்சியை பரிசுத்தமாய் மாசில்லாமல் காத்துக்கொள்பவர் விசுவாசத்தில் உறுதியா யிருப்பது நிச்சயம். ''விசுவாசத்தின் இரகசியத்தைச் **சுத்த மனச்சாட்சியிலே** காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்'' (1 தீமோ 3:9). மறுபடியும் பவுல் 4:1,2இல் எழுதுகிறார், ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லு

கிறபடி, பிற்காலங்களிலே **மனச்சாட்சியில்** சூடுண்ட **பொய்யருடைய** மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.'' இங்கும் விசுவாசத்தை விட்டு மக்கள் எப்படி விலகிப்போவார்கள் எனப் பார்க்கிறோம். மனச்சாட்சியைக் காத்துக்கொள்வதே விசுவாசத்தைக் காக்க வழி.

2 தீமோத்தேயு 1:4,5, ''உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு **சுத்த மனச்சாட்சியோடே** ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.'' தேவனை ஆராதிக்க சுத்த மனச்சாட்சி அவசியம். பிசாசு சில காரியங்கள் தவறேயல்ல என்பான். உங்கள் மனச்சாட்சியோ உறுத்தும். ஒருவரைப் புண்படுத்திவிட்டு நீங்கள் வந்திருக்கலாம். மனச்சாட்சி ஒப்புரவாகக் கூறும். மனச்சாட்சிக்குக் கீழ்ப்படியுங்கள். அப்படித்தான் வெற்றிவாழ்க்கை வாழ முடியும். தீர்மானங்கள் எடுக்குமுன் மனச்சாட்சியைக் கேட்டுவிட்டு எடுங்கள். மனச்சாட்சி சரியாய் வழி நடத்தும். அதற்கு செவிகொடுங்கள். தாவீது, ''உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்'' என்று எழுதுகிறார் (சங் 4:4). இதயத்தோடு பேசி அது உங்களுக்கு நற்சான்றிதழ் அளிக்குமா எனப் பாருங்கள். மனச்சாட்சி கடிந்துகொள்ளலாம். எதிர்பேசாமல் காரியத்தைச் சரிசெய்து தேவனோடு ஒப்புரவாகுங்கள். சுத்த மனச்சாட்சியே சிறந்த தூக்க மருந்து. மனச்சாட்சியின் வாயை அடைத்தால் அது ஆமையாகி ஊமையாகிவிடும்.

முடிவாக, என்னதான் வந்தாலும் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள்; எப்பாடுபட்டாவது வசனத்தில் தரித்திருங்கள்; ஜெப வாழ்வில் தோல்வியை அனுமதிக்காதீர்கள்; இச்சையடக்கத்தில் பயிற்சி எடுங்கள்; நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; குடும்ப வாழ்வில் அடிபணிந்து போங்கள்; நல்மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள். இவை வெறுமனே வாய்ப்பேச்சாயிராமல் வாழ்வின் நடையாகட்டும்.

யோசியாவின் நாட்களில் நியாயப்பிரமாணப் புத்தகம் ஆலயத்தில் தூசியடைந்துக் கேட்பாரற்றுக் கிடந்தது. அது கண்டுபிடிக்கப்பட்டு தூசி தட்டப்பட்டு இராஜாவிடம் கொடுக்கப்பட்டது. அவன் அதை வாசித்து, இதயப்பூர்வமாய் வார்த்தைக்குக் கீழ்ப்படிய தன்னை அர்ப்பணித்தான். விளைவு ? எழுப்புதல் அருள்மாரி! (2 நாளா 34:14–19,31). தேவனுடைய ஆலயமாகிய நம்மில், வசனம் உறங்கிக்கொண்டிருக்குமானால் அதற்கு வாழ்வளிப்போம். அப்போது எழுப்புதல் அருள்மாரி பொழியுமென்பதில் சந்தேகமேயில்லை!



8



# அனைத்தும் நன்மைக்கே!

நொண்டி நொண்டி வீட்டிற்குள் நுழைந்த ரேணுகா, அம்மா.... என்று கூப்பிட்டுக்கொண்டே பாயில் அமர்ந்து வலது கால் பாதத்தை நோக்கினாள். ''அம்மா தயவுசெய்து எல்லாம் நல்லதுக்குத்தான் என்று சொல்லிவிடாதேங்கம்மா. காலில் கண்ணாடி குத்திவிட்டது.'' அம்மா பெருமூச்சு விட்டுக்கொண்டே ரேணுகாவின் காலை சுத்தம் செய்து கட்டினாள். அவளது பக்தி பிள்ளைகளுக்குக் கிண்டல். வாழ்வின் எல்லாவற்றையும் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு, தேவனைத் துதிக்கும் அம்மாவைப் பிள்ளைகளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ரேணுகாவின் குடும்பத்தினர் ஏழை சி.எஸ்.ஐ. விசுவாசிகள். ரேணுகா பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். பார்த்தவுடனே ஏழை என்று சொல்லிவிடலாம். துவைத்து துவைத்து வெளுத்துப்போன சீருடை. மற்ற நாட்களில் அம்மா, உறவினர் வீட்டுக்குள்ளும் நுழையத் தகுதியற்றவளாய் வெளியே நின்று வாங்கிவரும் அவளது கசின்ஸ் உடைய துணிமணிகள். காதில் மணி, கையில் கண்ணாடி வளையல்.

ஆராதனை வேளையில் எல்லாரும் ஜெபத்தில் கண்ணை மூடும்போது ரேணுகா இரகசியமாக, தன் பள்ளியில் பதினொன்றாவது படிக்கும் இந்திராணியின் வெட்டும் சல்வாரையும், கைகளில் கழுத்தில் மின்னும் தங்க

நகைகளையும் ஃபாரின் கைக்கடிகாரத்தையும் ஒரு விநாடி பார்த்துவிட்டு கண்ணை இறுக்கி மூடிக்கொள்வாள். வீட்டில் அந்தப் பேச்சை எடுத்தால், அம்மா: கடவுள் நமக்குக் கொடுத்திருப்பதற்கு நன்றி செலுத்து என்பார்கள்.

செகண்ட் ஹாண்ட் உடைகளுக்கு நன்றியா ?

பள்ளியில் சாப்பிடும் நேரம் இந்திராணி பக்கத்திலிருந்து வாசனை கமகமக்கும். அவளது உயர்ரக சிநேகிதிகள் எண்ணெய் வழியும் பன்றிக்கறி கிரேவியை ருசி பார்த்து நாக்கைச் சொட்டுவர். சாப்பிட்ட வாய்க்கு ஒரு ஜாங்கிரியோ, மைசூர்பாகோ, ஏதோ ஒன்று கட்டாயம் இருக்கும். அதுபோக வெளியில் போய் ஐஸ்கிரீம் சாப்பிடுவார்கள். தனது சாம்பார் சோற்றையும், கீரைக் கூட்டையும் பார்க்கவே அவளுக்கு வெறுப்பாய் இருக்கும்.

ரேணுகாவிற்கு சாயங்காலம் இந்திராணி இரதத்தில் செல்வதுபோல் ஸ்கார்ப்பியோவில் செல்லுவதைப் பார்த்தாலே வயிறு எரியும். பிய்ந்து நைந்துபோன தனது பழைய செருப்பை மாட்டிக்கொண்டு பொடிநடையாய் வீடு வந்து சேர்வாள்.

ஒரு நாள் புதன்கிழமை இந்திராணி பள்ளிக்கு வரவில்லை. அவளது அப்பா தனது 45ஆவது வயதில் மாரடைப்பால் திடீரென்று மரித்துபோனாராம். பாவம் ஓராண்டாக கொழுப்பு, இரத்த அழுத்தம் என்று சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தாராம். சனிக்கிழமை அடக்க ஆராதனையில் இந்திராணியைப் பார்க்க தாங்கமுடியவில்லை ரேணுகாவிற்கு. அவளது அம்மாவை வீல்சேரில் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு சர்க்கரை நோய். ஒரு வாரத்திற்கு முன்புதான் ஒரு காலை எடுத்துவிட்டிருந்தார்கள்.

இரவு குடும்ப ஜெபத்தில் அன்றைய வசனம் “போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்” என்று அப்பா வாசித்தார்.

“ஏனம்மா அழுகிறாய் ?” அப்பா கேட்டார்.

“அம்மா, அப்பா, கடவுள் எனக்கு உங்களைக் கொடுத்திருக்கிறார். அதுவே போதும்.” பெற்றோர் விம்மிய மகளை அணைத்துக்கொண்டனர்.

மதியம் மிஞ்சின உணவை அம்மா சுடவைத்துப் பரிமாறினாள். அது அமிர்தமாய் ருசித்தது ரேணுகாவிற்கு....





**9**

# சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி !

சங்கீதம் 23ஐ கூர்ந்து கவனித்தால் அது களிப்பால் துள்ளிக் குதித்துப் பாடும் ஓர் ஆட்டுக்குட்டியின் பாடல் என்பது விளங்கும். பாதங்கள் தரையில் பாவாமல் அது துள்ளி மேய்ப்பனின் காலைச் சுற்றிச் சுற்றி வந்து அவனுக்கு ஓர் அன்பின் புகழ் பாடலை சமர்ப்பிக்கின்றது.

**கவனிப்பு**

*“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்”* (வச 1).

“என்” என்ற பதம் ஒரு கட்டுரைக்கு சமானம். அதுமேய்ப்பனுக்கும் ஆட்டுக்குட்டிக்குமிடையே உள்ள பிணைப்பைக் காட்டுகிறது. “அந்த ஊதா சட்டை போட்டவன்” என்று மேய்ப்பன் எவனையும் அழைக்காமல், ஒவ்வொரு ஆட்டையும் பெயர் சொல்லி அழைக்கிறான் (யோ 10:3). ஓர் ஆட்டைக் குறித்து எல்லாம் அவனுக்குத் தெரியும். பெயர் சொல்லி அழைப்பது தனிப்பட்ட அன்பையும் கவனிப்பையும் குறிக்கிறது. மேய்ப்பனின் இதயம் கரிசனை கொள்ளும் இதயமாயிருக்கவேண்டும். யாக்கோபு நல்ல எடுத்துக்காட்டு. அவன் நேரத்தைக் குறித்துக் கவலைப்படாமல் ஆடுகளுக்காகவே கவலைப்பட்டு என்ன சொல்லுகிறான் கேளுங்கள்: “இன்னும் வெகு பொழுதிருக்கிறதே, இது மந்தைகளைச் சேர்க்கிற வேளை அல்லவே. ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேய விடலாம்” (ஆதி 29:7).

கடமைக்காக அல்ல, கரிசனையோடு ஆடுகளை கவனித்தான் (ஆதி 31:39,40). அவனது செல்ல ஆட்டுக்குட்டிகள் நிச்சயமாக, ''யாக்கோபு என் மேய்ப்பனாயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்'' என்று வாலை ஆட்டிச் சுழன்றாடும். உங்கள் ஆடுகள் அப்படிப் பாடக்கூடுமா ?

ஆடுகளில்லாத மேய்ப்பரும் உண்டு. கவலை வேண்டாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மேய்ப்பன்தான். வீட்டைச் சுற்றிப் பாருங்கள்—ஒரு மாணவன், ஒரு வேலைக்காரன், ஓர் அயலகத்தான், ஒரு நண்பன்—மேய்க்கப்படவேண்டிய ஒருவர் நிச்சயமாக தென்படுவர். ஒரு புன்னகை பூத்து விசாரியுங்கள். தினந்தோறும் கூடுதல் பேசிப்பழகுங்கள். இப்போது ஆடு கிடைத்துவிட்டது !

சிறு எண்ணிக்கையை இயேசு அற்பமாய் எண்ணவில்லை. நிக்கோதேமு, சமாரியப் பெண் போன்ற தனி நபரிடம் நேரம் செலவழிக்க அவர் தயங்க வில்லை. சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி, ஒன்றே ஒன்று அல்லது இரண்டே இரண்டு உங்களுக்கு இருக்கலாம். ''இந்தச் சொற்பத்தைக் கவனிப்பதா என் வேலை ?'' என்ற எண்ணம் வேண்டாம். தேவன் அதிகமாக உங்களுக்குக் கொடுக்கு முன் இதுவே பயிற்சிக் காலம். கொஞ்சத்தில் உண்மையுள்ளவனா யிருக்கிறவன் அதிகத்திற்கு அதிகாரியாவான் (லூக் 19:17). தேவன் தாவீதிற்கு ஓர் ஆட்டு மந்தையை அளித்திருந்தார். தன் மக்களாகிய இஸ்ரவேலரை நடத்த அங்கேதான் தாவீதை பயிற்றுவித்தார். திறம்பட இஸ்ரவேலரை ஆள ஆட்டுமந்தையே அடித்தளமாயிற்று. ''தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும்... இஸ்ரவேலரை மேய்ப்பதற்காக அழைத்துக்கொண்டுவந்தார். இவன் அவர்களை தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையால் அவர்களை நடத்தினான்'' (சங் 78:70-72).

இரண்டு மூன்று இருந்தால் போதும் என்ற எண்ணமும் வேண்டாம். ''இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்'' என்றார் இயேசு (யோ 10:16). மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போன்ற மக்கள் உங்களைச் சுற்றிலும் உண்டே. அவர்களின் நண்பராகி கரிசனை காட்டத் துவங்கினால் சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி போல உங்கள் பின்னே வரத் தயங்கமாட்டார்கள்.

**போஷிப்பு**

*''அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்''* (வச 2).



மேய்ப்பனின் முதற்பணி ஆடுகளை மேய்ப்பதே. இயேசு திரளான மக்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள் போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, ''அனேகக் காரியங்களை அவர்களுக்கு உப தேசிக்கத் தொடங்கினார்'' (மாற் 6:34). போஷித்தல் என்பது வேதத்திலிருந்து உபதேசிப்பதாகும். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை ஆடுகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் போதியுங்கள். இதுவே பசும்புல் மேய்ச்சல். நாம் சொல்லுவது பயனற்றதாகத் தெரிந்தாலும் வர வர ஆடுகள் சுவைத்துச் சுவைத்துக் கொழுத்து மேனியுள்ளதாகும். இரட்சிப்பிற்கேதுவான தேவ பலம் கிறிஸ்துவின் சுவிசேஷமே. நீங்கள் காலையில் தியானிப்பதை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். வாரமொரு முறை அவர்களோடு ஒரு மணி நேரமாவது கூடி ஜெபியுங்கள். அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, உயர்ந்த தரிசனங்களைக் கடத்துங்கள்.

சபை ஆராதனைகளில் வாரமொரு முறை 20 நிமிடங்கள் கிடைக்கும் உணவு ஆடுகளுக்குப் போதவே போதாது. தனியாரது தனிப்பட்ட தேவையையும் அது சந்திக்காது. ஆனால் நீங்களோ அவர்களது தேவைக்கேற்றபடி கிரமமாகப் போதிக்கலாம். இயேசு இவ்வுலகை விட்டுச் செல்லும் நாள் நெருங்க நெருங்க தாம் போதித்து நடத்தி வந்த ஆடுகளைக் குறித்துக் கவலை கொள்ளலானார். எனவேதான் பேதுருவை திரும்பத் திரும்ப, தம் ஆட்டுக்குட்டிகளை மேய்க்கும்படி கேட்டுக்கொண்டார். ஆம், பிரதான மேய்ப்பன் மீதுள்ள அன்பே நம் உள்ளத்தில் ஆட்டுக்குட்டிகளை மேய்க்கும் பாரத்தைத் தரும் (யோ 21:15-17).

மேய்ப்பனானவன் வசனத்தைப் பகுத்துப் போதிக்க அறிந்திருக்க வேண்டும். எனவே அவன் நல்ல உபதேசப் புத்தகங்களைத் தாராளமாக வாசித்து, தன் ஆடுகளுக்கு அவற்றைப் போதிக்கவேண்டும். ''ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார்'' என்று ஏதாவது உளறுவதைவிடப் படித்துப் போதிப்பது மேல் ! அமர்ந்த தெளிந்த தண்ணீரண்டையில் என் மேய்ப்பன் நடத்துவார் என்று ஆடுகள் பாடவேண்டும்; கலங்கிய சேற்றுக்குட்டை களண்டையிலல்ல.

சாப்பிட்டு சாப்பிட்டுக் கொழுத்து ஆட்டுக்குட்டிகளுக்குச் சாப்பாடு போடாமல் விடும் மேய்ப்பர் மீது ஆண்டவர் கோபக்கனலைக் கக்குகிறார் (எசேக் 34:2,3). ''தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றணைத்தூறும் அறிவு'' அன்றோ.

மேய்ப்பன் மந்தையை முன் சென்று நடத்துகிறான். ''அவன் அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவனுக்குப் பின் செல்கின்றன''

(யோ 10:4). பயமின்றி பின்பற்றக்கூடிய சில முன்மாதிரிகள் மக்களுக்குத் தேவை. பின்பற்ற தங்களுக்கு நல்ல முன்மாதிரி உண்டென்று உங்கள் ஆடுகள் ஆர்ப்பரிக்கக்கூடுமா ? உங்கள் பாவத்தினால் உங்கள் ஆடுகள் பலியாகக்கூடாது. மக்களை தூதன் உபாதிக்கிறதைத் தாவீது கண்டு, "நான் பாவஞ்செய்தேன்; நான்தான் அக்கிரமம் பண்ணினேன்; இந்த ஆடுகள் என்ன செய்தன" என்று கதறினான் (2 சாமு 24:17). நீங்கள் போகுமிட மெல்லாம் சின்னச் சின்ன ஆட்டுக்குட்டியும் அடிமேல் அடியெடுத்து வருவது நிச்சயம். நீங்களே பிசாசின் இலக்கு. மேய்ப்பனை வெட்டிவிட்டால் ஆடுகள் சிதறுவது திண்ணம் (1 இரா 22:17). எச்சரிக்கை!

நீங்கள் உங்கள் ஆடுகளை அறிந்திருந்தால் மட்டும் போதாது. உங்கள் ஆடுகளும் உங்களை அறிந்திருக்கவேண்டும். "நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" என்றார் இயேசு (யோ 10:15). இயேசுவின் வாழ்க்கை சீடருக்கு மர்மமாயிருக்கவில்லை. நீங்கள் எங்கே, எப்போது, எப்படி ஜெபிக்கிறீர்கள் என்று உங்கள் ஆடு அறியுமா ? உங்கள் தூக்க நேரமும் விழிப்பு நேரமும் அறியுமா ? நீங்கள் பார்க்கும் வீடியோ கேசட்டுகள், கேட்கும் ஆடியோ கேசட்டுகள், வாசிக்கும் பத்திரிகைகள், பாடும் பாடல்களை அறியுமா ? அப்படியானால் நீங்கள் ஜெபிக்க, தியானிக்க, ஆத்துமாதாயம் செய்யக் கற்பிக்கும்போது கவனித்துக் கேட்கும்.

**ஊக்குவிப்பு, நடத்திப்பு**

"*அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்*" (வச 3).

ஆடுகள் சோர்ந்துபோவது சகஜம். பரீட்சையில் தோல்வியோ, குறைந்த மதிப்பெண்களோ, விரும்பிய இடத்தில் இடம் அல்லது வேலை கிடையாமை, தங்களைப் பற்றிய குறைவெண்ணமோ அல்லது நெருங்கினவரின் இழப்போ அதற்குக் காரணமாகலாம். மேய்ப்பன் காது கொடுத்துக் கேட்டு, ஊக்குவித்து உற்சாகப்படுத்த வேண்டும். மேய்ப்பனின் ஆறுதலான சத்தத்தை ஆடுகள் அறியும் (யோ 10:4,5). பிறர் குற்றஞ்சாட்டி குழியில் தள்ளலாம். மேய்ப்பனோ அவற்றின் ஆவியைத் தூக்கிவிடவேண்டும்.

எனவேதான் மேய்ப்பன் நெருங்கிப் பழகி ஆடுகளின் நிலையை அறிந்திருக்கவேண்டும். வாழ்வின் ஒவ்வொரு எட்டு எடுத்துவைக்கும்போதும், அவை சரியான பக்கம் திரும்புகின்றனவா என்று கவனமாயிருக்கவேண்டும். தன் பெயர் கெட்டுப்போகாதபடி ஆடுகளை நீதியின் பாதையில் நடத்த



வேண்டும். தகப்பன்–மகன், தாய்–மகள் உறவைப்போல—ஆடுகளின் நடத்தைக்கு மேய்ப்பனையே ஊரானது உற்றுநோக்கும். அந்த அளவு உங்களுக்கு ஆடுகளோடு நெருக்கம் உண்டா ?

எசேக்கியேல் 34:4-6 வெட்டியான மேய்ப்பனை விவரிக்கிறது: "நீங்கள் பலவீனமானவைகளை பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளை குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளை காயங்கட்டாமலும், துரத்துண்ட வைகளைத் திரும்பிக் கொண்டுவராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பனில்லாததால் அவைகள் சிதறுண்டுபோயின. சிதறுண்டுபோனவை கள் காட்டு மிருகங்களுக்கு இரையாயின... பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித் திரிகின்றன. விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை." பரிதாபக் காட்சி. அதுதான் அன்று நடந்தது. அதேதான் இன்றும் நடக்கிறது. ஓர் ஆட்டுக்குட்டி காலுடைந்துவிட்டால், 'போகட்டும் பண்டியலுக்கு வெட்டலாம்' என்று சொல்லுவோம். ஆனால் ஆட்டுக்குட்டிக்கு சோறூட்டிய பிள்ளை அதை ஒத்துக்கொள்ளாது. மருத்துவரிடம் தூக்கிச் செல்லும். அதுவே மேய்ப்பனின் கனிந்த இதயம் (எரே 3:15).

தொய்ந்த ஆடுகளை மேய்ப்பர் தூக்கிவிட்டிருந்தால் தொலைந்தலையும் இத்தனை ஆடுகளை இன்று காணமாட்டோம். '*அலைந்து திரிகின்ற ஆட்டைத் தேடியே ஓடி ஓடி உழைப்பேன்*' என்ற பாடல் உங்கள் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டேயிருக்கட்டும். இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனமாவது: "மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளை தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசா 40:11). கடுமையாக எரிந்து விழும் சர்வாதிகார மேய்ப்பருக்கு என்னே முன்மாதிரி!

மேலே என்ன படிக்கலாம் ? என்ன வேலைக்கு மனு செய்யலாம், வேலை எப்படி தேடுவது, என்ற நடைமுறை ஆலோசனைகளை வாலிபர் தேடுவர். *பெண்மணி, நல்வழி* போன்ற சில பத்திரிகைகளை மேய்ப்பர் வாசிப்பது பேருதவியாயிருக்கும்.

**பாதுகாப்பு**

"*நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்*" (வச 4).

"எங்கு வேண்டுமானாலும் என் மேய்ப்பன் பிறகே பயமின்றிச் செல்வேனே" என்று ஆட்டுக்குட்டி ஒரு நாட்டியம் ஆடுகிறது. "அது இருண்ட பள்ளத்

தாக்காயிருந்தாலும் மேய்ப்பன் என்னோடேயே இருக்கிறானே. எனக்கு ஆபத்து என்ன நேர்ந்துவிடும்? அவனது கோல் எனக்குத் தழை பறித்துப் போடும். அவனது தடி துஷ்ட மிருகங்களைத் துரத்தியடிக்கும்'' என்கிறது.

ஆடுகளுக்கு வரக்கூடிய பேராபத்துகளை இவ்வசனம் குறிப்பிடுகிறது. ஆடுகள் மேய்ப்பன் மேல் அலாதி நம்பிக்கை வைத்திருக்கின்றன. எபேசு மூப்பர்களுக்குப் பவுல் எழுதும்போது, ''உங்களைக் குறித்தும், தேவன் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீடர்களைத் தங்களிடம் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவை களை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்'' என்கிறான் (அப் 20:28-30).

உங்கள் ஆடுகளைப் பிடிக்கும்படி ஓநாய்கள் பதுங்கியிருக்கின்றன. கெட்ட நண்பர் சிலரை இழுத்துச்செல்கின்றனர். சினிமா, பால்வினைப் பாவங்கள், போதை மருந்துகள் போன்றவை மற்றும் சிலரை வெள்ளமாய் அடித்துச் செல்கின்றன. பிசாசு அவர்களை கசாப் செய்யக் காத்திருக்கிறான். கவனமாயிருங்கள். இன்றைய வாலிபருக்குப் படுகுழிகள் பல. அவர்கள் சோதனைகளை மேற்கொண்டு, பிசாசைக் கீழே தள்ள உதவி செய்யுங்கள். தேவனோடு ஒப்புறவாக வழிகாட்டுங்கள். ஆடுகளின் சுத்தம் மேய்ப்பனின் பொறுப்பே (உன் 6:6).

''என்ன ஆபத்தானாலும் என் மேய்ப்பன் என்னோடிருப்பான்'' என்று உங்கள் ஆடுகள் சொல்லக்கூடுமா? தாவீது போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது ஆடுகளை காவலாளி வசமாய் ஒப்புவித்துச் சென்றான் (1 சாமு 17:20). ஆட்டுக்குட்டிகளை ஒரு சிங்கத்தினின்றும் கரடியினின்றும் காப்பாற்ற தன் உயிரையே பணயம் வைத்தான் (17:34). இயேசு, ''நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் உயிரைக் கொடுக் கிறான்'' என்றார் (யோ 10:11). நீங்கள் நல்ல மேய்ப்பரா? அல்லது ஆடுகளை அதின் விதிக்கு விட்டுவிட்டு, ''ஐயோ, பாவம்'' என்று நாக்கைச் சப்பைக் கொட்டிக்கொண்டு வாளாவிருக்கிறீர்களா? ''மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ'' என்கிறார் ஆண்டவர் (சக 11:17).

காட்டு மிருகங்களை வீழ்த்தக்கூடிய வல்ல ஆயுதம் ஜெபமே. நமது சொந்தப் பிள்ளைகள் போல் ஆடுகளுக்காய் பெயர் சொல்லி ஜெபிப்பதே அவர்களது பாதுகாவல். ''தூக்கமயக்கமாய் புலம்புகிறவர்கள், படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரைப் பிரியர்... பகுத்தறிவில்லாத மேய்ப்பர்'' என்று ஆண்டவர் மேய்ப்பரைக் குற்றஞ்சாட்டுகிறார் (ஏசா 56:10,11).



காணாமற்போன ஓர் ஆட்டைக் குறித்த உவமையை இயேசு சொன்னார் (மத் 18:12,13). ''தேடிப் பயனில்லை, ஏதாவது காட்டு மிருகம் தின்றிருக்கும்'' என்று அவன் சும்மாயிருந்தானா? இல்லை. காடு மலையெல்லாம் விடாப்பிடியாய் அலசிப்பார்த்து, அந்த ஓர் ஆட்டைக் கண்டுபிடித்தான். பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்ற நாம் அதிலும் குறைவாய்ச் செய்யலாமோ?

**மத்தாப்பு**

*''என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது''* (வச 5).

மேய்ப்பன் தனக்கு ஆயத்தம் செய்த விருந்தை எண்ணி ஆட்டுக்குட்டிக்கு ஒரே குஷி. வெற்றிச் சிகரத்தை எட்டிவிட்டதே. சத்துரு தோற்றுப்போனான். இது விழா கொண்டாட்ட சமயம்.

அவ்வப்போது ஆடுகளுக்குக் கொண்டாட்டம் தேவை. இல்லாவிடில் அவை பசும்புல்லைத் தேடிச் சென்றுவிடலாம். தாவீது இராட்சதனைக் கொன்றபோது ஆடலும் பாடலும் எதிரொலித்தன. நடனங்களும் விருந்து களும் வேதத்தில் தெளித்திருக்கின்றன. தேவன் தம் பிள்ளைகளுக்குப் பரிசுத்தப் பண்டிகைகளை அனுமதிக்கிறார். வாலிபருக்கு விளையாட்டும் விறுவிறுப்பும் தேவை. ஒரு ருசியான சாப்பாடு என்றால் ஈயாய் மொய்ப்பார்கள். அந்த வேளையையும் ஒரு வேத வகுப்பாக மாற்றிவிடாதபடிப் பார்த்துக் கொள்ளுங்கள். விளையாட்டும் சிரிப்பும் ததும்பட்டும். வேதப் புதிர் போட்டிகளும், வேதாகமப் பரீட்சைகளும், பொது அறிவு, வேடம் போடுதல், டென்னிஸ், கேரம், செஸ் மற்றும் பல விளையாட்டுப் போட்டிகளை நடத்துங்கள். உலகம் நமது வாலிபரை இராட்சத இராட்டினத்தில் ஏற்றி மயக்குகிறது. சிறியோரும், பெரியோரும் சினிமாப்புதிர் போட்டியில் பங்கேற்கின்றனர். அப்படியானால் நல்ல, கெட்ட எல்லாப் படங்களையும் பார்த்தாக வேண்டுமே! பார்த்தீர்களா வலை விரிப்பை? நமக்கு நல்ல பொழுதுபோக்குகள் இல் லையா? வெளியே அழைத்துச்செல்லுங்கள். நற்செய்திக்கூட்டங்களுக்கும், அண்மையிலுள்ள கிராமங்கள் சேரிகளைச் சந்திப்பதற்கும் அழைத்துச்செல் லுங்கள். பரிசுத்த ஆவியின் அனுபவத்திற்குள் நடத்தி அவர்களை அகமகிழச்செய்யுங்கள். கிறிஸ்துமஸ், ஈஸ்டர் தினங்களை அவர்களோடு கொண்டாடுங்கள். தந்தையர் தினம், தாய்மார் தினம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி அந்நாளில் ஆடுகள் தம் பெற்றோரை கனம் பண்ண உற்சாகமூட்டுங்கள். நல்ல வீடியோக்களைப் போட்டுக் காட்டுங்கள்.

பொருட்காட்சி, இசை விழாக்களுக்கு அழைத்துச்செல்லுங்கள். அப்படி யானால் போட்டியிடும் எல்லாக் கவர்ச்சிகளும் வீட்டைப்பார்த்துப் பொடிநடையாய் போய்விடுமே. உங்கள் ஆட்டுக்குட்டி, ‘‘என் பாத்திரம் நிரம்பிவழிந்தோடுகிறது. என் மேய்ப்பன் எனக்கு ரொம்பவே தருகிறான். வேறு எதைத் தேடி நான் அலையவேண்டும் ? தேவைக்கும் அதிகமாகவே எனக்குக் கிடைக்கிறது’’ என குதிபோடட்டும்.


**நிலைப்பு**

‘‘என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்’’ (வச 6).

ஆட்டுக்குட்டி வளர்ந்து உறுதியாய்க் காலூன்றி நிற்கப் பழகிக் கொண்டது. பாடலின் முடிவிலே, ‘‘நிச்சயமற்ற நிலை மாறியது. இனி எல்லாம் நன்மைதான். இனி நிலைத்திருப்பேன்’’ எனக் கும்மாளமிடுகிறது. தேவனது குடும்பத்தில் வளர்ந்து தேறின ஓர் ஆடாக இனிக் காணாமற்போக வழியின்றிப் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டது. இனி ஆண்டவரோடு வழி நடக்கும். தேவப் பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளும். திருப்தியான ஆட்டுக்குட்டி இனியும் வேறு இடம் தேடிச் செல்லாது. அறிவீன ஆட்டுக்குட்டி இப்போது ஆற்றலுடன் அட்டகாசமாய் நிற்கிறது. கொதிக்கும் கோடை காலத்திலும் நடுக்கும் குளிர்காலத்திலும் அதற்கு கவனிப்பென்ன, நடத்துவிப்பென்ன, பாதுகாப்பென்ன, குதிப்பென்ன! இப்போது இறுதியாய் அது கர்த்தருடைய வீட்டிற்கே வந்துசேர்ந்துவிட்டது.

கர்த்தர் உங்களைத்தான் தமது ஆடுகளுக்கு மேய்ப்பனாக ஏற்படுத்தி யிருக்கிறார் (எரே 23:4). உங்கள் ஆடுகள் இப்பாடலைப் பாடக்கூடுமோ ?





**10**

# இந்த ஜாதிப் பிசாசு!

பேராசிரியர் வகுப்பை அணுகிக்கொண்டிருந்தார். அவருக்கு முன்னதாக நுழைந்து தன் இடத்தில் உட்கார்ந்துவிட வேகமாய் வந்த பாலன் ஒரு விநாடி திகைத்து நின்றான். தான் வழக்கமாக உட்காரும் இடத்தின் பக்கத்து இடத்தில் உட்கார்ந்திருந்தான் மாறன். மாறன் அருகில் உட்காருவதா ? சுற்றிலும் நோக்கினான். அந்த ஒரு இடம் தவிர அண்மையில் வேறு இடமில்லை. பேராசிரியர் நுழைவால் நிலவிய அமைதி மாணவ மாணவியர் கண்களையும் நின்றவன் பக்கமாய் திருப்பியது. போதாததற்கு, மடையன் மாறன் சற்று நகர்ந்து உட்கார்ந்துகொண்டு பாலனை அருகே உட்கார சைகை செய்தான். அடுத்த விநாடி படிவிட்டு படிதாண்டி மேலிருந்த மாப்பிள்ளை பெஞ்சில் போய் பெருமிதமாய் உட்கார்ந்தான் பாலன்.

பாலன், பிரபல திருமலை நாடார் மகன். பாலுண்ணும்போதே ஜாதிப்பற்று ஊட்டப்பட்டு வளர்ந்தவன். அவன் இதயத்தில் விழுந்த முதல் வித்து: ஒரு நாள் நான்கு வயதில் தோட்டக்காரன் மகனோடு விளையாடிக்கொண்டி ருந்ததைத் தகப்பனார் கண்டு தரதரவென்று வீட்டுக்குள் இழுத்துவந்து, ‘‘இனி ஹரிஜனப் பசங்களோடு விளையாண்டா உன் தொலிய உரிச்சுப் புடுவேன்’’ என்று சீறியதுதான். வளரும்போது அவனது காதில் விழுந்த ‘நம்ம நாடார் வூட்டுப்புள்ள’ என்ற தனக்குறிய அறிமுகம் அந்த வித்துக்கு தண்ணீர் ஊற்றியது.

பாலன், தங்கமணி, சந்திரன் மூவரும் மும்மூர்த்திகள் என்றழைக்கப்படும் இணை பிரியா நண்பர்கள். ஒரு நாள் மூவரும் காண்டீனில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நான்காவது இடத்தில் அமர்ந்துவிட்டான் மாறன். போதாததற்கு தண்ணீர் தேடிய பாலனுக்கு தன் டம்ளரை எடுத்தும் கொடுத்து விட்டான். ஜன்னலருகே இருந்த பாலன், நீரை வெளியே கொட்டிவிட்டு, எழுந்து வீறுநடைபோட்டான். மாறனது கருத்த முகம் இன்னும் கருத்தது.

**மறக்க முடியாத அந்த நாள்...**

மூவரணி அருகிலுள்ள நீர்த்தேக்கத்திற்குக் குளிக்கச் சென்றிருந்தது. Back Stroke, Butterfly Stroke இன்னும் என்னன்னவோ நீச்சல் அடித்தனர். திடீரென, ''பாலன், பாலன், பாலன்.'' எதிரொலி தவிர வேறு அரவமில்லை. அருகில் யாருமில்லை. பாலனின் அச்சடையாளமேயில்லை. வெளியேறிய தங்கமணிக்கும், சந்திரனுக்கும் தொடை நடுங்கியது. உடைமாற்றி நடை போட்டனர்—ஒன்றுமறியாததுபோல்— ''நமக்கேன் இந்த வம்பு'' என்ற பாவனையில். பாலனை விழுங்கிய நீரைத் திரும்பிப்பார்க்கவே பயம்.

கருப்பன் நீர்த்தேக்கத்தில் குதித்தான். 'நல்லதொரு கால் சட்டை தெரிகிறதே; அதை எடுக்க முடியுமா ? இல்லை... இல்லை, அது ஒரு பிணம்' குதித்தான், நீந்தினான், அள்ளித் தோளில் போட்டான், இன்னும் சூடு இருந்தது. கரையில் கை தட்டிக் கூப்பிட்டான். ஓடோடி வந்த கந்தன் சுழற்றினான் பாலனை. அவன் கற்ற முதலுதவி! நீரைக் கக்கினான் பாலன். வாயில் வாய் வைத்து ஊதினான். ''ஏ புள்ள கம்பளி இரண்ட எடுத்தா'' என்று கூவினான். பாலனை குடிசைக்குள் தூக்கிச் சென்றனர்.

போலீஸ் வேன் வந்து பாலனையும், உதவிக்குக் கருப்பனையும் அவன் மனைவியையும் அழைத்து ஆஸ்பத்திரியில் சேர்த்தது. நான்கு சிறு பிள்ளைகளையும் பக்கத்து வீட்டில் விட்டுவிட்டு ஏறினர். மூக்கம்மாள் முணுமுணுத்தாள், ''ஆறு பெத்த புள்ளையோ பாவம்.'' ''பையன் செத்துப் போனா நீங்கதான் கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்லணும் தெரியுதா ?'' போலீஸ்காரன் சொன்னான். ''அது சரி சாமி, வரோமுங்கோ. ஒரு உசுர காப்பாத்தணுமுன்னா அதெல்லாம் பாத்தா முடியுமா ?''

மூன்று மணி நேரம் கழித்து கண் விழித்தான் பாலன். ''பொழச்சிகிட்டான், பொழச்சிகிட்டான்.'' கருப்பனுக்கும், அவன் மனைவிக்கும் உற்சாகம். ''இந்தாப்பா மவனே, இந்த டீய கொஞ்சம் ஊத்திக்க.'' கொஞ்சம் கொஞ்சமாய் வாயில் ஊற்றினாள்.



பாலன் தெளிந்தான். நடந்ததை அறிந்தான். தனக்கு உயிர் கொடுத்த ஒவ்வொருவரும் ஹரிஜனங்கள் என்பதை அறிந்தான். ''நீ யாருப்பா ?'' கருப்பன் கேட்டான். வழக்கமான பதில் உள்ளத்தில் எழுந்தது, ''நான் நாடார் வீட்டுப்பிள்ளை.'' ஆனால் வாய் ஒலித்தது, ''நான் ஒரு ஹரிஜன். ஹரிஜன் என்றால் கடவுளுடைய மக்கள். நான் அதுதான். நான் உங்களைச் சேர்ந்தவன்தான். உங்கள் சுவாசம்தானே எனக்குள் ஓடுகிறது.'' விஷயத்தைப் புரிந்துகொண்ட கருப்பன் தன் வெற்றிலைக்கறைப் பல் தெரிய சிரித்தான்.

கல்லூரியில் மறுபடியும் கால் வைத்தான் பாலன். கண்கள் மாறனைத் தேடின. அதோ! ''டேய் மாறா, என்னடா சாப்பாடு இன்னக்கி ?'' அவனது காக்கிப் பையை பிடித்திழுத்து, அலுமினியப் பாத்திரத்தை வெளியே எடுத்தான். ''அட புளிக்கொழம்பா ? எனக்கு ரொம்பப் பிடிக்கும்.'' இரண்டு வாய் அள்ளி வாயில் போட்டுக்கொண்டு, ஒரு சிரிப்பு சிரித்தான். அப்புன்னகை, ''மன்னித்துவிடு மாறா,'' எனக் கொஞ்சியது.

இந்த ''**ஜாதி**'' பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது (மத் 17:21).

11




# இளைஞர் சுமக்கும் சிலுவைகள்

வாலிபப் பருவம் மனோகரமானது மட்டுமல்ல மனவேதனை நிறைந்ததும் கூட. அதிலும் பயபக்தியான வாழ்க்கை வாழ நினைப்போருக்கு வாலவயதின் சிலுவைகளால் அது மணமிழந்தும்போகிறது. வாலிபன் ஒருவன் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற விழைந்தால் அவன் தன்னைத்தான் வெறுத்து, இறைவனளித்த சிலுவையை நாள்தோறும் சுமந்து அவரைப் பின்பற்ற வேண்டும் (மத் 16:24). தேவ மனிதனாய் மாறுவதற்கு தேவ வழியில் செல்வதன்றி வேறு வழியில்லை.

புலம்பல் மூன்றாம் அத்தியாயத்தில் தீர்க்கன் எரேமியா தன் பாடுகளை வறையறுத்துவிட்டு, ‘‘தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனித னுக்கு நல்லது’’ என முடிக்கிறான் (வச 27). தொடர்ந்து, ‘‘அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மவுனமாயிருக்கட்டும்’’ என்கிறான் (வச 28). நுகமானது உருவத்தில் சிலுவையை ஒத்திருக்கிறது. நுகத்தில் பூட்டப்பட்ட காளை தன் விருப்பம்போல் செல்லவியலாது. உழவன் நடத்தும் வழியில்தான் அது செல்லவேண்டும். அப்படியே கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிற எவனும் சுயத்தைப் பின்பற்றும் சிலாக்கியத்தைத் தூக்கி யெறிந்துவிட்டு தன் எஜமானை நிழல்போல் தொடரவேண்டும். எரேமியாவின் இரண்டு கருத்துக்கள் உற்சாக மூட்டுகின்றன: ‘‘அவரே அதை வைத்தார்,’’ ‘‘அது நல்லது.’’ இளைஞர் சுமக்கவேண்டிய சில சிலுவைகளைச் சற்று கண்ணோக்குவோம்.



### 1. சிடு சிடு பெற்றோர்

பெற்றோர் சதா கசந்துகொண்டு, குற்றம் கண்டுபிடித்துக்கொண்டு, புரிந்துகொள்ளாதவர்களாக இருக்கலாம். எனவேதான் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டக்கூடாதென்று பவுல் எழுதுகிறான் (எபே 6:4). இப்படி எரிச்சல் மூட்டுவதின் விளைவு கோபம், சோர்பு, தொய்வு, கசப்பு (கொலோ 3:21). இவையெல்லாம் விட்டுவிட்டு ஓடிவிட எண்ணவேண்டாம். *‘இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்’* என்று பாடத் துணிந்தவர் அவர் முன்னே செல்ல இடமளிக்க வேண்டும். ஓட்டுனர் நீங்களல்ல, அவரே. மற்ற வாலிபர் அனுபவிக்கும் விடுதலை வாழ்வு உங்களுக்கு எட்டாத பழம்தான். சிலுவை பாரமானதுதான். நுகம் காலுக்குக் கட்டுதான். ஆனால் கடவுளே அதை உங்கள்மேல் ஏற்றினார். இப்படி நடத்தப்படுவதை உங்களால் சகிக்க முடியாவிட்டால் நீங்கள் கிறிஸ்துவுக்குப் பாத்திரரல்ல (மத் 10:38). நீங்கள் அவரது சீடனாக முடியாது (லூக் 14:27). இது அனுதினச் சிலுவை (லூக் 9:23). இயேசுவால் உங்கள் வேதனையைப் புரிந்துகொள்ள முடியும். அவர் பாடுபடும்போது அவரது உலகத் தந்தை அவரோடு இல்லை; உங்கள் வேதனையை இயேசு புரிந்துகொள்ளும்படி அவரது பரம தந்தையும் சிலுவை யில் அவரைக் கைவிட்டார்.

யோனத்தான் தாவீதை ஆசாபாசமாய்ச் சிநேகித்தான். அவனது தந்தை சவுலுக்கோ அதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. யோனத்தான்மேல் சினங் கொண்டு சவுல் மோசமாய் ஏசினான். ‘‘இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே... அவன் சாகவேண்டும்’’ என்றான். ‘‘ஏன், என்ன செய்தான் ?’’ என்று யோனத்தான் கேட்டமாத்திரத்தில் சவுல் அவனைக் கொல்லும்படி ஈட்டியை எறிந்தான். யோனத்தான் ஆத்திரத்துடன் சாப்பாட்டு மேசையை விட்டு எழுந்து சென்றான். தகப்பன் தன் நண்பனை நடத்திய விதம் அவனை நோகச் செய்தது (1 சாமு 20:30-34). அவன் கோபங்கொண்டாலும் பட்டயத்தை எடுக்காததினாலும் எதிர்பேசாததினாலும் பாவம் செய்வதைத் தவிர்த்தான்.

பெற்றோர் நச்சரிக்கிறவர்களாய், உங்களைக் கவனியாமல், சட்டை செய்யாமல், கேலி செய்து, குற்றங்கண்டுபிடித்து, அவமானப்படுத்துகிற வர்களாய், பாராட்டாமல், கத்தி, அதிகாரம்பண்ணுகிறவர்களாய், குடிகாரராய், கெட்டவர்களாய் இருக்கலாம். இப்படியிருந்தாலும் மரியாதையோடு நடந்துகொள்ள முடியுமா ? ஆம், அமைதியாய் அனுதினம் சிலுவை சுமப்பதின் மூலம்! நினைப்பதையெல்லாம் செய்துவிடுவதற்கான விடுதலையல்ல வாலிபம். தேவன் தமது நோக்கை நிறைவேற்ற உங்களுக்குக் கட்டுப்பாடு கற்பிக்கிறார். அவரது நுகத்தைத் தள்ளாதீர்கள். அதே சமயத்தில், பெற்றோர் உங்களைக் கொடூரமாய் இம்சிப்பார்களானால் உதவி நாடத் தயங்காதீர்கள்.

## 2. சண்டையிடும் சகோதர சகோதரிகள்

உடன்பிறப்புகள் இருந்தால் உட்பூசல் இயல்புதான். சில சமயம் அது தீராப் பகையாகலாம். மரியாளுக்கும் மார்த்தாளுக்கும் சிக்கல். யோசேப்பின் சகோதரர் அவனைப் பகைத்து, கொல்லவும் திட்டமிட்டனர். ஆனால், கர்த்தர் யோசேப்போடே இருந்தார் என்று வேதம் கூறுகிறது (ஆதி 39:3,21). அவர்களது சதிகள் அவனைப் படிப்படியாக உயரத்தான் தள்ளின. "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் கழுத்தில் இரும்புப் பட்டையை மாட்டினர். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது" (சங் 105:18,19). உங்கள் கழுத்து இரும்பு நுகத்தினால் புண்ணாகிறதா ? கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும்வரை கிறிஸ்துவின் சீடனாய் அமைதியாய்ச் சகித்திருங்கள். இந்த நுகத்திலிருந்து விடுதலை பெறும்வரை இந்தச் சிறையில் எப்படி நடந்துகொள்கிறீர்களென்று தேவன் பார்க்க விரும்புகிறார். உங்கள் சகோதரரை ஆண்டவர் உங்கள் காலடியில் வீசும்போது அவர்களது பகைக்குப் பதிலாய் அன்பையே பதிலளிப்பீர்களென்ற நிச்சயம் அவருக்குத் தேவை. தன் சகோதரரில் யோசேப்பு சிறந்தவன் (அல்லது வேறு பிரிக்கப்பட்டவன்) என்று வாசிக்கிறோம் (ஆதி 49:26). ஏன் ? அவன் சீடத்துவப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தான். உங்கள் சொந்த சகோதரரது நுகத்தைக் கழுத்தைவிட்டு எறிந்துபோடும் நாள் வரும் (ஆதி 27:40). அதுவரை அமைதியாயிருங்கள். அது கர்த்தரிடத்திலிருந்து வந்தது.

## 3. தாயோ தந்தையோ இல்லாமை

பெற்றவர் ஒருவரை இழந்த பிள்ளையின் சோக நிலையை வருணிக்க இயலாது. உலகம் அவனுக்குப் போராட்டம்தான். உயிர்வாழும் அடுத்த பெற்றவர் இழப்பை ஈடு செய்ய இயலாது. பெற்றோரைக் குறித்து முறுமுறுக்கும் பிள்ளைகள் பெற்றவரை இழந்தவருடன் உட்கார்ந்து பேசினால் குறை கூறுவதை நிறுத்திவிடுவர்.

யாபேசின் அம்மா அவனைத் துக்கத்தில் பெற்றெடுத்தபடியால் அப்பெயரிட்டாள். தகப்பன் இறந்தபின் அவன் பிறந்திருக்கலாம். கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து அவன் வளர்ந்ததினால், "தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும்" என்று ஜெபித்தான் (1 நாளா 4:9,10). அவன் வேண்டிக்கொண்டபடியே தேவன் அருளினார்.



"எனக்கு மட்டும் பெற்றோர் இருந்திருந்தால்..." என்று அடிக்கடி சிந்திக்கிறீர்களானால் கண்களை ஏறெடுத்து யாபேசின் ஜெபத்தைச் செய்யுங்கள். திக்கற்றோரின் தேவன் என்று தேவனே தமக்குப் பெயர் சூட்டியுள்ளார். பெற்றோர் இறந்துபோயிருந்தாலும், உங்களைத் தள்ளி விட்டிருந்தாலும், தாயும் தந்தையும் உங்களைக் கைவிட்டாலும் கர்த்தர் உங்களைச் சேர்த்துக்கொள்வார் என்பதை மறந்துபோகாதீர்கள் (சங் 27:10). தான் பெற்ற பிள்ளைக்காய்ப் பரிதபியாமல் ஒரு தாய் தன் மகனை மறந்துவிடுவாளா ? அவளே மறந்தாலும் கடவுள் உங்களை மறப்பதில்லை (ஏசா 49:15).

பெற்றோரில்லாத பிள்ளைகளை உறவினரோ மற்றவரோ பொறுப்பேற்பர், அல்லது அநாதை இல்லத்தில் விடுவர். சிலர் இரக்கத்துடனும் பரிவுடனும் நடத்தப்படுவர், சிலர் வேலைக்காரராய்ப் பயன்படுத்தப்படுவர். அப்பொழுது நீங்கள் பெற்றோரை நினைத்து ஏங்கலாம். இது அடிமைத்தனத்தின் நுகமாகலாம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் எஜமானருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே புத்திமதி (எபே 6:5). அவர்கள் இரக்கமுள்ளவரோ கடினமானவரோ, கர்த்தரே இந்த நுகத்தை உங்கள்மேல் வைத்தபடியால் அன்னாரைக் கனம்பண்ணுங்கள். அமைதியாய்ச் சகித்துக்கொள்ளுங்கள். புண்ணை நக்கிக்கொண்டேயிருந்து ஆவதென்ன ? தேவன் நுகத்தை அகற்றும்போது ஆசீர்வாதமான மழை பெய்யும்.

எனது தாய்வழி தாத்தா திரு. டானியல் தாமஸ் ஓர் அநாதை. உறவினர் ஒருவர் வீட்டில் உணவருந்துவார். உடும்பைப்போல முன்னேற்றம் என்னும் சுவற்றைப் பற்றி ஏறி பெயர்பெற்ற வழக்கறிஞர் ஆனார். ஓர் அநாதைப் பெண்ணையே மணமுடித்துப் பின்பு தமிழக அரசில் ஒரு மந்திரியுமானார். தேவனைச் சார்ந்துகொள்ளுங்கள், அவர் உங்களை உயர்த்துவார்.

## 4. விடுதி வாழ்க்கை

பெற்றோரது பணித்தளத்தில் கல்வி வசதி இல்லாத காரணத்தால் பல மிஷனரிக் குழந்தைகள் விடுதிக்குச் செல்லவேண்டிவருகிறது, மற்றும் பலர் கடல் கடந்து வேலை செய்யும் பெற்றோரால் விடுதியில் விடப்படுகின்றனர். பெற்றோர் இருந்தும் அவர்களை விட்டுப் பிரிந்திருப்பது வேதனைதான். "அம்மா அப்பா போட்டோவைத் தலையணைக்கடியில் வைத்துக்கொண்டு இரவில் பார்த்துக் கண்ணீர் வடிப்பேன்" என்றாள் ஒரு பிள்ளை. மற்றொருத்தி, "பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்க நான் பாவம் செய்தேனா ?" என்றாள். இன்னொரு அங்கலாய்ப்பு : "சிறு பிள்ளையிலேயே பாட்டி தாத்தா பொறுப்பில் விடப்பட்டபடியால் பெற்றோர்மேல் எனக்கு அன்பே இல்லை."

மூன்று அல்லது ஐந்து வயதிருக்கும்பொழுது சாமுவேலின் பெற்றோர் அவனைத் தேவாலயத்தில் விட்டிருக்கலாம். உல்லாசமாய் இருந்துகொண்டானா? "புது உடுப்பு வேண்டாம், வீட்டுக்கு வருகிறேன்" என்று கண்ணைக் கசக்கியிருப்பான். ஏலி தாத்தா பிடித்துக்கொள்ள பெற்றோர் இதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டுதான் விட்டுச் சென்றிருக்கவேண்டும். புது சட்டையைக் கட்டி அணைத்துக்கொண்டு, அம்மாவை நினைத்து அழுதிருப்பான். விடுமுறைக்குக்கூட வீட்டிற்குச் சென்றிருக்கமுடியாது (1 சாமு 1:24; 2:19).

சாமுவேலின் கூட்டாளிகளெல்லாம் ஒரு குடுகுடு தாத்தாவும் அவரது பொல்லாத பையன்களுமே. ஆனால் எல்கானாவின் எல்லா பிள்ளைகளிலும் சாமுவேல் மட்டுமே தீர்க்கதரிசி ஆனான். சாமுவேல் பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனிதருக்கும் பிரியமாக நடந்துகொண்டான் (1 சாமு 2:26). ஏலியின் பையன்கள் பெற்றோர் கண்காணிப்பில் வளர்ந்தும் அவர்கள் முடிவை அறிவோம். சாமுவேலைப் பின்பற்றி நடவுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

### 5. ஞானமற்ற சிநேகிதர்

கிறிஸ்தவனாயிருக்கத் தெரிந்தெடுப்பவன் தன் நண்பரையும் பொறுக்கி எடுக்கவேண்டும். பத்து நங்கையரைக் குறித்து இயேசு ஒரு கதை சொன்னார். அவர்கள் ஒன்றாகவே சென்று, தூங்கி எழுந்து மணமகனுக்காக ஆயத்தப்பட்டனர். புத்தியற்ற ஐவர் எண்ணெய் கேட்கும்வரை சிநேகிதிகள் தான். ஆனால் அவர்கள் கேட்டபொழுது புத்தியுள்ளோர், "இல்லை" என்று தயங்காமல் பண்போடு மறுத்தனர் (மத் 25:1-9).

கிறிஸ்தவ வாழ்க்கை, வளர்ச்சி மற்றும் முதிர்ச்சிக்கு இடையூறாக இருக்கக்கூடிய நண்பரிடமிருந்து சரியான நேரத்தில் கழன்றுகொள்ளும் சிலுவையை ஒவ்வொரு வாலிபனும் சுமந்தே ஆகவேண்டும். உங்கள் சம்பத்தை அவர்கள் வீணடிக்கவிடாமல் ஞானமாய் உங்கள் உரிமையைக் காத்துக்கொள்ளுங்கள். பண்புடன் விலகுங்கள். அவர்களைப் புண்படுத்தப் பயப்பட வேண்டாம். மேற்குறிப்பிட்ட புத்தியற்ற ஐவர் நிச்சயமாய்ப் புண்பட்டிருப்பர். ஆனால் யார் முக்கியம், நண்பரா மணமகனா? நண்பரைப் பிரியப்படுத்த அத்துமீறிச் செல்வதால் இன்று பல வாலிபர் இறையரசிற்கு வெளியே நிறுத்தப்பட்டிருக்கின்றனர். நட்போடு நிற்காமல் மூடரோடு ஒன்றித்துச் செல்வதால் வரும் விளைவு!

### 6. தாலந்தின்மை

தாலந்தின்மை என்று சொல்ல இயலாது, மறைந்து கிடக்கும் திறமைகளை இரைக்காத குறையே. மத்தேயு 25:14-30இல் நெடுந்தூரம் பயணம் சென்ற



ஒரு மனிதனைக் குறித்து வாசிக்கிறோம். வியாபாரம் செய்ய தன் வேலைக்காரருக்கு, ஒருவனுக்கு ஐந்தும், ஒருவனுக்கு இரண்டும், மற்றொருவனுக்கு ஒன்றுமாக தாலந்துகளைக் கொடுத்துச்சென்றான். ஒரு தாலந்தும் இல்லாத ஒருவருமில்லை. ஒரு தாலந்து பெற்றவன் பாடுபட்டு இன்னொரு தாலந்தைச் சம்பாதித்திருந்தால் மற்ற இருவரையும் போலவே சமமாகப் பலன் பெற்றிருப்பான். உங்கள் திறமைகளைக் கண்டுபிடித்து அவற்றை முன்னேற்றுங்கள். சோம்பேறிகளுக்கு துரதிர்ஷ்டம் தவறாமல் வந்துகொண்டேயிருக்கும்! உங்களுக்குப் பத்து உயிர்த் தோழருண்டே—யாரா? உங்கள் பத்து விரல்கள்தான்! ஒளிமயமான எதிர்காலத்தில் நம்பிக்கை வையுங்கள். அந்தத் தன்னம்பிக்கையே உங்களைச் சிறகடித்துப் பறக்கச் செய்யும். வாழ்க்கை என்பது துவக்கங்கள் நிறைந்தது. கடவுளை நம்புங்கள், கடினமாய் உழையுங்கள், நாணயமாய் நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது வாயு அடைத்த பலூனைப்போல எல்லாருக்கும் மேலெழும்பிப் பறப்பீர்கள்.

"உலகத்தை அசைக்கிறவன் முதலாவது தன்னை அசைக்கட்டும்" என்றார் சாக்ரடீஸ். எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முறுமுறுக்காமல் வேலை செய்யுங்கள். தலைமை அதிகாரியாயிருக்கிறீர்களோ, தரை துடைக்கிறீர்களோ, செய்யும் தொழிலில் பெருமை கொள்ளுங்கள். அதுவே தாலந்தின் துவக்கம். கொடைக்கானலிலிருந்து சமபூமிக்கு முதுகில் காப்பிக்கொட்டை மூட்டையைச் சுமந்துவந்து, விற்றுவிட்டுக் கால்நடையாய் திரும்பிச்சென்று பிழைத்த ஒருவரை அறிவேன். பின்னர் ஒரு குதிரை வாங்கினார். இலட்சாதிபதியாய் இறந்தார்.

### 7. வாலிபக் குறுகுறுப்பு

இளைஞர்கள் நெடுகவே இளவயதின் குறுகுறுப்பை எதிர்த்துப் போராடிக்கொண்டேயிருக்கவேண்டும். அது ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு நிமிடமும் சுமக்கும் நுகம். இந்நாட்களில் திரைப்படங்கள் அசுத்தம், விளம்பரங்கள் ஆபாசம், TV காட்சிகள் அகோரம், பத்திரிகைப் படங்கள் அருவருப்பு, இன்டர்நெட் ஆபத்து. இரகசியமாய் நிர்வாணக் காட்சிகளைக் காண வாலிபருக்குச் சோதனைகள் பல.

நோவா குடித்து வெறித்துத் துணி விலகித் தன் கூடாரத்தில் படுத்திருந்தான். மகன் காம் அதைத் தன் இரு சகோதரருக்கும் அறிவித்தான் (தேவைதானா?). தகப்பனை மூடியிருக்கலாம். மாறாக அவன் அம்பலப்படுத்தினான். என்ன மனப்பான்மை அது. நிர்வாணத்தை மூடவே வேதத்தில் கட்டளை பெற்றிருக்கிறோம். புத்தி சுயாதீனமற்ற ஒரு மனிதன் நிர்வாணமாகத் தெருவில் நிற்கக்கண்ட ஒரு தம்பதியர் உடனே துணி வாங்கி அவனை

உடுத்துவித்தபோது அங்கிருந்த போலீஸ், “நீங்கள் கிறிஸ்தவரா? அவர்கள்தான் இப்படிச் செய்வர்” என்று கேட்டாராம். என்னே சாட்சி!மற்ற இரு புதல்வர் சேமும், யாப்பேத்தும் விவரத்தை அறிந்ததும், பொங்கி வந்த தங்கள் குறுகுறுப்பிற்கு பிரேக் போட்டு, பின்னிட்டு வந்து தகப்பனை மூடினர். காம் சபிக்கப்பட்டான்; சேமும் யாப்பேத்தும் ஆசீர்வதிக்கப்பட்டனர் (ஆதி 9:21-27). ஆசையோடு நிர்வாணம் அல்லது அரை நிர்வாணத்தைத் திரைப்படத்திலோ, அச்சிலோ பார்ப்பதினால் அது குறைந்த பாவமாகிவிடாது. வாலிபக் குறுகுறுப்பைத் தூண்டிவிடும் நண்பரை விட்டு ஓடித் தப்பித்துக் கொள்ளுங்கள்.

### 8. தியாகம்

ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒன்றை விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். பணக்கார வாலிபனொருவன் இயேசுவிடம் வந்து சொர்க்கத்திற்குப் போகவேண்டுமானால் தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். இயேசு எங்கே தமது விரலை வைக்க விரும்பியிருக்கமாட்டானோ சரியாக அங்கேதானே அவர் தம் விரலை வைத்து அவன் குறையைச் சுட்டிக் காட்டினார். அதைச் செய்துவிட்டுப் பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு தம்மைப் பின்பற்றிவர இயேசு அவனைப் பணித்தார். அதைச் செய்ய மனமற்றவனாய் அவன் துக்கத்தோடே போய்விட்டான் (மாற் 10:17–21). உலகில் தன் உயிராய் அவன் பற்றிக்கொண்டிருந்ததை விட்டுக்கொடுக்க இயேசு கேட்டுக்கொண்டதின் காரணங்கள் இரண்டு: (அ) இயேசு அவனை நேசித்தார், (ஆ) இயேசு நூறத்தனையாய் அவனை ஆசீர்வதிக்க விரும்பினார் (வச 21,29,30).

தேவனுக்காய்த் தியாகம் செய்வதை இழப்பு என்று கணக்கிடுகிறீர்கள். ஆனால் அது இழப்பல்ல, ஆதாயம் என்பதை நாளடைவில் கண்டு கொள்வீர்கள். சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்தொடர இன்னும் முட்டுக்கட்டையாக இருப்பது எது? அது பணமாகவோ ஒரு பொருளாகவோ ஓர் உறவாகவோ ஒரு பழக்கமாகவோ எதுவாகவோ இருக்கலாம். உங்களுக்கு அது தெரியும். தேவன் உங்களை நூறுமடங்காய் ஆசீர்வதிக்கும்படி இன்றே அதை உதறித்தள்ளுங்கள்.

### 9. பழைய குற்றவுணர்வு

தேவனது பரிசுத்தவானைக் கொலைசெய்யச் சம்மதித்த குற்றவுணர்வை உலகின் நம்பர் ஒன் குற்றவாளியாகிய சவுல் பவுல் சுமந்து கொண்டிருந்தான் (அப் 7:58; 8:1; 1 தீமோ 1:13). ஆனால் குற்றவுணர்வு அவனை மேற்கொள்ளும்போதெல்லாம் தேவனது கிருபையை எண்ணித் தன்னைத்



தேற்றிக்கொள்வான் (1 தீமோ 1:16). பழைய குற்றவுணர்வை ஒதுக்கித் தள்ளாவிடில் ஆன்மீக வளர்ச்சி தடைபடும். குற்றவுணர்வைக் கையாளக் கற்றுக்கொள்வது அவசியம். தனது குருவைக் காட்டிக்கொடுத்த குற்றவுணர்வால் யூதாஸ் நொந்துபோனான். ஆனால் மன்னிப்பின் ஊற்றண்டைக்கு வராமல், இந்தப் பாவம் மன்னிக்கப்பட முடியாதது என்ற பிசாசின் பொய்யை நம்பித் தன்னை மாய்த்துக்கொண்டான். ஆவியானவர் குற்றத்தை உணர்த்துகிறார். பிசாசு குற்றம் சாட்டுகிறான். பழைய பாவம் பூதம்போல் முன் நிற்குமானால் ஆண்டவரிடம் அறிக்கையிட்டுவிட்டுப் பின் அதைக் குறித்துப் பேசவே பேசாதீர்கள். “என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறது” என்று சொல்லிவிட்டு, சீயோன் குமாரத்தி அதற்குப் பரிகாரத்தையும் காட்டுகிறாள்: “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே; அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை; அவைகள் காலைதோறும் புதியவைகள்” (புல 1:14; 3:22,23). காலைதோறும் அவரது கிருபையை நினைவுகூர்ந்து கண் விழியுங்கள்.

### 10. தற்கொலை எண்ணம்

தற்கொலை கூடிக்கொண்டே வருகிறது. காரணம், இளைஞர் பலர் சுயமதிப்பின்றி வளருகின்றனர். தாங்கள் பயனற்றவர், உதவாதவர் என்று நினைக்கின்றனர் (சொல்லப்படுகின்றனர்). ஏன் வாழ்கிறோம் எனப் புரிந்து கொள்ளாததால் தங்களையே தோற்கடிக்கின்றனர். எலியாவும் துவண்டு போய், “போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் மூதாதையரைவிட நல்லவன் அல்ல” என்று ஜெபித்தான் (1 இரா 19:4). “தன் உயிரைக் காக்க” ஓடினான் என்று வாசிக்கிறோம். அடுத்த வசனத்திலேயே மரணத்தைக் கூப்பிடுகிறான். இளைஞரின் முரண்பாடு இதுவே. வாழ விரும்புகின்றனர்; ஆனால் அதற்கோர் நோக்கத்தைத் தேடுகின்றனர். இந்த எட்டிக்காய் அனுபவத்திற்குப் பின்னர் எலியா செய்யவேண்டிய முக்கியப் பணிகளும் அற்புதங்களும் காத்திருந்தன. இறுதியில் அக்கினி இரதமிறங்க வானமேறிச் சென்றான் (2 இரா 2:11). நீங்களும் தேவனுமாகச் சேர்ந்து சமாளிக்கமுடியாத எதுவும் இவ்வாழ்வில் நடந்துவிடப் போவதில்லை. பொறுத்திருந்தால் பலனடைவீர்கள். உங்களையே மாய்த்துக்கொள்வதினால் தேவனைக் கன்னத்திலறைந்து பிசாசைத் தழுவிக்கொள்ளுகிறீர்கள். சிக்கல்கள் வரும் போகும். அவற்றிற்குச் சுத்திகரிக்கும், விசுவாசமூட்டும் சக்தியுண்டு. “இன்னலின் இலாபம் இனிமை” என்று எழுதிவைத்தார் சேக்ஸ்பியர். வாழ்க்கைப் பாதை கரடுமுரடாகும்போது எல்லாம் சரியாகிப் பாலைவனச் சோலையை வந்தடைவோம் என்ற நம்பிக்கையுடன் முன் செல்லுங்கள்.

வேதனையான அனுபவத்தைக் கடந்துவந்த லூசி சொல்கிறாள், ‘‘எனக்கு நேர்ந்தது பேரிடிதான்; ஆனால் என் வாழ்வின் அப்பகுதியை முதுகுக்குப் பின்னால் போட்டுவிட முடியும் என்று கற்றுக்கொண்டேன். அதை நான் மறுக்கவில்லை, அதையே நினைத்துச் சேற்றில் உழலவுமில்லை. மீதி வாழ்க்கையைத் தொடரத் தீர்மானித்துவிட்டேன், தொடர்ந்தே தீருவேன்.’’ யாருக்குமே சிக்கல்களுமுண்டு, வாய்ப்புகளும் உண்டு. வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். தற்கொலை எண்ணம் தலைதூக்கும்போது நம்பகமான ஒருவரிடம் சென்று ஆலோசனை பெறுங்கள். வாழ்க்கையைக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிடாதீர்கள்.

**முடிவுரை**

இறைவனது நுகம் நம்மைப் பண்புள்ளவராகவும் பலமுள்ளவர்களாகவும் மாற்றும். ‘‘வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்’’ என்று இயேசு அழைக்கிறார் (மத் 11:28,29). இனிய இளைஞரே, பொறுக்கவொண்ணா உங்கள் சிலுவையே பொன்மகுடமாகும்! (லேவி 26:13; ஓசி 11:4).






12

# தோல்வியா?

உன் தோல்வியால் வாழ்வே முடிந்துவிட்டதாக நீ நினைக்கலாம். ஆனால், தேவன் அதை வேறுவிதமாக நோக்குகிறார். உலகம் உன்னை உதவாக்கரை என்று ஒதுக்கலாம். தேவன் அப்படிச் செய்வதில்லை. 40% தான் தேர்ச்சி யென்றும் 30% தோல்வியென்றும் நிர்ணயித்தது யார்? மனிதன்தானே! மனிதனால் ஏற்படுத்தப்பட்ட தேர்ச்சியின் அளவு இது. தேவனின் அளவீடு வித்தியாசமாயுள்ளது.

இயேசு கிறிஸ்து மனிதனின் வெற்றியை வேறுவிதமாக மதிப்பிடுகிறார். இயேசு ஓர் உவமையைச் சொன்னார். ஒரு எஜமான் தன் வேலைக்காரனுக்கு ஐந்து தாலந்துகளும், இன்னொரு வேலைக்காரனுக்கு இரண்டும், வேறொருவனுக்கு ஒன்றும் கொடுத்துவிட்டு, நீண்ட தூரம் பயணம் போனான். எஜமான் திரும்பி வந்து கணக்குகளைச் சரிபார்த்தபோது, ஐந்து தாலுந்துகள் பெற்றவன் தன் உழைப்பினால் இன்னும் ஐந்தினைச் சம்பாதித்திருந்தான். இரு தாலந்துக்காரன் வேறே இரு தாலந்துகளைக் கொண்டுவந்தான். ஒரு தாலந்து பெற்றவனோ அதைப் புதைத்துவைத்து, இலாபம் ஈட்டத் தவறியதால் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன்’ என்று கடுமையாக தண்டிக்கப் படுகிறான்.

ஐந்து மற்றும் இரண்டு தாலந்துகளைச் சம்பாதித்த இருவருக்கும் பரிசு ஒரே மாதிரிதான். ‘‘நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள வேலைக்காரனே! நீ

கொஞ்சத்திலே உண்மையாக இருந்தாய், உன்னை அனேகத்தின்மேல் அதிகாரியாக வைக்கிறேன். உன் எஜமானனின் மகிழ்ச்சியில் பங்குபெறு வாயாக'' என்பதே. ஐந்து தாலந்துகள் பெற்றவன் அதிகமாகவோ, இரண்டு தாலந்துகள் பெற்றவன் குறைவாகவோ பரிசளிக்கப்படவில்லை. ஒரு தாலந்து பெற்றவன் இன்னும் ஒரேயொரு தாலந்தைப் பெற்றிருந்தாலும் அதே பரிசு தான். ஆனால் அந்த ஒரு தாலந்தை உபயோகிக்க அவன் தவறிவிட்டான்.

ஐந்து தாலந்துகள் பெற்றவன் நான்கு மட்டும் சம்பாதித்திருந்தால் அவன் உத்தமனல்ல; உண்மையானவனுமல்ல! இன்றும் ஐந்து தாலந்துக்காரனைப் போன்று, 90% மதிப்பெண் பெறக்கூடிய திறமை வாய்ந்த அநேக மாணவர்கள் வெறும் 70% மற்றும் முதல் வகுப்புத் தேர்ச்சியோடு நின்றுவிடுகின்றனர். உலகமோ இவர்களைத் 'திறமைசாலிகள்' எனப் போற்றுகிறது. ஒரு தாலந்து பெற்றவனைப் போன்று 25% மதிப்பெண் மட்டுமே பெறக்கூடிய எளிய மாணவர்கள் கடினமாக உழைத்து 30% பெற்றாலும் உலகமோ இவர்களை 'உதவாக்கரைகள்' என்று புறக்கணித்துவிடுகிறது. நமது ஆண்டவர் வரும்போது இவர்களை, ''உத்தமும் உண்மையுமுள்ள வேலைக்காரர்கள்'' என்றழைப்பார்.

தேவன் உனது தேர்ச்சியை மற்றும் முதல் வகுப்பு வெற்றியை மட்டுமே முதன்மையாகக் கருதுபவரல்ல. முழு பலத்தோடு நீ செயல்படுவதையே எதிர்பார்க்கிறார். அவ்வளவுதான்.

முழுமூச்சோடு நீ உழைத்திருக்கும்போது உன்னைத் தோல்வியடைந்த வனாகக் கருதாதே! பெற்றோரோ ஆசிரியரோ, நண்பரோ உன்னை சோர்வடையச் செய்ய விட்டுவிடாதே!

வின்ஸ்டன் சர்ச்சில், பள்ளியில் தேர்ச்சி பெறத் தவறினாலும் இங்கி லாந்தின் பிரதம மந்திரியாக வர முடிந்ததே! அநேகமுறை நாம் தோல்வி யடைந்தவர் என்பதினாலல்ல, நமது வெற்றிகளை காணத் தவறிவிட்டதே நமது சோர்பிற்குக் காரணமாகிறது. வெற்றியும் சந்தோஷமும் எதில் பெற உன்னால் முடிகிறதோ, அதில் தேவன் உனக்கருளிய திறமைகளை வளர்த்துக்கொள்.

''சகோதரரே! தேவன் உங்களை அழைத்த அழைப்பைப் பாருங்கள். உங்களில் அநேகர் ஞானிகளில்லை. ஆனால் ஞானிகளை வெட்கப்படுத்த தேவன் பைத்தியங்களைத் தெரிந்துகொண்டார்'' (1 கொரி 1:25,27).

தேவன் உனக்கோர் வாக்குறுதி தருகிறார். ''என் கிருபை உனக்குப் போதும். உன் பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்'' (2 கொரி 12:9).



ஏற்றமும் இறக்கமும், குளிரும் கோடையும் நிறைந்ததே வாழ்க்கை! எதுவாயினும், என்ன வந்தாலும், தைரியத்துடன் அவற்றை சந்தித்து முன்னேறிச் செல்வதே மிக முக்கியம். உனது முயற்சிகளை இரட்டிப்பாக்கு. உன் அறிவை மட்டுமல்ல, எல்லா திறமைகளையும் பயன்படுத்து. சில நேரங்களில் வெற்றியைப் போலவே தோல்வியும் பயனுள்ளதாகிறது. வெற்றியினும் தோல்வியிலிருந்தே நாம் அதிகம் கற்றுக்கொள்கிறோம். நம்மிலிருக்கும் திறமைகளை அறிந்து, அதை பயன்படுத்தவேண்டுமென்பதே அந்த எளிய இரகசியம். கண்ணாடியைப் போல நாம் உடைந்துவிடக்கூடாது. சேலம் எஃகு இரும்பு போலிருக்கவேண்டும். உனக்குக் கிரீடம் சூட்ட ஆண்டவர் சீக்கிரம் வருகிறார். உனக்கேற்றார்போல் திறமையினைத் தந்துள்ளார். அதிக திறமை பெற்றவர்களுக்குக் கிடைக்கும் பரிசே உனக்கும் கிடைக்கும். ஆண்டவர் உன்னை அதிகம் நேசிக்கிறார். ஏனெனில் அதிகம் திறமைபெற்றவர்களை நேசிப்பது போல உன்னை எவரும் நேசிப்பதில்லையே. உன் திறமைக்கேற்றார்போல் நீ உழைக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

சந்தோஷப்படு! நீ தோல்வியுற்றவனல்ல! தேர்வில் தோல்வியடைந்து விட்டாயா? முதல் வகுப்பு தேர்ச்சி கிடைக்கவில்லையா? எங்கோ, என்றோ, எதிலோ தோல்வியா? புலம்புகின்றாயோ?

மகிழ்ந்து களிகூறு! நீ தோற்றவனல்ல!

13



# நங்கையர் கேட்பவை

*தங்களைக் குழப்பும் கேள்விகளைக் கேட்க கிறிஸ்தவ வாலிபருக்குத் தருணம் கிட்டுவது அபூர்வம். ஆகவே அவர்கள் தவறான இடங்களிலிருந்து பக்தியற்ற தகவல்களைச் சேகரிக்கின்றனர். எமது நங்கையர் முகாம் ஒன்றில் கேள்வி-பதில் நேரத்தில் முகாமியர் எனது மகள் இவாஞ்சலினையும், என்னையும் நோக்கி கேள்விக்கணைகளை எய்தனர். கொடுக்கப்பட்ட பதில்கள் தங்களுக்குப் பக்திவிருத்தியும் புத்தியும் அளித்ததாகச் சாட்சி பகர்ந்தனர். எமது வாசகர், முக்கியமாக நங்கையர் நலனுக்காக சில கேள்விகளின் பதில்களை இங்கே பிரசுரிக்கிறோம்.*

**1. நம்பின வாலிபன் கைவிட்டான்; இப்போது யாரையும் நம்ப முடியவில்லை. ஆண்கள் எல்லாருமே மோசம் என்று எண்ணுகிறேன்.**

அவனை மன்னித்து விடுவது மட்டுமே உங்கள் காயத்தை ஆற்ற வல்லது. எல்லாரையும் கண்மூடித்தனமாய் நம்பாமல் ஞானமாய் நடந்துகொள்வதவசியம். அதே சமயம் எப்போதும் சந்தேகக் கண்ணோடு பார்ப்பதும் தவறு. உங்கள் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்க அது இடையூறாகும். இன்னொருவரை நீங்கள் நேசிக்க இயலாதிருப்பது இயல்பே. நாள் சென்றாலும் நிச்சயமாக இதிலிருந்து வெளிவருவீர்கள். யாவரோடும் ஆரோக்கியமான நட்பு கொள்வதோடு யாவருமே மனிதர்தான் என்பதை நினைவில் கொள்



ளுங்கள். சரியான நபரிடம் நடத்த தேவனைக் கேளுங்கள். இக்காரியத்தில் பெற்றோரைச் சார்ந்து செயல்படுவது நல்லது.

**2. விடுதியில் தங்கியிருக்கும் நான் ஒரு பெண்மேல் தவறான அன்பு கொண்டிருக்கிறேன்; அவளும் அப்படியே என்னை நேசிக்கிறாள்.**

பெற்றோரின் அன்பும் பாசமும் கிடைக்காத பல நங்கையர் இப்படிப்பட்ட ஆரோக்கியமற்ற உறவுகளில் சிக்கி தாங்கள் ஏதோ அடைக்கலம் பெற்றதைப் போன்ற தவறான உணர்வுக்குள் வருகின்றனர். இந்தத் தூண்டிலில் மாட்டிக் கொள்ளாதீர். அப்பெண்ணை விட்டு விலகி உடற்பயிற்சி, விளையாட்டு போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடுங்கள். உங்கள் மனதைத் தேவனது வசனத்தினால் நிரப்பிக்கொள்ளுங்கள். சோம்பலாயிருப்பதைத் தவிர்த்து நல்ல நட்புறவுகள், பொழுதுபோக்குகளை உருவாக்குவதின் மூலம் தனிமை உணர்வை மேற்கொள்ளுங்கள். உறங்கச் செல்லும்போது களைத்துத் தூங்கி விடவேண்டும். வேறு யாருடனும் நட்புறவுகொள்வதைத் தடுத்து ஆட்டிப் படைக்கும் சிநேகிதங்களைத் துண்டித்து விடுங்கள். நம்பிக்கையான மூத்த சகோதரி அல்லது ஒரு பெண் ஆலோசகரிடம் உதவி நாடலாம் (ரோ 1:26,27).

**3. சிநேகிதிகளோடு வெளியே செல்லலாமா ?**

உங்கள் சிநேகிதிகள் யார், நீங்கள் எங்கே செல்கிறீர்கள் என்பதைப் பெற்றோர் அறிந்திருக்கவேண்டும். எப்பொழுது திரும்புவீர்கள் என்பதைத் திட்டவட்டமாய் அறிவியுங்கள். பாதுகாவலாய்ப் போய்வருவீர்கள் என்று பெற்றோர் நினைத்தால் மகிழ்ச்சியுடன் அனுப்பி வைப்பார்கள். பல நங்கையர் வீட்டுக் காரியங்களில் ஈடுபாடு கொள்ளாததினால் பெற்றோர் அவர்களைச் சிநேகிதிகளுடன் அனுப்ப விரும்புவதில்லை. சிநேகிதிகளுடன் வெளியே செல்வது நெருக்கத்திலிருந்து வெளியேறும் பயனுள்ள பொழுதுபோக்காகவும் உங்கள் ஆள்தத்துவத்தை முன்னேற்றும் நேரமாகவும் இருக்கட்டும். உங்கள் சிநேகிதிகள் உங்களை மேம்படுத்துகின்றனரா என அவ்வப்போது கணித்துக்கொள்ளுங்கள்.

**4. நெருங்கிய சிநேகிதி பாவத்தில் ஈடுபடும்போது அல்லது தவறான பாதையில் செல்லும்போது நான் என்ன செய்யலாம் ?**

அவளுக்காக ஜெபித்து அன்புடன் அவளது தவற்றை எடுத்துக்காட்டுங்கள். அவளது கண்களை நீங்கள் திறந்து விட்டபடியால் இப்போது பொறுப்பும் தெரிந்தெடுப்பும் அவளுடையதே. உங்களது உதவியை அவள் வரவேற்கிறாளா எனப் பணிவுடன் கேளுங்கள். உங்கள் ஆலோசனையை அவள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் உங்களுக்குக் கோபமும் வெறுப்பும் வருவது

இயல்பே. அதனால் நட்புறவை முறித்துவிடாமல் தொடர்ந்து அன்பு காட்டுங்கள். அவளையல்ல, அவளது பாவத்தையே கண்டனம் செய்யுங்கள். அவள் ஏற்கெனவே குற்றவுணர்வில் கூனிப்போயிருப்பதினால் அவளைக் குற்றவுணர்வடையச் செய்வது உங்கள் நோக்கமாயிருக்கவேண்டாம். அவளைக் கண்டனம் செய்வது அவள் மாறுவதற்குத் தடையாகவே இருக்கும். அவளாகவே தீர்மானம் எடுக்க விட்டுவிடுங்கள். இது அவளது வாழ்க்கை. அவளது வாழ்க்கைக்கு அவளே பொறுப்பாளி, நீங்களல்ல. உங்கள் ஆலோசனையை அல்லத்தட்டி தன் வாழ்வை அவள் நாசமாக்கிக்கொண்டால் நீங்கள் குற்றவுணர்வடையத் தேவையில்லை. உங்களால் இயன்றதைத்தான் நீங்கள் செய்யலாம் (நீதி 27:5,6).

**5. கெட்ட பழக்கங்களை எப்படி விட்டொழிக்கலாம் ?**

ஒரே ஒரு கெட்ட பழக்கத்தைத் தெரிந்துகொண்டு அதை வேரறுக்க இப்பொழுதே துவங்குங்கள். கெட்டப் பழக்கங்களை ஒவ்வொன்றாகச் சரிசெய்யுங்கள். சில பழக்கங்களை உறுதியான தீர்மானமெடுத்து அதில் கட்டுப்பாட்டுடன் இருப்பதால் ஒரே நாளில் மேற்கொள்ளலாம். மற்ற சிலவற்றை மேற்கொள்ள நாட்கள், வாரங்கள், மாதங்கள், ஒருவேளை ஆண்டுகளும் ஆகலாம். ஆகவே தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாதீர்கள். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமே. விடாப்பிடியாய் தொடருங்கள். சின்னக் கெட்ட பழக்கமாயிருந்தாலும் தேவனது உதவியை நாடி நீங்கள் மாற விரும்புகிறீர்களென்று அவரிடம் கூறுங்கள்.

**6. திரைப்படம் பார்க்கலாமா ?**

திரைப்படங்களிலும் பல TV படங்களிலும் அடிதடி, திருமணத்திற்கு வெளியே உறவு, கற்பழிப்பு, அருவருப்பு, காமவிகாரங்கள், கெட்ட வார்த்தைகள், சிகரெட் போன்றவை நிறைந்துள்ளன. மணிக்கணக்காக இவற்றைப் பார்ப்பதினால் இத்தலைமுறைக்குப் பொல்லாப்பைக் குறித்த சீற்றம் குறைந்து கொண்டே போகிறது. TVயில் பார்க்கும் கதாநாயகரை முன்மாதிரியாகக் கொள்ளவே வாலிபர் துடிக்கின்றனர். *மயூரி, தேசியகீதம், பத்துக் கட்டளைகள்* போன்ற படங்கள் விதிவிலக்குகள்.

வேத வசனத்தினால் பழக்குவிக்கப்படவேண்டிய மனச்சாட்சி ஒன்றைக் கடவுள் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். உங்கள் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து நியாயத்தீர்ப்பின் அந்த பயங்கரமான நாளிலே கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பாகும். கைக்கெட்டும் தூரத்திலுள்ள எதையும் அனுபவிக்க உங்களுக்கு விடுதலையுண்டு, ஆனால் உங்கள்



தெரிந்தெடுப்புகளுக்கு நீங்களே பொறுப்பாளி (பிர 11:9; 1 கொரி 6: 12). என்ன பார்க்கிறீர்கள், எவ்வளவு நேரம், உங்கள் வயது, அடிமைப்பட்டிருக்கிறீர்களா என்பவற்றையெல்லாம் சிந்திப்பது நல்லது.

***7. ஓர் ஆணுக்கும் எனக்கும் இடையே குறைந்தது ஐந்து அடி தூரம் இருக்கவேண்டுமென்று ஒரு சகோதரி சொன்னார்கள். பஸ்ஸில் என்ன செய்வது ?***

எழுத்தின்படி இந்த ஆலோசனையைப் பார்க்கக்கூடாது; அதின் உட்கருத்தைக் கவனிக்கவேண்டும். மறுபாலருடன் உறவில் பாதுகாவலான தூரத்தில் நிற்கவேண்டுமென்பதே இதின் கருத்து.

**8. மரியாளிடம் ஜெபிப்பது தவறா ?**

இயேசு இவ்வுலகில் பிறக்க ஒரு கருவியாயிருந்தது மரியாள்; இயேசுவோ கடவுள். நாம் உயிர்பெறும்படியாக உயிரைக் கொடுத்ததும் நம்மை இரட்சிக்க மன்னுருவில் வந்ததும் அவரே. ''அவருடைய'' பெயரில் எதைக் கேட்டாலும் அருளுவதாக வாக்களித்தது அவரே. சாஸ்திரிகள் வீட்டிற்கு வந்து பணிந்து கொண்டது குழந்தையாகிய இயேசுவைத்தான், மரியாளையல்ல (மத் 2:11; 1 தீமோ 2:5).

**9. எனது மாமாவை மணக்கலாமா ?**

நெருங்கிய உறவினரை மணப்பது ஆரோக்கியமானதல்ல. இப்படிப்பட்ட திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளைச் சில குடும்ப நோய்கள் தாக்குவதாக மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இதைத் தவிர்ப்பது உசிதம். இளம் பருவத்திலேயே சில சமயங்களில் மூத்தோர் பிள்ளைகளின் திருமணத்தைத் தீர்மானித்துவிடுவதுமுண்டு. பிள்ளைகள் வளர்ந்தபின் அவர்கள் பொறுத்தமற்ற ஜோடியாயிருந்தும் பழைய தீர்மானம் அவர்கள்மேல் திணிக்கப்படுகிறது. குடும்பச் சொத்து வெளியே போகாமலிருக்கவும் இப்படிச் செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட அடிப்படையில் திருமணங்கள் ஒருங்குசெய்யப்படக்கூடாது. பாரம்பரியச் சங்கிலிகளை உடைத்தெறிந்து கடவுள் உங்களுக்காய்த் தெரிந்தெடுத்த மனிதனை மணக்க முதுகெலும்புடையவர்களாய் இருங்கள்.

**10. பெற்றோர் வேலைக்குச் செல்கின்றனர். வீட்டில் தனியே இருக்கும் போது சொந்தக்காரப் பையன்கள், உறவின் முறையான ஆண்கள் எங்களிடம் தவறாய் நடந்துகொள்கின்றனர். அம்மாவிடம் சொல்ல முயற்சித்தாலும் அவர்கள் அதைச் சட்டைசெய்யவில்லை.**

நீங்கள் ஞானமாக நடந்துகொண்டு பெற்றோரிடம் காரியத்தை வெளிப் படுத்தவேண்டும். தெளிவாக, வெளிப்படையாக, விவரமாக நடந்ததைச் சொல்லி அவர்களைக் கவனிக்கச் செய்யவேண்டும். உறவு முறிந்துவிடுமே என்றோ, உங்களைக் குறித்து உறவினர் என்ன நினைப்பார்கள் என்றோ, உங்களைக் குற்றப்படுத்துவார்களோ என்றோ அச்சம் கொள்ளவேண்டாம். உறவினரைக் குற்றப்படுத்துவதாகவும் கவலை வேண்டாம். கற்பைக் காப்பதே முக்கியம். தொடர்ந்து வரக்கூடிய சிக்கல்களைத் தவிர்க்க உண்மை வெளியே வரவேண்டும் (2 சாமு 13).

### 11. கடவுளின் அன்பை ஓர் இந்து சிநேகிதியுடன் பகிர்ந்து கொள்ளுவது எப்படி ?

நீங்கள் சொல்ல நினைப்பதையெல்லாம் ஒரேயடியாக அவள்மேல் திணிக் காதீர்கள். அவளை அவள் இருக்கிறபடியே ஏற்றுக்கொள்ளுகிறீர்கள், அவளை ஒரு தனி நபராக மதிக்கிறீர்கள் என்பதை அவள் புரிந்துகொள்ளும்படி அவள் சொல்வதை முதலில் காதுகொடுத்துக் கேளுங்கள் (ரோ 5:8). பகிர்ந்து கொள்ளுமுன் நட்பு அவசியம். அவளது மதத்தையோ வழிபாட்டையோ குறைத்துப் பேசுவது தடங்கலாகும். உங்களது சாட்சியையும் கடவுளது மீட்பின் திட்டத்தையும் விளக்குங்கள். அவளுக்காக ஜெபித்துக்கொண்டேயிருங்கள். அவள் ஆர்வங்காட்டாவிடில் கோபமோ சோர்போ அடையாதீர்கள். நம்பிக்கை அவள் உள்ளத்தில் துளிர்க்க அவகாசம் அளியுங்கள். பெரிய பெரிய வார்த் தைகளைப் பயன்படுத்தாமல் எளிமையாய் விளக்குங்கள். அனுதின வாழ்வில் அவள் கடவுளைக் காண உதவி செய்யுங்கள். சுகம் கிடைத்துவிடும், அற்புதம் நடந்துவிடும் என்றெல்லாம் ஆசைகாட்டி வசப்படுத்தாதீர்கள். ஏற்ற சமயத்தில் கடவுள் உங்கள் வார்த்தைகளை ஆசீர்வதிப்பார். நற்செய்தியை அறிவிப்பது மட்டுமே உங்கள் வேலை; இரட்சிப்பு தேவ ஆவியானவரது வேலை. கடவுளது வேகத்திலேயே போகப் பழகுங்கள். "*வேதாகமப் பேருண்மைகள்*" அல்லது புதிய ஏற்பாடு ஒன்று அவளுக்குப் படிக்கக் கொடுங்கள். அவளைத் தாங்கிப் பிடிக்கும் நல்ல சிநேகிதியாகத் தொடருங்கள்.

### 12. என் சிநேகிதிகளுக்கு boy friends உண்டு; என்னையும் ஒருவனைத் தெரிந்தெடுக்க வற்புறுத்துகின்றனர்.

நல்லதைச் செய்வது அவமானமாகத் தோன்றும் தருணங்களிலும் நண்பரது வற்புறுத்தல்களுக்குப் பலியாகிவிடாதீர். ஞானமும் நகைச்சுவையும் இணைந்த ஒரு கதை: ஒரு மனிதனிலிருந்து இயேசு பிசாசுகளைத் துரத்தின போது அவை பன்றிக் கூட்டத்திற்குள் சென்றன. கூட்டம் பாய்ந்துசென்றபோது ஒரு பன்றி மற்றொன்றிடம் "எங்கே ஓடுகிறோம்" என்று கேட்டதாம். "எனக்குத் தெரியாது. எல்லாரும் ஓடுகிறார்கள், நாமும் ஓடுவோம்; பேசாமல் வா!"



என்று பதில் வந்ததாம். முடிவை அறிவோம். எல்லாம் கடலில் விழுந்து மாண்டன. நண்பர் பேச்சைக் கேட்டு வாழ்க்கையைப் பாழாக்கிவிடாதீர். பிறருடைய ஆமோதிப்பையும் அங்கீகரிப்பையும் பெறத் தேடுவதை விட்டுக் கடவுளுக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்துகொள்ள உங்களைப் பழக்குவியுங்கள். இப்பொழுதே உங்கள் இலட்சியங்களில் நிற்கத் துவங்காவிடில் எப்பொழுதுமே அவற்றில் நிற்கக் கற்றுக்கொள்ளமாட்டீர்கள். நீங்கள் வளர வளர அது உங்கள் வாழ்க்கையின் பெரும் தீர்மானங்களைப் பாதிக்கும். சூழ்நிலைகளோ மக்களது எதிர்பார்ப்புகளோ உங்களை ஆட்டிப்படைக்கவிடாதீர்கள். தேவனது கரத்திலிருந்து கீழே இறங்காதீர். தானியேலாயிருக்கத் தைரியங்கொள் ளுவீர்.

### 13. நகங்களை வளர்க்கலாமா ? அவற்றிற்கு வண்ணம் பூசுவது பாவமா ? கவர்ச்சிகரமாயிருக்க முயற்சிப்பது தவறா ?

வாலிப வயதில் பிறர் நம்மைப் பாராட்ட வேண்டுமென்று விரும்புவது இயல்பே. தோற்றத்தில் கவனம் செலுத்துவதும் இயல்பே. நகங்களை மிக நீளமாக வளர்க்காதீர்கள், சுத்தமாக வையுங்கள், பிறரைக் காயப்படுத்தி விடாதீர்கள். இயற்கையான வண்ணம் பயன்படுத்துவது நல்லது. குறைந்த 'மேக்கப்' மிகுந்த அழகு. அளவுக்குமீறி பவுடரையும், உதட்டுச்சாயம் போன்ற வற்றையும் பூசிக்கொள்வது இயற்கை அழகைக் கெடுக்கும். உங்கள் கலாச்சாரத்தைக் கவனித்து நாணய வரம்பிற்குள் கவர்சிகரமாயிருங்கள்.

### 14. நல்ல நட்புறவுகளை எப்படிக் காப்பது ?

எல்லா உறவுகளிலும் சிக்கல்கள் தலைநீட்டத்தான் செய்யும். சிக்கல்களின் மூலகாரணத்தைக் கண்டுபிடிக்கச் சிரத்தை எடுங்கள். அவற்றை வெளிக் கொணர்ந்து எப்படி அவற்றைத் தீர்க்கலாம் என விவாதியுங்கள். அவற்றைச் சரிசெய்து மறுபடி அவை தலைதூக்க விடாதிருக்கத் தீர்மானமெடுங்கள் (மத் 5:23,24). கொஞ்சம் விட்டுக்கொடுத்து ஏற்றுக்கொள்ளும் தன்மை யிருந்தால் உண்மை நட்புறவுகள் வாழ்வெல்லாம் நீடிக்கும். ஒவ்வொருவரது ஆள்தத்துவத்தின் தனிச்சிறப்பைப் புரிந்துகொண்டு, ஒவ்வொருவரிலுள்ள வித்தியாசங்களை அனுசரித்து நம்பிக்கையைக் காத்துக்கொள்ளுங்கள். உங்களை நேசிப்பது போல உங்கள் சிநேகிதியை நேசியுங்கள்.

### 15. பாடுபட்டுப் படித்தாலும் பரீட்சையில் சில குறிப்புகளை மறந்து விடுகிறேன்.

ஆண்டவரைக் கேட்டால் அவர் நமக்கு ஞானம் தருவார் என்று அப் போஸ்தலன் யாக்கோபு கூறுகிறார் (யாக் 1:5). நன்றாக ஆயத்தம் பண்ணுங்

கள், கடவுள் வெற்றியை அருளுவார் (நீதி 21:31). பாடங்களைத் தண்ணிப் பாடமாகும்வரை நன்றாய்த் திரும்பத் திரும்பப் படித்து பலமுறை எழுதிப் பாருங்கள். ஞாபகத்தில் வைக்க இது உதவும். வகுப்பில் ஓரிரண்டு ஞானமற்ற பிள்ளைகளைச் சேர்த்து நீங்கள் படித்தவற்றைக் கற்பியுங்கள். ஒரு கற்பனை மாணவிக்குக்கூட கற்பிக்கலாம். கற்பிப்பவை உங்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதியும். சேர்ந்து படிப்பது கவனச்சிதைவைத் தவிர்க்கும். பரீட்சைக்கு அரைமணி நேரத்திற்கு முன்பாகப் படிப்பதை நிறுத்தி மனதை அமைதிப் படுத்துங்கள். விடைகளை நினைவுகூர தேவனிடம் வேண்டுதல் செய்தபின் நம்பிக்கையோடு பேனாவை எடுங்கள். ஞாபகசத்தி பாதிப்புள்ளவர்களானால் உங்களையே கண்டனம் செய்துகொள்ளாதீர். உங்களால் இயன்றவரை சிறப்பாகச் செய்து பின்னர் தேவன் உதவ எதிர்பாருங்கள். பரீட்சை நாட்களிலும் ஆறு மணி நேரமாவது தூங்குவது நல்லது. ஞாபகசக்தி பாதிப்பிற்கு வீட்டுச் சிக்கல்களால் வரும் அழுத்தங்கள், எதிர்காலத்தைப் பற்றிய கவலை போன்றவையும் காரணங்களாகலாம் (பிலி 4:6).

### 16. கூந்தலை வெட்டிக்கொள்ளலாமா ?

முகத்திற்கேற்றவாறு கூந்தலை வெட்டிக்கொள்ளலாம். ஆனால் ஆணா பெண்ணா என்று சுலபமாய்க் கண்டுபிடிக்கக்கூடிய அளவு இருக்க வேண்டும்!

### 17. வாலிபரைப் பார்க்கும்போது கிளர்ச்சியான எண்ணங்கள் எழுவதேன் ?

சுமார் பன்னிரெண்டு வயதில் உங்கள் பிட்யூட்டரி சுரபி சில ஹார்மோன் களை உங்கள் இரத்த ஓட்டத்தில் ஊற்றுகிறது. இவை மனநிலை உடல்நிலை மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. கவர்ச்சிகரமாய்த் தோற்றமளிக்க விரும்பு கிறீர்கள், மறுபாலரால் ஈர்க்கப்படுகிறீர்கள். இது இயற்கை, பாவமல்ல. ஆனால் இவை கட்டுப்படுத்தப்படாவிட்டால் பாவச்செயல்களில் தள்ளும். பாலுறவு எண்ணங்கள் தம்மில்தாமே பாவமல்ல. அவற்றினால் ஏவப்பட்டு செயல்படத் திட்டமிடும்போது அவை இச்சை அல்லது பாவமாகிறது. இங்குதான் சோதனை பாவமாக உருவெடுக்கிறது. எனவே உங்கள் கற்பனைகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். உங்கள் உள்ளுணர்வுகளைக் கீழ்ப்படுத்தி அவற் றினால் விரட்டப்படுவதற்கு மறுப்பு தெரிவியுங்கள். சோம்பலான எண்ணங் களைச் சோம்பல் பிறப்பிப்பதால் உங்களுக்கு விருப்பமான வேலையொன்றில் சுறுசுறுப்பாயிருப்பதவசியம். இந்த இனிமையான பாலுணர்வுகளே இறுதியில் உங்களைத் திருமணத்திற்கு நேராக நடத்தும். கடவுள் உங்களை ஏற்ற வாழ்க்கைத் துணைவரிடம் நடத்தத் தவறாது ஜெபித்துவாருங்கள். இதுவே உங்கள் உள்ளுணர்வுகளைச் சீராக்கி கண்ட கண்ட வாலிபர் பிறகே ஓடாமல் தடுக்கும்.



### 18. வாலிபர் என்னைத் தொடரும்போது நான் என்ன செய்ய வேண்டும் ?

நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்; பத்திரமாய் வீடுவந்து சேருங்கள்.

### 19. காதலிப்பது பாவமா ? விளக்கமான பதில் தேவை.

காதலிப்பது பாவம் என்று வேதம் சொல்லவில்லை. ஆனால் 20 வயது வரை சரியான துணையைத் தேர்ந்தெடுக்குமளவிற்கு உங்கள் மனநிலை முதிர்ச்சியடைவதில்லை. அடிப்படைக்கல்வியை முடிக்கும்வரை காதலிக்கா மலிருப்பது ஞானம். காதல் திருமணங்களில் எத்தனை தோல்வியடைகின் றனவோ பெற்றோர் ஒழுங்குசெய்யும் திருமணங்களிலும் அத்தனை தோல்வி யடைகின்றன. பெற்றோர் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுத்து மணமுடிக்கும் இந்திய வாலிபர் அதிர்ஷ்டசாலிகளென மேலைநாட்டுப் பெற்றோர் பலர் கருதுகின்றனர். ஐந்து வாலிபப்பிள்ளைகளின் தாயாகிய ஒரு ஜெர்மானியப் பெண்ணிடம் இந்தியப் பெற்றோருக்குத் தம் முதிர்ந்த பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைத் துணைவரைத் தெரிந்தெடுக்கக்கூடும் என்ற நம்பிக்கை கிடையாது என்றேன். சட்டென்று அவர்கள், *“தே ஆர் ரைட்”* (அவர்கள் நினைப்பதே சரி) என்றார்கள். மேலைநாடுகள் நம்மிடமிருந்து கற்றுக்கொள்கின்றனவோ ? இனிக்கும் காதலைவிட இறுதிவரை வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாக நிற்பதே சாதனை. திருமணத்திற்குப்பின் காதல் மங்கி விடும்; அதன்பின் அர்ப்பணிப்பு மெள்ள மெள்ள வாழ்நாளெல்லாம் அன்பாக மலரும். இந்தக் காலம் உங்கள் அன்பை எல்லாவிதத்திலும் கடுமையாகச் சோதிக்கும். உங்களுக்குத் துணையைத் தேடும்போது பெற்றோர் இதையே மனதிற்கொண்டு தேடுகின்றனர். பெற்றோருடைய ஆலோசனையைத் தள்ளி முதியோருடைய புத்திமதியை அல்லத்தட்டி தங்கள் உள்ளுணர்வுகளைப் பின்பற்றி காதலித்து மணமுடிக்கும் பலர் வாழ்நாளெல்லாம் கண்ணீர் வடிக்கின்றனர், எச்சரிக்கை! திருமணம் என்பது வாழ்க்கைத் தீர்மானம்; அது நீங்கள், பெற்றோர் அல்லது பொறுப்பாளி, பெரியவர்கள் சேர்ந்து தீர்மானிக்க வேண்டியது. இதனால் பெற்றோரே அதிக பொறுப்பாளிகள் என்று சொல்வதற்கில்லை. இந்த வாழ்க்கைத் தீர்மானத்தில் உங்களுக்கும் சம பொறுப்புண்டு. நீங்கள் திருமணம் செய்யப்போகும் நபரைக் குறித்த திருப்தியும் சந்தோஷமும் உங்களுக்கு அவசியம். ஜெபித்து தேவ சித்தத்தின் படியான நபரைத் தெரிந்தெடுங்கள்.

### 20. சூழ்நிலையினால் வீட்டில் தனியாக ஒரு அல்லது பல ஆண்களோடு இருக்க நேரிட்டால் எப்படி நடந்து கொள்வது ?

எல்லா ஆண்களும் பொல்லாதவர்களல்ல. தவறாக நடந்துகொள்ள முற்பட்டால் நீங்கள் அதற்கு இசைபவரல்ல என்பதைக் காட்டிவிடுங்கள்.

எச்சரிக்கையாய் நடந்துகொள்ளுங்கள். பலவந்தம்பண்ணப்பட்டால் சத்தத்தை உயர்த்தி உதவிக்குக் கத்தி உங்களைப் பாதுகாத்துக்கொள்வது அவசியம். அடுத்த அறையில் உதவியிருக்கும் போது பயத்தினால் கற்பைப் பறிகொடுத்த பெண்கள் உண்டு. அமைதியாயிருக்கும்படி உங்களை அவன் பயமுறுத்தினாலும் சும்மாயிருக்காதீர்கள் (உபா 22:22-27). நடந்தவற்றை யெல்லாம் பெற்றோருக்கு அறிவியுங்கள்.

தெரியாத நபர் அல்லது தெரிந்தவரெனினும் நம்ப முடியாதவர் பெற்றோரில்லாதபோது வீட்டிற்கு வந்தால் கதவைத் திறக்காமல் ஜன்னல் வழியே பேசி அனுப்புங்கள். வீட்டில் தனியாயிருப்பது அவர்களுக்குத் தெரியவேண்டாம். அப்பா/அண்ணன்மார் வீட்டிலிருப்பதாக அவர்கள் எண்ணும்படியாக அவர்கள் பேரைச் சொல்லிக் கூப்பிடுங்கள். நீங்கள் தனியாயிருப்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தால் பெற்றோர் வர நேரம் செல்லுமென அவர்களுக்கு அறிவிக்காமல், 'இப்போ வந்துவிடுவார்கள்' என்று சொல்லுங்கள். அவசரத்திற்கு உதவக்கூடிய அயலகத்தார் மற்றும் காவல்துறை தொலைபேசி எண்களை எப்போதும் கைக்கெட்டும் தூரத்தில் வைத்திருங்கள்.

### 21. வளாக ஜெபக்குழு ஒன்றை எப்படித் துவங்கி நடத்துவது ?

ஜெபக்குழு துவங்க பெரிய எண்ணிக்கை தேவையில்லை. குறைந்தபட்சம் அரைமணி நேரமாவது சேர்ந்து ஜெபிக்கக்கூடிய ஒரு சிநேகிதிக்காக தேவனைக் கேளுங்கள். பிறர் அணுகக்கூடியவராக இருங்கள். ஒரு நபர் கிடைத்தவுடன் துவங்கிவிடுங்கள். சிநேகிதி வராத நாட்களில் அந்த நேரத்தை அவளுக்காகவும் பிறருக்காகவும் ஜெபிப்பதில் செலவிடுங்கள். தங்கள் குடும்பங்கள், சிக்கல்கள், பரீட்சைக்காக ஜெபிக்கும்படி சிநேகிதிகளையும் வகுப்பிலுள்ளோரையும் அழையுங்கள். அனேகர் வந்துசேரக் காத்திருக்க வேண்டாம். சரியான நேரத்தில் துவங்கிவிடுங்கள். எக்காரணத்தையிட்டும் கூடுகையை நிறுத்தாதீர்கள். உற்சாகமான பாடல் வேளைக்குப் பிறகு பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு வேதப்பகுதியைத் தியானித்துவிட்டு ஜெபிக்கச் செல்லுங்கள். வந்திருப்பவர் கொடுக்கும் ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபியுங்கள். நேரத்திற்கு முடியுங்கள். நடத்துபவர் முன் மாதிரியான வாழ்க்கை நடத்தவேண்டும். உணவு, எய்ட்ஸ், புகைபிடித்தல், போதைப் பொருட்கள், காதல் போன்ற வாழ்க்கைக்கடுத்த காரியங்கள், வேத ஆராய்ச்சி, பட்டி மன்றம், விவாதங்கள், பிக்னிக், நற்செய்திப்பணி, விடுகதைகள் போன்ற சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் வாலிபருக்கு அவசியம். ஜெபக்குழு இப்படித்தான் நடக்கவேண்டும், 25 ஆண்டுகளாக இப்படித்தான் நடத்துகிறோம் என்ற வளையாபதிகளாக இருப்பதினால் வாலிபரை இழந்துவிடுவீர்கள். அதே சமயத்தில் ஒழுங்கையும் பயபக்தியையும் காக்கவேண்டும் (மத் 9:17).



### 22. ஆலயத்தில் முக்காடிட்டுக் கொள்ளவேண்டுமா ?

அப்போஸ்தலரது நாட்களில் யூதப் பெண்கள் முக்காடிட்டுக்கொள்வது பழக்கமாயிருந்தது. கிரேக்கப் பெண்கள் விசுவாசிகளானபோது மிகுந்த கூந்தல் அலங்காரத்துடன் முக்காடிடாமல் வருவர். ஆகவே பவுல் பிறர் கவனம் சிதறாதபடி சபையில் அவர்கள் முக்காடிட்டுக்கொள்ளப் பணித்தான். வட இந்தியாவில் அதுவும் கிராமங்களில் பொதுவாகப் பெண்கள் முக்காடிட்டிருப்பர். ஆனால் இது மறைந்துவரும் பழக்கம். ஜெபிக்கும்போதும், பிரசங்கிக்கும்போதும், தீர்க்கதரிசனம் சொல்லும்போதும், சபையிலும் முக்கியமாக ஆண்கள் இருக்கும்போது பெண்கள் முக்காடிட்டுக்கொள்வதே ஒழுங்கு. பெண்களுக்கு மேல் ஆண்களது தலைமைத்துவத்தை இது அடையாளப்படுத்துகிறது. இதற்காக யாராவது முக்காடிடாவிட்டால் முடியைப் பிய்த்துக்கொள்ளாதீர்கள். இது அத்தனைப் பெரிய விவகாரமல்ல (1 கொரி 11:3-16).

### 23. சாதாரண உறவில் மறுபாலரைத் தொட்டுப் பழகலாமா ?

ஒருவன் ஒரு வாழைப்பழத்தை ஒரு குரங்கிடம் கொடுத்து பத்திரமாய் வைக்கச்சொல்லிச் சென்றான். குரங்கு, "பார்த்தால் பாவமா ?" எனப் பழத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தது. பின் முகர்ந்தால் பாவமா, நக்கினால் பாவமா என்று கடைசியில் தின்று தீர்த்தது. இவையே பாவத்திற்கு நடத்தும் படிப்படியான சோதனைகள். கற்பனையைப் பறக்கவிடுதலும் தவறான ஆசைகளும் தொட்டுப்பழக நடத்துகின்றன. தொடுதல் நெருக்கமான உறவுக்கு இழுக்கிறது. பின் கட்டிப்பிடித்தல், அதன்பின் முத்தம், பின் நெருக்கமாய்த் தொடுதல், இறுதியில் பாலுறவு என்று முடிகிறது. தொடுதலைத் தவிர்த்தால் தொடரும் எல்லாவற்றையும் தவிர்த்துவிடலாம். ஆண்கள் உங்களைத் தொடவும் இடமளிக்காதீர் (யாக் 1:13-15).

### 24. நானும் என் சிநேகிதிகளும் பள்ளியில் கூடி ஜெபிக்கும்போது கிண்டலுக்கு ஆளாகிறோம்.

சோர்படையாதீர், இது எதிர்பார்க்கப்பட வேண்டியதே. நிலைத்திருந்தால் கடவுள் ஏற்ற வேளையில் தம் ஆசியைப் பொழிவார்.

### 25. திருமணத்திற்கு முன்னே பாலுறவில் ஈடுபட்டு வருகிறேன் ; எப்படி வெளிவருவது ?

வெளிவரவேண்டும் என்ற வாஞ்சையே நல்ல அறிகுறியும் முதற்படியுமாகும். ஜெபத்துடன் துவங்குங்கள். உங்கள் தீர்மானத்தைப் பாவம் செய்பவருடன்

பகிர்ந்துகொள்ளாதீர். அவர் ஒத்துக்கொள்ளவேபோவதில்லை. அதோடு இது பாவமேயில்லை என்று உங்கள் மூளையைச் சலவை செய்வார். உறவு உடைந்து போனால் என்னென்ன இழப்புகள் வரும் என்பதைச் சுற்றித்தான் உங்கள் மனம் ஊசலாடும். மாறாக என்னென்னத்தைச் சவதரித்துக்கொள்வீர்கள் என்பதை தியானியுங்கள். கடவுள் உங்கள் பட்சம் நின்று நீங்கள் உறவை முறித்தவுடன் உங்களை ஆசீர்வதிக்கக் காத்து நிற்கிறார். நடந்த எல்லா வற்றையும் அவர் மன்னிக்க வல்லவர். அவர் உங்களோடு பேசியிருக்கிற படியால் இனிப் பாவத்தில் உழலாதீர்கள். கருத்தரிப்பு, பாலுறவு நோய்களின் ஆபத்து போன்றவையெல்லாம் மிகைப்படுத்திக் கூறமுடியாது. அந்த நபரை சந்திக்கவே சந்திக்காதீர். அவருடன் தனியாகவே இருக்காதீர். பாதுகாவ லான நண்பர் கூட்டத்தில் எப்போதும் இருங்கள். நம்பிக்கையான ஒரு மூத்த சகோதரியுடன் உங்கள் சிக்கலைப் பகிர்ந்துகொண்டு அவர்கள் ஜெப உதவியை நாடுங்கள். இந்த உளையிலிருந்து நிச்சயமாய் வெளியேறுவீர்கள். இந்தப் பாவத்தின் நினைவு உங்கள் திருமண வாழ்வைச் சிதைக்க வல்லது. ஆகவே அந்த நபர் நீங்கள் திருமணம் செய்யப் போகிறவராயிருந்தாலும்கூட அவசரமாய் இதைவிட்டு வெளிவாருங்கள் (1 கொரி 6:18-20).

## 26. நகை அணிந்து கொள்வதில் தவறேதுமுண்டா ?

ஆன்மீக நோக்கோடு நகையணிவதைத் தவிர்த்தவர்களை மதிக்கிறேன். பழைய ஏற்பாட்டு ரெபேக்காள் நகையணிந்திருந்தாள்; புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளான ஆடவரும் மோதிரம் அணிந்து ஆராதனைக்கு வந்ததாக வாசிக்கிறோம் (ஆதி 24:22; யாக் 2:2). நகையணியாதது இந்தியக் கலாச்சாரத்தில் பொதுவாக விதவையாயிருப்பதைக் குறிக்கும். இப்படிப்பட்ட விவகாரங்களில் மூன்று குறிப்புகளை நினைவிற்கொள்ளுங்கள்.

1. பெரிய காரியங்களில் ஒற்றுமை
2. சிறிய காரியங்களில் சுயாதீனம்
3. எல்லாவற்றிலும் அன்பு

படைப்பு, இயேசுவின் கன்னிப் பிறப்பு, உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை போன்ற பெரும் உபதேசங்களில் நாம் ஒன்றியிருக்கவேண்டும். புலால் உண்ணுதல், மருந்து எடுத்தல், நகை அணிதல், பூ வைத்தல், உடை, மேக்கப் போன்ற தெளிவான வேத உபதேசமில்லாத விவகாரங்கள் சிறியவை. இவைகளை ஒவ்வொருவரும் தங்கள் கலாச்சாரத்திற்கேற்ப தங்கள் மனச் சாட்சியை அனுசரித்து தீர்மானிக்க அவரவருக்குச் சுயாதீனமுண்டு. எல்லா வற்றிலும் அன்புடனிருங்கள். குழப்பமான காரியங்களில் இம்மூன்றையும் கணித்துத் தீர்மானியுங்கள். மொத்தத்தில் டாம்பீகத்தைத் தவிர்த்து உள் ளான அழகிற்கு முதலிடம் அளியுங்கள் (1 தீமோ 2:9,10).



## 27. வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப்பது எப்படி ?

இதற்காய் ஜெபிக்கத் துவங்குங்கள். இருபது வயது வரை அல்லது அடிப்படைக் கல்வி முடியும்வரை திருமணத்தைக் குறித்துச் சிந்திக்காதீர்கள். பெற்றோர் கொண்டுவரும் வரன்களை அலசிப்பாருங்கள். உங்களுக்கு யாராவது விருப்பமானால் உங்கள் பெற்றோர் அது குறித்துச் சிந்திக்கட்டும். வெளித்தோற்றத்திற்கு அதிக மதிப்பெண் போடாதீர்கள். உள்ளான நபரைக் கவனித்துப் பாருங்கள். தேவனை நேசிக்கிறவரா, பெற்றோரை மதிக்கிறவரா, கல்வியறிவு போன்றவற்றைக் கணியுங்கள். தீர்க்கதரிசனம், வற்புறுத்துதல் போன்றவற்றின் பேரில் தீர்மானிக்காதீர்கள். பெற்றோர் பெரியோரின் ஆலோ சனையையும் யோசித்துப் பாருங்கள். தேவன் அளித்துள்ள சமயோசிதப் புத்தியைப் பயன்படுத்துங்கள். மதம், கலாச்சாரம், கல்வி, வயது, அந்தஸ்து போன்ற பேதங்களைக் குறைப்பது தடுமாற்றங்களைக் குறைக்கும் (ஆமோஸ் 3:3; 2 கொரி 6:14-16). கூடுதல் விளக்கங்களுக்கு R. ஸ்டான்லி எழுதிய *"யாரை மணப்பது"* என்ற சிறு புத்தகத்தை வாங்கி வாசியுங்கள்.

வாலிபர் காதலிலேயே கருத்தாயிருப்பார்கள்; பெற்றோர் காதலுக்குப் பின்வரும் வாழ்வையே கருத்தாய் நோக்குவர். வாழ்க்கை நீங்கள் நினைப்பது போலல்ல, அதில் ஏராளம் உண்டு. அது மணவாழ்வின் மகிழ்வோடுகூட விட்டுக்கொடுத்தல், தியாகம், மன்னிப்பு, ஒத்துப்போதல், புரிந்துகொள்ளுதல் போன்றவை. அவரோடு வாழப்போவது நீங்கள். எல்லாவற்றையும் ஒருங்கி ணைத்துப் பார்த்து, ஜெபித்து விவேகமான தீர்மானமெடுங்கள்.

## 28. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வழிபடும் இந்து நான். என்னை இந்து என்று அழைத்துக் கொள்வதா அல்லது கிறிஸ்தவள் என்றா ?

அது உங்கள் சூழ்நிலையைப் பொறுத்தது. கிறிஸ்தவள் என்று பறைசாற்றிக்கொள்வதினால் சிக்கல்கள் வருமென்றால் உடனே அப்படிச் செய்யாதீர். வாலிபப் பருவத்திலுள்ள உங்களுக்குப் பெற்றோரின் பாதுகாவல் தேவை. சூழ்நிலை சுமுகமாகி நீங்களும் சற்று தைரியமடைந்ததும் உங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்கலாம்.

## 29. பொட்டு வைப்பது பாவமா ?

நமது நாட்டில் பொட்டு இந்துக்களின் அடையாளமாகக் கருதப்படுவதால் கிறிஸ்தவர் பொட்டு வைத்துக்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். ஆனால் நீங்கள் இந்துவாயிருந்து மனம் மாறினவர்களானால் வெளிப்படைக் கிறிஸ்த வராகும்வரை பொட்டை அகற்றத் தேவையில்லை. பொட்டு வைக்க மறுப்ப தினால் உங்கள் பெற்றோரையும் (கணவனையும்), நண்பரையும் விரோதித்துக்

கொள்வீர்கள். பொட்டை எடுப்பதைவிட சுற்றத்தார், நண்பருக்கு உங்கள் சாட்சியே முக்கியம். பொட்டை எடுப்பது கட்டாயமல்ல என்பது அவர்கள் இயேசுவின்மேல் விசுவாசத்தை வைப்பதை இலகுவாக்கும். விக்கிரகங் களோடு சம்பந்தப்பட்ட குங்குமம், விபூதியைத் தவிர்க்கலாம். பெயரை மாற்றிக்கொள்வதுகூட உங்களை உயரிய கிறிஸ்தவராக்கிவிடாது. விக்கிரகக் கோவிலுக்கு குடும்பத்தோடு போக வற்புறுத்தப்பட்டால் அங்கும் உங்கள் உள்ளத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வழிபடலாம் (2 இரா 5:18,19).

**30. மாதவிடாய் சமயத்தில் ஆலயம் செல்லலாமா?**

மாதவிடாய் சமயத்தில் பெண்கள் தீட்டானவர்களென்பது பழைய ஏற்பாட்டின் கருத்து. இயேசுவோ சடங்காச்சாரச் சுத்திகரிப்பிற்கு ஆன்மீகத் தூய்மையைப் பதிலாக்கினார். இந்நாட்களிலும் ஆராதிக்க எவ்விதத் தடையுமில்லை. (கொலோ 2:20-23).

**31. திருமுழுக்கு பெற்ற பின்பும் அடிக்கடி விழுகிறேன். தேவனோடுள்ள எனது உறவு உறுதியாயில்லை.**

கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்பொழுதுமே மேல் நோக்கியே செல்லும் ஏணி என்று சொல்ல முடியாது. அதில் ஏற்றங்களும் இரக்கங்களுமுண்டு. உங்கள் தோல்விகளின் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை மேற்கொள்ள நடைமுறைச் சாதனைகளைத் திட்டமிடுங்கள். உங்கள் வேதாகமத்தைக் கிரமமாக வாசித்துத் தியானிக்க போதிய நேரமெடுங்கள். வாசிக்கும்போதே கடவுள் பேசவேண்டுமென்று ஜெபியுங்கள். ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருங்கள். தினமும் ஒருவருக்காவது ஆண்டவரை அறி வியுங்கள். ஆன்மீக ஐக்கியமொன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். இவை நீங்கள் தடுமாற்றமின்றி கிறிஸ்துவில் வளர உதவிசெய்யும். வாழ்வின் கடினமான சூழ்நிலைகளும் அவற்றைக் குறித்த உங்கள் தவறான கண்ணோட்டங்களும் உங்கள் பின்மாற்றத்திற்குக் காரணங்களாயிருக்கலாம். அவ்வப்போது அவற்றைச் சரிசெய்து அவை வேர்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வெற்றி உங்களுடையது.





14

# முதுகெலும்புண்டோ?

முதுகெலும்பு ஒருவரது பலத்தையும் தைரியத்தையும் குறிக்கிறது. உடலில் மிக முக்கியமான இவ்வுறுப்பை சரிவரப் பேணாவிடில் நாளை நீங்கள் முதுகெலும்பற்றவர்களாகலாம்.

வாலிப வயதில் எலும்புகள் யாவும் வேகமாக வளருகின்றன. இதற்கு கால்சியம் சத்துத் தேவை. ஆகவே தினமும் ஒரு தம்ளர் பாலும் காய்கறிகளும், கீரைகளும் தயிரும் சாப்பிடுவது அவசியம்.

நமது பாவனையும் (Posture) முதுகெலும்பை அதிகமாய் பாதிக்கின்றது. உட்கார்ந்திருக்கும்போது தோள்பட்டையை உயர்த்தி நேராய் உட்கார்ந் திருக்கிறீர்களா என்று பாருங்கள். முதுகெலும்பை வளைத்து மேசையில் முழங்கையை ஊன்றி கூனி உட்கார்ந்திருப்பது முதுகெலும்பிற்குக் கேடு. மட்டுமல்ல, நிற்கும்போதும், நடக்கும்போதும் துணி பொம்மையைப் போலல்லாமல் போர்ச்சேவகனைப் போல் நிமிர்ந்து நில்லுங்கள். வீறுநடைபோடுங்கள்.

தரையிலோ படுக்கையிலோ படுத்துக்கொண்டு வாசிக்காதீர்கள்.

சம்மட்டமான தரையில் பாய்போட்டு உறங்குவது ஆரோக்கியமானது. இன்றேல் இரும்பு அல்லது மரக்கட்டிலில் கனமான போர்வையைப் போட்டு

உறங்கலாம். முடியவில்லையா ? மெல்லிய துணி மெத்தைப் போட்டுக்கொள் ளுங்கள். தொய்யும் நார் கட்டிலோ, கனமிகு டன்லப் மெத்தையோ முதுகெலும்பிற்கு நல்லதல்ல.

உங்களது முதுகெலும்பு எந்நிலையிலுள்ளதெனப் பரீட்சித்துப் பார்க் கிறீர்களா ? கால்களைச் சேர்த்து நின்று முழங்காலை மடக்காமல் முன்னே குனிந்து விரல்களால் தரையைத் தொட முயற்சிசெய்யுங்கள். இப்போது உங்கள் இடுப்பு உயரத்தில் உங்கள் பின்னாலுள்ள சுவறில் ஏதோவொரு புள்ளியைக் குறித்துக்கொள்ளுங்கள். பின்னால் வளைந்து அப்புள்ளியைப் பார்க்க முடிகிறதா ? பின்பு கால்களை ஓர் அடி அகற்றி கைகளை விரித்து நில்லுங்கள். வலது கை சுட்டிக்காட்டும் ஒரு பொருளை குறித்துக்கொள் ளுங்கள். கால்களை நகர்த்தாமல் உடலை இடப்புறமாக சுற்றி வலக்கரம் சுட்டிக்காட்டியதைப் பார்க்க முடிகிறதா பாருங்கள். அடுத்தப் பக்கம் அப்படியே செய்யுங்கள். இவை முடிந்தால் உங்கள் முதுகெலும்பு பரவாயில்லைதான்.

முடியாவிட்டால் பயந்துவிடாதீர்கள். தினமும் இப்பயிற்சியை 15 முறை செய்தால் சீக்கிரம் எட்டிவிடுவீர்கள். 60 வயதிலும் இதைச் செய்ய முடியும் ! நீச்சலடிப்பது முதுகெலும்பு சம்பந்தப்பட்ட தசைகளை வலுவாக்குகிறது. வீட்டில் குனிந்து நிமிர்ந்து கடின வேலைகளைச் செய்வது முதுகெலும்பிற்கு நல்லது.

நீங்கள் முதுகெலும்புள்ளவர்களா ? எல்லோரும் நியாயமானதைச் செய்யத் தவறும்போது நீங்கள் அதைச் செய்ய முன்வரவேண்டும். நீதிமான் சிங்கத்தைப்போல் தைரியமாய் இருப்பான்.

✓ வழியில் கிடக்கும் வாழைப்பழத்தோலை எடுத்து ஓரத்தில் போட முதுகெலும்பு தேவை.

✓ தெருவில் மயங்கிக்கிடக்கும் ஒருவனைக் கண்டால் குடித்தவனா அல்லது பசி மயக்கமாஅல்லது நோயா என நின்று, பார்த்து ஆவன செய்ய முதுகெலும்பு தேவை.

✓ பலவீனமான மாணவனை போக்கிரி மாணவன் துன்புறுத்தும்போது தடுத்துக் கேட்க முதுகெலும்பு தேவை.

✓ விபத்தில் சிக்கி அடிபட்டுக்கிடப்பவர் கெஞ்சும்போது நின்று உதவி செய்ய முதுகெலும்பு தேவை.

✓ தவறிழைத்துவிட்ட பின் விசாரணை செய்யப்படும்போது, யாருமறியா விட்டாலும், ‘‘தவறிழைத்தது நானே’’ என ஒத்துக்கொள்ள முதுகெலும்புத் தேவை.



✓ நிர்வாணியான ஒருவரைக் கண்டால் அவர் பைத்தியமானாலும், கையிலிருக்கும் உடையையோ அல்லது ஒரு ஆடை வாங்கிப் போட்டு விடுவதற்கு முதுகெலும்புத் தேவை.

✓ அநியாயம் நடப்பதைக் கண்டும் ஒன்றும் செய்யமுடியாத பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும், அவர்கள் நடவடிக்கை எடுக்காத போது மேல்நிலைக்கு அறிவிக்க முதுகெலும்புத் தேவை.

✓ தவறான காரியங்களுக்கு ஒத்துக்கொள்ள மறுப்பதற்கும், எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் முதுகெலும்புத் தேவை.

✓ ஆலோசனை கேட்டு உன்னை மாற்றிக்கொள்ள முதுகெலும்புத் தேவை.

நாம் உலகத்தை மாற்ற முடியாது. ஆனால் நமது சுற்றுப்புறங்களை மாற்றலாம். நாமெல்லாரும் நமது சுற்றுப்புறங்களை மாற்றினால் உலகம் சற்று மாறுமே !

உங்களுக்கு முதுகெலும்பு உண்டா ?



15

# தரிசனமுள்ள வாலிபர்!

இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்னதாக பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனத்தை எடுத்தியம்பினான்: ‘‘கடைசி நாட்களில் நான் மாந்தர் யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப் படுவான்’’ (அப் 2:17-21).

பேதுரு எடுத்துரைத்த வாக்கின்படியே பரிசுத்தாவியின் அருள்மாரி தொடர்ந்தது; மக்கள் கூட்டங்கூட்டமாக மனந்திரும்பினர். ‘தீர்க்கதரிசனங்கள்,’ ‘தரிசனங்கள்’ மற்றும் ‘சொப்பனங்களின்’ அதிசய விளைவு ஆத்தும அறுவடையே. அபிஷேகம் பெற்றவர்கள் இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பை அறிவிக்க தைரியமான அதிகாரத்துடன் பரவிச்சென்றனர்.

‘தரிசனம்’ என்றாலே சிகப்புக் குதிரைகளையும் வெள்ளைக் குதிரைகளையும் காண்பது அல்லது பரலோகத்திற்கு மேலும் கீழுமாகப் பயணம் செய்வதுதான் என்பது பலரது கருத்து. வேதாகமம் முழுமையாக எழுதப்படும்



முன்பாக தேவன் தமது மக்களிடம் புதிதான தரிசனங்கள் மூலமாகவும் தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும் அல்லது வெளிப்படுத்தல்கள் மூலமாகவும் பேசினார். இயற்கைக்கப்பாற்பட்ட காரியங்களை கண்களால் காண்பது போன்ற புதிதான அனுபவங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவருக்கு அளிக்கப்பட்டது. அதை அவர்கள் மக்களுக்கு விளக்கினர்.

ஆனால் வேதவாக்கியம் எழுதி முற்றுப்பெற்றபோது தேவனது மக்களுக்கு முக்கிய வழிகாட்டியாக தேவனது வார்த்தையே இவைகளுக்கும் மேலான இடத்தைப் பெற்றது. கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தைக் குறித்து நாம் அறியவேண்டிய எல்லாவற்றையும் இறைவன் தெளிவாக எழுதிவைத்துவிட்டார். ‘‘பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்’’ (எபி 1:1,2). இன்றும் இறைவன் இயற்கைக்கப்பாற்பட்ட தரிசனங்களைத் தரத்தான் செய்கிறார், ஆனால் அபூர்வமாகவே. அவற்றை நாம் நாடித் தேடவேண்டிய அவசியமில்லை.

அப்படியானால் கல்வாரியின் இந்தப்பக்கத்தில் வாழும் நமக்கு ‘தரிசனம்’ என்பதன் கருத்தென்ன ? ‘தரிசனம்’ என்ற பதத்தின் நேரடிக் கருத்து, பார்வை என்ற புலன். சற்று விரிவாக்கி விளக்கினால், புரிந்துகொள்ளுதலில் ஒரு விசேஷித்த கிருபை அல்லது வருங்காரியங்களை கிரகித்துக்கொள்வதில் ஒரு சிறப்புத் தாலந்து அல்லது தேவனளித்த விவேகமான தூரப்பார்வை எனலாம்.

‘‘தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் மக்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான்’’ என்று எழுதியபோது சாலொமோன் இதைத்தான் குறிப்பிட்டான் (நீதி 29:18). தேவனது சிந்தையைப் புரிந்துகொள்ளமுடியாத பட்சத்தில் மக்கள் தடுமாறுவார்கள். அதாவது, கடவுள் தமது சித்தமென்று உங்களுக்கு வெளிப்படுத்துவதை தெளிவாகப் புரிந்துகொள்ளும் திறன். உங்கள் வாழ்வை நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை கண்டுபிடித்துக்கொள்வதே அது. இதைக் குறித்த தெளிவு உங்களுக்கு இல்லாவிடில் உங்கள் வாழ்வை விரயமாக்கி விடுவீர்கள். தரிசனமுள்ள ஆண் அல்லது பெண் என்பவர், இவ்வுலகில் தான் என்ன சாதிக்கவேண்டுமென தேவன் விரும்புகிறார் என்பதைக் குறித்த தெளிவான முன்நோக்கு உடையவர்.

தவறான ஆலோசனைகளால் வாலிபர் இன்று குழம்பிப்போயுள்ளனர். ஒவ்வொருவரது தரிசனமும் வெவ்வேறாக இருக்கலாம். துவக்கத்தில் அது தெளிவற்றதாக இருக்கலாம். ஆனால் தேவனது கரத்தைப் பற்றிக்கொண்டு,

உங்களுக்குள் குமுறிக்கொண்டிருக்கும் கனவை நனவாக்க, படிப்படியாக அவர் காட்டும் பாதையில் எட்டெடுத்து வைப்பீர்களானால்—சுருட்டப்பட்ட கம்பளம் விரிக்கப்படுவதுபோல் உங்கள் தரிசனம் உங்கள் பாதையில் மெல்ல மெல்லத் தெளிவாகும்.

சாதனை படைத்த தரிசனமுள்ள வாலிபர் பலரைக் குறித்து வேதம் எழுதிவைத்துள்ளது:

கானானை ஆக்ரமிக்க தரிசனம் கொண்ட வாலிபன் **யோசுவா.** மோசேயின் நம்பிக்கையான சேவகன். மோசேக்கு அடுத்து தான்தான் என்ற எண்ணத்தை அவன் நெய் வார்த்து வளர்க்கவில்லை. தேவனோ அவனைத் தெரிந்தெடுத்தார். அமலேக்கை எதிர்த்துப் போர் செய்ய மோசே அவனுக்கு வெறும் கட்டளை கொடுப்பான். யோசுவா வேலையை முடித்துவிட்டு மோசேக்கு முன்பாக வந்து நிற்பான் (யாத் 17:9,10). தேவனது கடைக்கண் பார்வை அவன்மேல் விழுந்தது (யாத் 17:14). ஆசரிப்புக் கூடாரத்தில் மோசே தேவனோடு பேசிவிட்டு திரும்பிவிடுவான்; ஆனால் அவனது பணிவிடைக்காரன் யோசுவாவுக்கோ கூடாரமே கதி (யாத் 33:11). கானானை வேவுபார்க்க தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிருவரில் ஒருவன் அவன். அவனது உத்தமத்தைப் பார்த்து கானானின் தரிசனத்தை தேவன் அவனுக்குத் தந்தார். மோசேயின் சால்வை அவன்மேல் விழுந்தது.

தான் கண்ட புதிய தெய்வத்தை விடாமல் பற்றிக்கொள்ள தரிசனம் கொண்ட வாலிபப்பெண் **ரூத்.** அத்தரிசனத்தைப் பின்பற்ற தனது சொந்தக் குடும்பத்தையும் தேசத்தையும் தியாகம் செய்தாள். பெத்லகேமில் ஒரு வசதியான வீட்டில் குடிபுகுவதோடு தன்னுடைய தரிசனம் முடிவடையவில்லை என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை. தன்னுடைய தரிசனம் எங்கு முடிவடைகிறது என்று எண்ணினாளோ அங்கேதானே அது மறுபடியுமாய் துவங்கியது. இங்குதான் ஓபேத் பிறந்தது, ஓபேத்துக்கு ஈசாய் பிறந்தது, ஈசாய்க்கு தாவீது பிறந்தது. இங்குதான் ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழித்தது (ரூத் 4:17; ஏசா 11:1). அதோடு நின்றுவிட்டதா ? தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய பெண்ணின் சந்ததியான மற்றவர்களில் அது தொடர்கிறது (வெளி 12:17). ரூத் தனது தரிசனத்தை அற்பமாக எண்ணாமல் இறுதிவரை முழுமூச்சோடு நிலைத்திருந்தாள்.

இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற தரிசனம் கொண்ட வாலிபன் **தாவீது** (1 சாமு



17:46). தேவன் அவனது இதயத்தையும் அதில் துடித்துக்கொண்டிருந்த வாஞ்சையையும் கண்டு அவனது தரிசனத்தை நிறைவேற்ற அவனுக்கு பாதை அமைத்துக்கொடுத்தார். கடைக்குட்டியாகிய அவன் ஆடு மாடு மேய்க்க அனுப்பப்பட்டான். வனத்துக்குள்ளே விசுவாசத்தோடு எல்லார் கண்களுக்கும் மறைவாக தனது தசைகளை உறுதிப்படுத்திக்கொண்டிருந்தான். அவனது தந்தையோ சகோதரரோ அவனை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. சவுலுக்கும் அவன்மேல் நம்பிக்கையில்லை. ஆனால் கோலியாத்தின் சிரசை அவன் கொய்தெடுத்த நாளில் பூலோகத்தார் எல்லாரும் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்பதை அறிந்துகொண்டனர்.

யூதாவையும் எருசலேமையும் எல்லா விக்கிரகாராதனையினின்று துடைத்தெடுத்து தன் பிரஜைகளை மறுபடி தேவனிடம் கொண்டுவரும் தரிசனம் கொண்ட வாலிபன் **யோசியா** (2 நாளா 34:3). தேவனுடைய வீட்டைப் பழுதுபார்த்து சீர்ப்படுத்தினான் (34:10). உடன்படிக்கைப் புத்தகத்தை மக்களுக்கு வாசித்துக் காண்பித்து முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அவருடன் உடன்படிக்கை பண்ணினான் (34:30,31). அவனது முயற்சிகளையெல்லாம் தேவன் ஆசீர்வதித்தார். ஒரு சந்தர்ப்பத்தில் தேவ சித்தத்தை அறியத் தவறியதால் பரிதாபமாக உயிரிழந்தான்.

தனது மக்களைக் காக்கும் தரிசனம் கொண்ட வாலிபப்பெண் **எஸ்தர்.** தான் தைரியமாக காலெடுத்து வைக்காவிடில் தன்னுடைய இடத்தில் வேறு யாரையாவது தேவன் பயன்படுத்துவார் என்றறிந்தாள். தன்னுடைய தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக தன் உயிரையே பணயம் வைத்ததால் கொடூரமாக மாறவேண்டிய அந்த நாள் கோலாகலமாக மாறியது.

இடிந்து கிடந்த தேவாலயத்தை சீர்ப்படுத்த தலைவர் மற்றும் மக்களது கரங்களை திடப்படுத்தும் தரிசனம் கொண்ட வாலிபன் **சகரியா.** அதன் விளைவு, தொய்ந்து போயிருந்த மக்களும் தலைவர்களும் ஒருமனப்பட்டு எழும்பி ஒரு நொடியில் வேலையை முடித்தனர் (சகரியா).

ஆண்டவருக்கு வழியை ஆயத்தம் பண்ணும் தரிசனம்கொண்ட வாலிபன் **யோவான்** அதற்காகத் தன் தலையையே கிரயம் செலுத்தினான்.

மேசியாவை அவரது பரமதந்தை வளர்ப்பது போலவே வளர்த்து ஆளாக்கிவிட வேண்டுமென்ற தரிசனம் கொண்ட வாலிபர் **யோசேப்பும் மரியாளும்.** வாழ்வில் அவர்களுக்கு வேறு ஒரு லட்சியம் கிடையாது. அவர்கள் அற்புதம் செய்யவுமில்லை சமுதாயத்தில் எந்தவொரு அந்தஸ்து பெறவுமில்லை. ஆனால் கருமமே கண்ணாய் செயல்பட்டதினால் தரிசனத்தை குறைவின்றி நிறைவேற்றினர்.

இழந்துபோனதைத் தேடவும் காப்பாற்றவும் தன்னை அனுப்பின தனது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி அவரை மகிமைப்படுத்தவேண்டுமென்ற தரிசனம் கொண்ட வாலிபன் **இயேசு.** அடிமையைப் போல தன்னைத் தாழ்த்தி சிலுவை மரணம் வரை கீழ்ப்படிந்தார். ஆகவே தேவன் அவரை வெகுவாய் உயர்த்தி, எல்லாப் பெயர்களுக்கும் மேலானதொரு பெயரை அவருக் களித்தார். அவரது தரிசனத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு தன்னை ஆராதிப்பதினால் உலகின் எல்லா மகிமைகளையும் அனுபவிக்கலாமே என்ற சாத்தானின் நயங்காட்டல் அவருக்குச் சோதனையாகத்தான் இருந்தது. ஆனால் இயேசு அவனை மேற்கொண்டு தன் தந்தைக்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்தார்.

மேசியாவின் மார்க்கத்தைப் பின்பற்றுபவராகிய ஆண்களையும் பெண் களையும் கட்டி எருசலேமுக்கு இழுத்துக்கொண்டுவந்து சித்ரவதைச் செய்து கொலை செய்யும் நரக தரிசனம் கொண்ட வாலிபன் **சவுல்.** ஆனால் அவனுடைய சொந்த மக்களும் புறவினத்தவரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பைப் பெற்று கண் திறக்கப்பட்டவர்களாக வேண்டுமென்ற பரமதரிசனத்தை ஆண்டவர் அவனுக்கருளினார். அந்த தேவனுடைய வெளிப்பாட்டிற்கு அவன் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை (அப் 26:19, 20). தனது தரிசனத்திற்காக தனது உயிர் முதலாக யாவற்றையும் அர்ப்பணம் செய்தான்.

மிஷனரியாக வேண்டுமென்ற தரிசனம் கொண்ட வாலிபன் **மாற்கு.** தனது தாய், வீட்டில் நடத்திய ஜெபக்கூட்டத்தின் விளைவாயிருக்கலாம் அவனது வாஞ்சை (அப் 12:12). பர்னபா மற்றும் பவுலின் ஊழியக் குழுவோடு இணைந்தான் (12:25). பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையில் எழுந்த சர்ச்சையில் பர்னபா பக்கமாகச் சாய்ந்தாலும் (15:37) பின்பாக பவுலுக்குப் பயனுள்ளவனானான் (2 தீமோ 4:11). தரிசனப் பாதையில் தத்தளித்தாலும், அவனது தடுமாற்றத்தினால் ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்புகளுக்கு, அவனெ ழுதிய மாற்கு நற்செய்தி நூல் ஈடுகட்டிவிட்டது.

ஆதாம், ஏவாள் என்ற இரண்டு இளைஞர்களை ஆண்டவர் உருவாக்கி இப்பூமியை ஆளும் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்து ஆசீர்வதித்தார். ஆனால் தேவனைப் போலாகவேண்டுமென்ற தவறான கனவை சாத்தான் அவர்களுக்கு விற்றுவிட்டான். சாத்தான் அளித்த தரிசனத்திற்கு தேவ தரிசனத்தை விலை பேசியதால் தேவனது திட்டங்களுக்கே வெடி வைத்து விட்டனர். பெலிஸ்தியரை சூறையாடும் தரிசனம் கொண்ட வாலிபன் சிம்சோன். தேவ ஆவியானவர் அவன்மேல் அசைவாடினதால் தெளிவான



கண்களுடனும் தீர்க்கமான தரிசனத்துடனும் துவங்கினான். மாம்சம் அவனை மேற்கொண்டு, கண் சிமிட்டும் பெண்களுக்கு முன்பாக அவன் தடுக்கி விழும்வரை நேர் பாதையில்தான் சென்றான். இறுதியில் ஆவியானவரையும் அவரது வல்லமையையும் இழந்து கண்ணற்ற கபோதியாக, தரிசனமிழந்த வாலிபனாக உயிர்நீத்தான் (நியா 14-16). தனது தகப்பனது கரங்களிலிருந்து அரசைப் பறித்து, இஸ்ரவேலை ஆளும் தரிசனம் கொண்ட வாலிபன் அப்சலோம். அவனது திட்டங்களில் தேவனுக்கு இடமே கிடையாது. அவன் கொடூரமாகக் கொல்லப்பட்டான் (2 சாமு 18). தனது நிலையற்ற சுபாவத் தினாலும் வாலிப நண்பர்களின் கட்டுப்பாட்டினாலும் பந்தாடப்பட்ட தரிசனமற்ற வாலிபன் ரெகொபெயாம். அவனது வாழ்வு படுதோல்வி (2 நாளா 10:10). பெயரற்ற வாலிபனொருவன் நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும் உன்னத தரிசனத்தோடு இயேசுவைச் சந்தித்தான். அவனோ தேவன், உலகம் ஆகிய இரண்டு எஜமான்களை சேவிக்கத் திணறிக்கொண்டிருந்தான். அதன் முடிவு துக்கம் (மத் 19:16-23). யூதர்களை ஒழித்துக் கட்டுவதே ஹிட்லரின் தரிசனம். உலகத்தில் கிறிஸ்தவரே இல்லாமல் செய்துவிடவேண்டுமென்பதே நீரோவின் தரிசனம். அவர்களது முடிவை நாமறிவோமே.

அருமை நங்கையே, வாலிபனே, உன் தரிசனம் என்ன ? அதைக் குறித்து நீ என்ன செய்கிறாய் ? வாழ்வு சிறியதுதான்; ஆனால் தரிசனத்தோடு வாழ்ந்து சாதனை படைப்பாயானால் அது போதுமே!



16

# படித்தால் மட்டும் போதுமா?

வீடு அல்லோகலப்பட்டது. ஒருவரையொருவர் முட்டி மோதி அங்குமிங்கு மாய் ஓடிக்கொண்டிருந்தனர். பாமினி மட்டும் முகத்தில் களையின்றி இயந்திரம் போல் வடைகளை சுட்டுசுட்டுப் போட்டுக்கொண்டிருந்தாள். வியர்வையோடு சேர்த்து கண்களையும் துடைத்துக்கொண்டதால் அவளது கண்ணீர் யாருக்கும் தெரியவில்லை. சுடச்சுட இருந்த சாம்பார் பாத்திரத்தைத் திறந்து மல்லை இலைகளைத் தூவினாள். மூடித்தட்டும் அழுதுவடிந்தது. **மைதிலி** கண்ணாடி முன் உட்கார்ந்து புருவத்தைப் பிடுங்கிக்கொண்டிருந்தாள். உதட்டிற்கு எந்த சாயம் பொருந்துமென இரண்டு மூன்றை வைத்து வைத்துப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டிருந்தாள். சந்தனக் கலர் சல்வார் கமீசையும் மயில் நிற சுரிதாரையும் மாறி மாறி மேலே போட்டு, எது எடுப்பாயிருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

மைதிலியைப் பெண் பார்க்க வருகிறார்கள். மைதிலி தங்கை; பாமினி அக்கா. அம்மாவின் அழகும், அப்பாவின் அறிவும் சேர்ந்து மைதிலிக்கே வந்துவிட்டன. பாமினி அசிங்கமில்லை. ஆனால் யாவரும் கேட்கும் சிவப்புத் தோல் அவளுக்குக் கிடையாது. முக்கியடித்து B.A. முடித்துவிட்டாள். ஐந்து வருடங்கள் உருண்டோட மைதிலி B.E. முடித்துவிட்டாள். மைதிலியின் அழகிற்கு வரன் தானாய் தேடிவந்தது. அவர் முதுநிலை பொறியியல் முடித்தவராம்.



''மூத்தவளிருக்க தங்கையைக் கொடுக்கலாமா ?'' என்ற தந்தையின் கேள்வியை, தாய் ஒரே அடியில் அடித்துவிட்டாள். "இது மாதிரி நல்ல பையன் தேடிப்போனாலும் கிடைப்பானா ? வந்ததை விடக்கூடாது.''

மாப்பிள்ளை வாட்டசாட்டமானவன். நிலைவாசலில் குனிந்துதான் நுழைந்தான். சோபாவில் கால்மேல் கால் போட்டு தந்தச்சிலைபோல் உட்கார்ந்திருந்த மைதிலி பணிவாய் எழுந்து, ஓர் மோகனப் புன்னகையை உதிர்த்து, 'ஹலோ' என வரவேற்றாள். அவனும் 'ஹலோ' என்றான். எல்லோரையும் சுற்றி நோக்கினான். பாமினி இயற்கையாக கை கூப்பி தோத்திரம் போட்டாள்.

பேச்சு நடந்தது. பலகாரங்கள் பரிமாறப்பட்டன. மாப்பிள்ளை மிக்சரை எடுத்து வாயில் போட்டான். ''புதுவிதமான மிக்சராயிருக்கிறதே, எங்கே கிடைக் கிறது ?'' என்றான். தாய், ''வீட்டில் செய்ததுதான்'' என்று பெருமையோடு சொன்னாள். மாப்பிள்ளை வெட்கமில்லாமல் வெட்டினான், திருமணமே முடிந்துவிட்டதுபோல! வடையைப் பிய்த்து வாயில்போட்டான். ''பேஷாயிருக் கிறதே! இப்படி வடை சாப்பிட்டு எவ்வளவோ நாளாயிற்று. இப்பொழுதெல்லாம் மிக்சியில் செய்வது நன்றாகவேயில்லை...! கொஞ்சம் சாம்பார் ஊற்றும்மா! சாம்பார் வாசனை இங்குவரை ஜமாய்க்கிறது! நீங்க ஒரு ஓட்டலே ஆரம்பிக்கலாம்.'' கலகலவென்று சிரித்துக்கொண்டு பெண்ணின் தாயைப் பார்த்தான். ''நான் எங்க இதெல்லாம் செய்யறேன். நான் schoolக்குப் போகணுமே! பெரியவ பாமினிதான் எல்லாம் செய்யறது'' என்றாள் அவள்.

''நீங்க சாப்பிடலையா ?'' பையன் ஒரு எடுப்பான புன்னகையுடன் மைதிலியைப் பார்த்துக் கேட்டான். "No. Thank you" என்றாள் இனிமையாக. தமிழில் கேட்டதற்கு ஆங்கிலத்தில் பதில் சொல்லிவிட்டேனே. ஏதும் நினைத்துக்கொள்வாரோ ? எனக் கவலை உள்ளூர.

விடை பெற்றனர். ''அப்ப... ?'' மைதிலியின் அப்பா இழுத்தார். பெரியவர் பையனைப் பார்த்தார். ''அ... உம்... போய் எழுதுகிறோமே!'' அதே அழகிய சிரிப்பு.

கடிதம் வந்தது...

''மன்னிக்கவும். பையன் சொல்லத் தயங்குகிறான். எனக்கு எதற்குப் படித்த பெண் ? நான் சம்பாதிக்கிற சம்பாத்தியம் போதாதா ? வீட்டிலே இருந்து ருசியாய் சமைத்துப்போட்டாலே போதும்! எனக்கதுவே பரம திருப்தி! பாவம் அந்தப் பொண்ணு B.E. படித்திருக்கு. அது ஏன் என் விருப்பப்படி வீட்டுக் குள்ளேயே கிடக்கணும் ? என்று சொல்லுகிறான். ஒன்றும் தப்பாக நினைத்துக்கொள் ளாதீர்கள். அந்தப் பெரிய பெண்ணைக் கேட்டுப்பாருங்கள் என்கிறான். நீங்கள் ஒன்றும் நினைத்துக்கொள்ளாவிட்டால்...''

முடிவை எழுதவேண்டுமா ?



17

# பரீட்சைக்கு முன் கேள்விகள்

**1. பயமா ?**

“நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; நான் உன்னை பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்” (ஏசா 41:10)

“உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்” (ஏசா 41:13)

**2. கவலையா ?**

“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” (பிலி 4:6,7)

“அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்” (1 பேது 5:7)



**3. நடுக்கமா ?**

“என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு” (பிலி 4:13)

“அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்” (ஏசா 30:15)

**4. குறைவெண்ணமா ?**

“பலவீனனும் என்னை பலவான் என்று சொல்வானாக” (யோவேல் 3:10)

“நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்” (2 கொரி 12:10)

**5. விசுவாசக் குறைவா ?**

“நீ விசுவாசிக்கக் கூடுமானல் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்... விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்” (மாற் 9:23,24)

“எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்ற சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்திலே விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்” (மாற் 11:23,24)

**6. கடந்தகாலத் தோல்வியா ?**

“அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்” (ஏசா 54:8)

“வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருடங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்” (யோவேல் 2:25)

**7. பலவீனமா ?**

“சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு அவர் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்” (ஏசா 40:29)

“என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” (2 கொரி 12:9)

**8. ஞானமில்லையா ?**

“உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்” (யாக் 1:5)

“தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார்” (பிர 2:26)

**9. தேர்வு அதிகாரிகள் எப்படியோ ?**

“இராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்கால்களைப் போலிருக்கிறது, அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்” (நீதி 21:1)

“தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்” (அப் 7:9,10)

**10. வெற்றி பெறுவேனா ?**

“கர்த்தாவே... ஜெயம்... உம்முடையது” (1 நாளா 29:11)

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” (1 கொரி 15:57)





**18**

# பெண்ணா, பேயா?

*“காளை வயசு, கட்டான சயிசு*
*களங்கமில்லா மனசு.”*

செல்வசேகர் தனது பைக்கை நிறுத்திவிட்டு, லாவகமாக காலைத் தூக்கிப்போட்டு, இறங்கிவந்ததைக் கண்ட அவனது கல்லூரி சிநேகிதர் கிண்டலாகப் பாடி அவனை வரவேற்றனர். அந்தப் பாடல் அவனுக்கு அப்படியே பொருந்தும். ஆறு அடி உயரம், கம்பீரமான தோற்றம், குழந்தை உள்ளம், படிப்பில் கெட்டி.

“டேய் உனக்கேற்ற பொண்ணு ஒண்ணு முதலாம் ஆண்டு சேர்ந் திருக்கிறாடா!”

ஆனந்தன் வந்ததும் வராததுமாக அறிவித்தான்.

“போடா போ, கன்னத்தில் சுண்டினால் இரத்தம் வரணும்டா. அப்படி பொண்ணுதாண்டா வேணும்.” இது செல்வசேகரின் பதில்.

“அந்தக் குட்டி இன்னும் பதினைந்தே நிமிடத்தில் வகுப்பறையிலிருந்து வெளியே வருவா பாரு.”

சேகர் அவ்வளவாக ஆவல் காட்டிக்கொள்ளாமல் கதையடித்து நின்றான். மணி அடித்தது. ஐவர் குழுவின் எல்லாத் தலைகளும் வகுப்பறைப் பக்கமாகத் திரும்பின. முதலாண்டு பொறியியல் மாணவியர் அளவளாவிக்கொண்டே வெளியேறினர்.

‘‘அதோ பாருடா, அதோ, அதோ, அந்த மயில் கழுத்து நிற சல்வார்.’’

அசட்டையாகத் திரும்பினான் சேகர். அவளை விட்டுக் கண்களை அவனால் எடுக்க முடியவில்லை. சந்திரன்தான் சேலை கட்டி கல்லூரிக்கு வந்ததோ என்ற கேள்விக்குப் பதிலாக ஒய்யாரமாக நடந்துவந்தாள் லைலா.

சேகரின் மனது வேகமாக கணக்குப்போட்டது. இறுதியாண்டு படிக்கும் அவன் அடுத்த ஆண்டு அவளைத் திருமணம் செய்தாலும், அவன் மேற்படிப்புக்காக செல்லும்போது அவள் படிப்பைத் தொடரலாமே. பிள்ளை களைப் பற்றி பிந்தி யோசிக்கலாமே. நெற்றியில் பொட்டு இல்லை. அது போதும். அம்மா, அப்பாவை சரி செய்துவிடலாம்.

‘‘நம்ம ராஜனோட தங்கச்சிடா.’’ சேகரின் இதயக் கவிதையை எக்ஸ்ரே கண்களால் வாசித்தவன் போல குருநாதன் ஒத்துப்பாடினான். செல்வசேகர் தனது கிளாஸ்மேட் ராஜனுடன் நெருங்கிப் பழகத் துவங்கினான். அவனது வீட்டிற்கு அவ்வப்போது செல்லத் துவங்கினான். லைலாவுடன் பேசக் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் தழுவிக்கொண்டான். அழகில் ஐஸ்வர்யா ராய் தோற்றுப்போவாள். வாயைத் திறந்தால் லதா மங்கேஷ்கரோ என ஐயம் தோன்றும். தேனொழுகப் பேசுவாள். எத்தனை அழகிய வாய்மொழி! எத்தனைப் பண்பு!

பெற்றோரின் சந்தேகங்களையெல்லாம் திருப்திகரமாய்த் தீர்த்து வைத்தான். காதல் மொட்டுவிட்டது.

அன்றொரு நாள்... ராஜனின் வீட்டில்...

சேகரும் ராஜனும் முன்னறையில் உட்கார்ந்து அளவளாவிக்கொண்டி ருந்தனர். சேகர் வந்தது லைலாவுக்குத் தெரியாது. சேகரின் கண்கள் லைலா எப்போது உள்ளறையிலிருந்து வெளியே வருவாளென்று எதிர்நோக்கியிருந்தது.

பணிப்பெண் இரண்டு கோப்பைத் தேநீரை அவளுக்கும், அவளது அம்மாவிற்கும் எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். அடுத்த விநாடி...

மடைதிறந்தது போன்ற லைலாவின் ஏச்சுக்கள் சரமாரியாக கதவு வழியாக அம்புகள் போல் சேகரின் செவிகளில் பாய்ந்து புண்ணாக்கின.



‘‘ஏண்டி, அறிவில்லையா உனக்கு? பார்த்து வரத் தெரியாதா?... மே,.... ளே. டீயைக் கொட்டி டிரஸ்ஸை பாழாக்கிவிட்டாயே... னே...’’ சுமார் ஐந்து நிமிடங்கள் தாயும் மகளும் இந்தப் பத்திரிகையில் எழுதக்கூடாத வார்த்தைகளால் அவளைத் தாக்கினர். கண்களைத் துடைத்துக்கொண்டே அந்த வாயில்லாப் பூச்சி வெளியேறியது. ஐந்து வருடங்களில் தன் வீட்டில் கேட்டிராத கெட்ட வார்த்தைகளை ஐந்தே நிமிடங்களில் கேட்டுவிட்டான் செல்வசேகர். தன் வீட்டில் பணிப்பெண்ணை ‘‘அக்கா’’ என்று கூப்பிடப் பழக்கப்பட்டிருந்த சேகருக்கு இது விநோதமாயிருந்தது. இவள் பெண்ணா, பேயா என ஐய முற்றான். பெற்றோர் கேட்ட சில கேள்விகளின் கருத்தாழம் இப்போதுதான் புரிந்தது அவனுக்கு.

‘‘என்னடா கல்யாணம், கல்யாணம்னு ஒத்தக் காலில் தை தைன்னு குதிச்ச, இப்ப கப்சுப்னு இருக்கியே, என்ன விஷயம்?’’ அம்மா கேட்டார்கள்.

‘‘அதுக்கு இப்ப என்னம்மா அவசரம்? மெதுவாப் பாருங்க.’’ விழித்தனர் பெற்றோர்.

## ஆசிரியரது பிற நூல்கள்—

- ❒ *அவள் தீர்மானங்கள்*
- ❒ *இயேசுவின் பின்னே...*
- ❒ *உலகில் உத்தமி*
- ❒ *குடும்பமே குடும்பம்!*
- ❒ *குதூகலக் கிறிஸ்தவம்*
- ❒ *சாத்தானுக்கு டாடா*
- ❒ *தெபொராளே, விழித்தெழு!*
- ❒ *தேவனே, நான் உமதண்டையில்...*
- ❒ *பயனுள்ள பாத்திரம்*
- ❒ *பறக்கும் பாவையர்*
- ❒ *12 பொன் மாதங்கள்*
- ❒ *மண்ணிலே வெண்ணிலா*
- ❒ *முன்னேறும் கிறிஸ்தவன்*
- ❒ *வயது பதினாறிருக்கும்!*
- ❒ *வாலிப உலகம்*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் உண்டு.

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road**
**Chintadripet**
**Chennai 600 002, India**
*Tel: 044-28450411*
*<bymliterature@vsnl.net>*



***கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற***
***இன்றே வாசியுங்கள்...***

**ஆசீர்வாதம்**

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ. 50/–
ஆயுள் சந்தா ரூ. 500/–

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

Blessing Youth Mission
8 Church Colony
Vellore 632 006, India

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❐

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *''ஆசீர்வாதம்''* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org